


## 1

ஒரேவினாடியில் நூற்றுக்கணக்கான கண்ணாடி டம்ளர்கள் மொசைக் தரையில் விழுந்து சிதறின மாதிரி ஆரவாரம். சீரான கைதட்டல், சந்தோஷ எம்பல்கள். உதட்டில் ஒட்ட வைத்த புன்னகைகள்.

புரபசர் ஆத்மாவும், அர்ச்சனாவும் மேடையேறினார்கள். மேடையைச் சுற்றி வியூகம் போட்டிருந்த பத்திரிகை நிருபர்கள் ஃப்ளாஷ் காமிராக்களை இயக்க செயற்கை மின்னல்கள் ஏராளமாய் தெறித்தன. பிரசிடெண்ட் ஹால் பூராவும் சரம் சரமாய் ஊதாவிலும், பச்சையிலும் கலர் பல்புகள் காய்த்து தொங்க, வெளியே ரோட்டோரமாய் கார்கள் மந்தை மந்தையாய் தெரிந்தன.

புரபசர் ஆத்மா மைக்கை கையில் ஏந்தினார். ஆத்மா நல்ல உயரம். தொண்ணூறு சதவிகித வழுக்கை. காதோரமாய்க் கொஞ்சம் நரை மயிர். வெள்ளி பிரேமிட்ட மூக்கு கண்ணாடிக்குள் பெரிதாய் தெரியும் விழிகள். நரையோடிய பிரஷ் மீசை. கருநீல நிற ஃபுல் சூட்டில் ட்ரிம்மாய் தெரிந்தார்.

''டியர் கலீக்ஸ், பம்பாயிலிருந்து என்னையும், என் மகள் அர்ச்சனாவையும் வரவழைத்து வரவேற்பு கொடுத்திருக்கிறீர்கள். நன்றி. கம்ப்யூட்டர் துறையில் ஈடுபட்ட அனைவருமே ஒரே இடத்தில் கூடிப் பேசுவது என்பது ஒரு ஆரோக்கியமான விஷயம். நான் தற்சமயம் புதிதாய் உருவாக்க ஆரம்பித்திருக்கும் ''கம்ப்யூட்டரைஸ்ட் ஆக்ஸியல் டோமோகிராபி' என்னும் கம்ப்யூட்டரைப் பற்றி ஒரு முப்பது நிமிடம் பேசிவிட்டு உங்களுடைய சந்தேகங்களுக்கு வருகிறேன்.''

ஆத்மா பேச ஆரம்பித்தார்.

டைப் செய்யப்பட்ட காகிதங்கள் அவர் கையிலே புரண்டு கொண்டிருந்தன.

ஹாலின் ஏறக்குறைய கடைசி சீட்களில் உடம்புகளைச் சாய்த்திருக்க புரபசர் ஜெக்நீலனும், அவருடைய அஸிஸ்டெண்ட் பிரவீனும் சிகரெட்

புகைக்காக வெளியிலே வந்தார்கள். முகங்களி
கோபம் படர்ந்திருந்தது.

"கிழவன் அசாத்தியப் பேர்வழி. கம்ப்யூட்டரை நமக்கு முன்னாடி பெத்துடுவான் போலிருக்கு." ஜெக்தீஸ் சொல்லிக் கொண்டே உதட்டுக்கு சிகரெ டைக் கொடுத்துவிட்டு கோட் பையில் லைட்டரை தேடினார்.

"காலை பேப்பரைப் பார்த்தீங்களா சார்? கம்ப்யூட்டர் இன்னும் ரெண்டே மாசத்துலே டெமான்ஸ்ட்ரேஷனுக்கு வந்துடுமாம். 'ஹிண்டு' விலே பேட்டி கொடுத்திருக்கு கிழம்."

லைட்டரைக் கிளிக்கி நெருப்பு ஜ்வாலையை உதிக்க வைத்து சிகரெட் தலையைப் பொசுக்கி அடர்த்தியாய்ப் புகைவிட்டார் ஜெக்தீஸ்

"கிழவன் ரெண்டு மாசத்துலே அந்த கம்ப்யூட்டரை டெமான்ஸ்ட்ரேஷனுக்கு கொண்டு வந்தால் நிச்சயம் கம்ப்யூட்டர் கவுன்சில் நேஷன அவார்டை அதுக்குக் கொடுத்திடும். சை!" எரிச்ச ஜெக்தீஸை தத்து எடுத்துக்கொண்டது.

"நாம எங்கேயோ தப்புப் பண்றோம் சார். எந்த சேனல்ன்னுதான் தெரியலை. எலக்ட்ரானி சர்க்யூட்ல பூராவுமே அற்புதமாக வேலை செய்யுது ஆனால ஃபைனல் சேனல்ல ரிசல்ட் கொலாப் ஆயிடுது."

"மைக்ரோ பிராஸஸர்ல எரர்ஸ் வர சான்ஸ் இருக்கு. நாளைக்கு ஒருதபா பிரிச்சு மேய்ஞ்சு ப்ரவீன்."

"ஸாரி ஸார்."

"இன்புட் டெர்மினல்ல எவ்வளவு வோல்ட்டே போகுது?"

"நார்மல் வோல்டேஜ் சார்..."

மௌனமாய்ப் புகைவிட்டார் ஜெக்தீஸ். நாற்ப வயதை அடுத்த மாதம் தொடப் போகும் ஜெக்தீ தலை நரைக்க ஆரம்பித்து டை அடித் தற்காலிகமாய் அதன் மானத்தைக் காப்பாற் முயற்சித்தார். மீசையை மெலிதாய் ஜாக்கிர உணர்வோடு செதுக்கியிருந்தார்.



"எக்ஸ்க்யூஸ்மி சார். குட் யூ கிவ் மீ யுவர் லைட்டர் ப்ளீஸ்..." தன் முதுகுக்குப் பின்னால் குரல் கேட்டுத் திரும்பினார். ஜெக்தீஸ். வலது தோள்பட்டையில் யாஷிகா காமெரா தொங்கிக் கொண்டிருக்க, இடது கை விரல்களில் சிகரெட்டோடு நின்றிருந்தான் ஜவஹர். சந்தன வண்ண சஃபாரியில் எடுப்பாய்த் தெரிந்தான்.

"நீங்க பிரஸ்ஸிலிருந்து வர்றீங்களா?"

"ஆமாம்."

"எந்த மாகஸின்?"

சிரித்தான் ஜவஹர்.

"ஒரு குறிப்பிட்ட எந்தப் பத்திரிகைக்கென்றும் நான் ஒர்க் பண்றதில்லை. நான் ஒரு பிரைவேட் பிரஸ் போட்டோகிராபர். எந்தப் பத்திரிகைக்கு வேண்டுமானாலும் என்னோட காமெரா பிளாஷ் அடிக்கும். மை தனை ஐ நோ யுவர் குட் நேம் ப்ளீஸ்?"

"புரபசர் ஜெக்தீஸ்!"

"ஐ யாம் ஜவஹர். க்ளாட் டு மீட் யூ ஸார்!"

"ஹி ஈஸ் மை அஸிஸ்டெண்ட் பிரவீன்.."

பிரவீனின் கையைப் பற்றிக் குலுக்கினான் ஜவஹர். பிரவீன் கட்டாயமாய்ப் புன்னகைத்தான். ஜவஹர் ஜெக்தீஸ் பக்கமாய்த் திரும்பினான்.

"நீங்களும் கம்ப்யூட்டர் கன்வர்சன்ல இருக்கீங்களா சார்?"

"உம்..."

"புரபசர் தயாரிக்கப் போகிற இந்த டோமோகிராபி மைக்ரோ போட்டோ கம்ப்யூட்டர் சாத்தியமா சார்?"

"சாத்தியம்தான்."

"எனக்கென்னமோ டவுட்டா இருக்கு ஸார். ஒரு கைரேகைப் பதிவை வெச்சிட்டு அந்த கைரேகைப் பதிவுக்கு காரணமானவரை போட்டோவா வெளியிலே துப்பற சாமர்த்தியம் ஒரு கம்ப்யூட்டருக்கு வருமா ஸார்?"

"வரும்."

பிரவீன் பேச்சில் குறுக்கிட்டான்.

''ஆத்மா ஆர்ட்டிகிளைப் படிச்சு முடிச்சுட்டார்லை, நாம உள்ளே போகலாம். கொஸ்சனிங் டைம்..'' பிரவீன் சொல்லப் பாதி சிகரெட்டை உயிரோடு எறிந்துவிட்டு உள்ளே போனார் ஜெகதீஸ். ஜவஹர், பிரவீன் தொடர்ந்தார்கள்.

ஆத்மா பேப்பர்களைச் சுருட்டிக் கொண்டிருந்தார், ''இந்த டோமோகிராபி கம் அவுட்புட் மைக்ரோ போட்டோ கம்ப்யூட்டரைப் பற்றி சந்தேகங்களை வரவேற்கிறேன். உங்களுடைய சந்தேகங்களை என்னோட டாக்டர் அர்ச்சனா க்ளாரிபை பண்ணுவாள்.''

ஓர் உற்சாகமான ஆரவாரம் எழுந்தது.

ஆத்மா தொடர்ந்து சொன்னார்: ''இந்தக் கம்ப்யூட்டரைப்பத்தின எம்ப்யூட் நாலெட்ஜ் அர்ச்சனாகிட்டேயிருக்கு. கம்ப்யூட்டரின் பேஸிக் யூனிட்ஸ் பூராவும் அவளுக்கு அத்துப்படி. நான் இந்த நிமிஷம் செத்துப் போனாலும் அவளாலே அந்தக் கம்ப்யூட்டரை உருவாக்க முடியும்... நவ் யூ மே ரைஸ் த கொஸ்டியன்ஸ்...''

ஒரு தாள லயமான கைதட்டலோடு ஆத்மா தன் இருக்கைக்குத் திரும்ப அர்ச்சனா எழுந்தாள். (கையோடு கையாய் வர்ணித்து விடலாம்.)

அர்ச்சனாவுக்கு செண்பகப்பூவின் உள் மடிப்பு நிறம். அஜந்தாச் சித்திரத்தைப் பெயர்த்த மாதிரி உருவம். கண்களில் காந்த மண்டலம் தெரிந்தது. சதைப் பிடிப்பான சின்ன உதடுகளில் ஆரஞ்சு நிறம் உறைந்திருந்தது. மோவாயிலும், கன்னக்கதுப்புகளிலும் ஒரு அசாத்திய மினுமினுப்பு ஒளிந்திருந்தது. மார்புகள் சேலைக்கட்டை மீறி புஷ்டியாய் தெரிய, நடையின் அதிர்வில் செழிப்பான பின்பக்கங்கள் ரம்யமாய் அசைந்தன.

மைக்கை எடுத்துக் கொண்டாள் அர்ச்சனா. உதடுகளை மெலிதாய் ஈரப்படுத்திக் கொண்டாள். பேச ஆரம்பித்தாள். குரலில் பனியின் சிரிப்பு கூடவே ஓடி வந்தது.

''இந்த டோமோகிராபி கம் அவுட்புட் மைக்ரோ போட்டோ கம்ப்யூட்டர்தை அற்புதமான உருவகம்



ஒரு மனித மூளைக்குரிய ஆற்றலோடு செயல்படும் அற்புதம் அது. கம்ப்யூட்டரின் கன்வர்ஷன் ஏறக்குறைய முடிந்து விட்டது. சில நுண்ணிய குழப்ப முடிச்சுகள் மட்டுமே அவிழ்க்கப்பட வேண்டும். ஃபினிஷிங் ஸ்டேஜ்... இன்னும் இரண்டே மாதத்தில் கம்ப்யூட்டரின் டெமான்ஸ்ட்ரேஷன் ஐ.ஜி.க்களின் முன்னிலையில் பம்பாய் மெட்ரோ ஹாலில் நடத்தப் போகிறோம்.''

முன்வரிசை வழுக்கைத் தலைகள் கைகளைத் தட்டின.

வழுக்கைத் தலைகளில் ஒன்று எழுந்து ஆங்கிலத்தில் ஒரு கேள்வியை எழுப்பியது. ''கம்ப்யூட்டரைஸ்ட் ஆக்ஸியல் டோமோ கிராபி-ஐ மீன்... 'தேட்' என்கிற சாதனம் உயிரோடு இருக்கும் ஒரு மனிதரை முழுமையாக வைத்துக் கொண்டே அவருடைய குறுக்கு வெட்டுத் தோற்றங்களை காட்டக்கூடியது. இந்தச் சாதனம் டாக்டர்களுக்கு மட்டும் பயன்படக்கூடியது. இதை எந்தவகையில் கைரேகைப் பதிவைக் கொடுத்தால் கைரேகைக்குரிய நபரை போட்டோவாய் வெளியேக்கக்குகின்ற சாதனமாய் மாற்றப் போகிறீர்கள்?''

கேள்வியைக் கேட்டு புன்னகைத்தாள். சரளமான ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்தாள். ''வெறும் டோமோகிராபியை மட்டுமே நாங்கள் பயன்படுத்தப் போவதில்லை. இதில் பியோரிபேக்டரை இணைக்கப் போறோம். டைனமிக் ஸ்கோர் அண்ட் ரீ கன்ஸ்ராக்டர் ஒரு யூனிட்டை செயல்படுத்தப் போகிறோம்..''

''இது சாத்தியமா? ரிசல்ட் புரூட்ஃபுல்லா வந்திருக்கா மிஸ் அர்ச்சனா?...''. இன்னொரு வழுக்கை எழுந்தது.

மெள்ள நகைத்தாள் அர்ச்சனா. ''நான் முன்பே சொன்னேன். கம்ப்யூட்டர்கன்வெர்ஷனில் இன்னும் சில குழப்ப முடிச்சுகள் இருக்கின்றன. அந்த முடிச்சுக்களையும் களையக் கூடிய சாத்தியக் கூறுகளை எங்களால் உண்டாக்க முடியும். இந்த நிமிஷம்வரை எங்கள் சாதனம் திருப்திகரமாகவே

செயல்பட்டு வந்திருக்கிறது. இந்தப் போட்டோ வைப் பாருங்கள் ஜென்டில்மென்..''

தன் கையில் வைத்திருந்த பையில் இருந்து பாஸ்போர்ட் சைஸ் போட்டோ ஒன்றை உருவி, முன் வரிசைக்காரர்களிடம் நீட்டினாள் அர்ச்சனா.

வழுக்கை ஒன்று வாங்கிப் பார்த்தது.

எக்ஸ் குறிகளால் நிரப்பப்பட்ட பெண்ணின் படம்.

அர்ச்சனா தொடர்ந்தாள். ''அந்தப் படத்தில் இருக்கும் பெண்தான்தான். என்னுடைய கைரேகைப் பதிவைக் கொடுத்ததில் எங்களுடைய சாதனைய் வெளியே துப்பிய படம். கைரேகை ஒரு பெண்ணின் கைரேகை என்பதை உறுதிப்படுத்தி என்னை உருவாக்க முயற்சித்து எங்கேயோ தோற்றிருக்கிறது எங்கள் சாதனம். அந்தக் குழப்பத்தையும் இரண்டே மாதத்தில் சரி செய்து விடுவோம் ஜென்டில்மென்...'' அர்ச்சனா பேசி முடிக்க.

அரங்கில் கைதட்டல் பிய்த்தது.

''எனி மோர் கொஸ்சன்ஸ்?''

மௌனம் நிலவிக்கொள்ள எல்லோரும் அர்ச்சனாவையே பார்த்தார்கள். அர்ச்சனா மறுபடியும் கேட்டாள். ''எனி மோர் டவுட்ஸ்?''

ஜவஹர் அரங்கின் ஓரச் சீட்டிலிருந்து மெல்ல எழுந்து நின்றான். ''மிஸ். இந்தக் கேள்வி உங்களுக்கு சில்லித் தனமாய் படலாம். ஆனால் என்னால் அந்தக் கேள்வியைக் கேட்காமல் இருக்க முடியவில்லை.''

''ம்.. கேளுங்கள்..'' என்று சொன்ன அர்ச்சனா ஜவஹரை ஆழ்ந்து பார்த்தாள். அலட்சியமாய் யாஷிகா காமெராவைத் தோளில் தொங்கவிட்டபடி ஆறடி உயரத்தில் ஒரு ஹிந்திப்பட ஹீரோ மாதிரி நின்றிருந்த தோற்றம் அவளுக்குப் பிடித்திருந்தது.

ஜவஹர் தன் கேள்வியை எழுப்பினான்.

''மிஸ், கொலை நடந்த இடத்தில் கிடைக்கக் கூடிய கைரேகைப் பதிவுகளை கம்ப்யூட்டரிடம் கொடுத்து குற்றவாளியின் புகைப்படத்தை வாங்குவது ரியலி இட் வில்பி பென்டாஸ்டிக். பட்...



இந்தச் சாதனை நடைமுறைக்கு வந்தால் கொலை செய்பவர்கள், கொள்ளை அடிப்பவர்கள் ஜாக்கிரதை உணர்வோடு செயல்பட ஆரம்பிப்பார்களே! கைரேகைப் பதிவுகள் கிடைத்தால் தானே உங்களுடைய கம்ப்யூட்டருக்கு வேலை? குற்றவாளிகள் தங்களுடைய கைரேகைப் பதிவுகளை விட்டுச் செல்லாமல் இருந்தால் உங்களுடைய கம்ப்யூட்டர் எந்த வகையில் அந்தக் குற்றவாளியைக் கண்டுபிடித்துத் தரப்போகிறது?''

அரங்கில் சிரிப்பொலி பரவியது.

சிரிப்பொலி அடங்கும்வரை காத்திருந்த அர்ச்சனா ஒரு முழுமையான புன்னகையோடு ஜவஹரைப் பார்த்தாள். ''கைரேகைப் பதிவுகள் இல்லாமல் எங்களுடைய சாதனம் ஒரு குற்றவாளியைக் கண்டு பிடிக்குமானால் நம் நாட்டுக்குப் போலீஸ் என்று ஒன்று தேவையில்லை. போலீஸ் துறைக்கு ஒரு துணைவனாக செயல்படத்தான் எங்களுடைய சாதனத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறோமே தவிர, போலீஸாகவே செயல்பட அல்ல...''

அர்ச்சனாவின் பதிலில் அரங்கம் அதிர்ந்தது.

மெல்ல நடையிட்டுத் தன் இருக்கைக்குத் திரும்பினாள் அர்ச்சனா. செமினாரை ஏற்பாடு செய்திருந்தவர்கள் நன்றி கூறி, 'ஜனகணமன' பாடி கூட்டத்தைக் கலைத்தார்கள்.

ஆத்மா எல்லோரிடமும் கை குலுக்கிக் கொண்டிருக்க- அர்ச்சனா ஜவஹரைத் தேடினாள்.

கும்பலில் அவனுடைய அடர்த்தியான கிராப் தலை பளிச்சென்று தெரிய அவனைப் பார்த்தாள். அவள் தன்னைப் பார்ப்பதை உணர்ந்த ஜவஹர் ஒரு சக போட்டோகிராபரிடம் 'பிரதாப் ராதிகா' திருமண விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தவன்- அவரை அப்படியே நழுவவிட்டு அர்ச்சனாவை நோக்கி வந்தான். நடையில் துள்ளல் பரவியிருந்தது.

''நான் கேட்ட கேள்வியைப் பத்தி என்ன நினைக்கறீங்க மிஸ்?''

அர்ச்சனா தன் கையிலிருந்த பூப்போட்ட அந்தச் சின்னக் கைக்குட்டையால் உதடுகளை ஒற்றிக்

கொண்டு சிரித்தாள்.

''சில பேர் கேள்விகளைப் புத்திசாலித்தனமாக கேட்பாங்க. சிலபேர் பைத்தியக்காரத்தனமாக் கேட்பாங்க...''

''நான் எந்த ரகம்?''

''நீங்க ரெண்டு ரகமுமே இல்லை. மூணாவது ரகம்...''

''மூணாவது ரகமா?''

''ம்... கேள்வி புத்திசாலித்தனமாகவும் இல்லை, பைத்தியக் காரத்தனமாகவும் இல்லை. தர்ம சங்கடமாயிருந்தது.''

''ஸாரி. மிஸ்!''

''எதுக்கு ஸாரி?''

''மிஸ்டேக்கு ஸாரிதானே சொல்லணும்: வேட்டியைச் சொல்ல முடியுமா?''

''அறுவை ஜோக். சிரிக்கிறேன்.'' என்று கிழ்ப் பற்கள்- நெருக்கமாய்க் கட்டப்பட்ட மல்லிகைச்சரம் மாதிரி தெரிய சிரித்தாள் அர்ச்சனா.

''ஃப்யூ செகண்ட்ஸ் அந்தச் சிரிப்பை அப்படியே முகத்திலே வெச்சிக்குங்க. ஒரு ஸ்நேப் பண்ணிக்கிறேன். ப்ளீஸ்!''

அவளுடைய வேண்டுகோளில் இருந்த கெஞ்சல் அவளை அப்படியே சிரிக்க வைக்க, ஜவஹர் யாஷிகாவை நெஞ்சில் ஊஞ்சலாட விட்டுக் கிழ்ப் பார்வை பார்த்து ஃப்ளாஷை மினுக்கினான்...

''தாங்க் யூ''

கும்பலோடு கும்பலாய் வெளியே வந்தார்கள்.

''உங்களுக்கு அபாரமான மூளை. நீங்க கம்ப்யூட்டரைப் பத்தின கேள்விகளுக்கு டெக்னிகலா கொடுத்த பதில்களைக் கேட்டு ஹாலிலே இருந்தவங்க பூராவுமே அசந்து போய் உட்கார்ந்துட்டாங்க. உங்களைப் பத்தின ஒரு பேட்டி கட்டுரையை எங்க பத்திரிகையிலே போடலாமா மிஸ் அர்ச்சனா?''

''நீங்க பிரஸ் ரிப்போர்ட்டரா?''

''ஆமாம்.''

''என்னால நம்ப முடியலை...''



''எதனால நம்ப முடியலைன்னு சொல்றீங்க?''

''பிரஸ் ரிப்போர்ட்டர்ஸ் பெரும்பாலும் அம்பது அறுபது வயது தாண்டின கிழங்களாகத்தான் இருப்பாங்க. நீங்க ஒரு சினி ஆக்டர் மாதிரி இருக்கீங்க...''

''தாங்க் யூ ஃபார் யுவர் காம்ப்ளிமெண்ட். நீங்க கேட்காததுக்கு முன்னாலேயே என்னைப் பத்தின விபரத்தை சொல்லிடட்டுமா மிஸ் அர்ச்சனா?''

புரபசர் ஆத்மா இன்னமும் அவர் வயதையொத்த நரைத்தலை ஆசாமிகளுடன் கைகளைக் குலுக்கிக் கொண்டிருந்தார். சரமாரியான ஆங்கிலத்தில் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்.

''என் பெயர் ஜவஹர். டேட் ஆஃப் பர்த் 30-3-1966. அப்பா, அம்மா வைகுண்டத்திலே இருக்காங்க.''

''அடடே.... ரெண்டு பேருமே இறந்துட்டாங்களா?''

''நீங்க தப்பா புரிஞ்சுகிட்டீங்க மிஸ் அர்ச்சனா. என்னோட அப்பாவும் அம்மாவும் உயிரோடத்தான் இருக்காங்க. சேலத்துக்குப் பக்கத்திலே வைகுண்டம்ன்னு ஒரு ஊர் இருக்கு. அங்கேதான் இருக்காங்க.''

''ஸாரி மிஸ்டர் ஜவஹர். ம். அப்புறம் உங்க பயோ டேட்டாவைச் சொல்லுங்க.'' கும்பல் வெகுவாய் கலைந்து போயிருக்க சுலபமாய் பிரஸிடெண்ட் ஹாலின் வராந்தாவுக்கு வந்தார்கள் ஜவஹரும் அர்ச்சனாவும்.

''இருபத்தியேழு இன்டர்வியூக்களுக்குப் போய் 'உலகத்தின் மிகப் பெரிய நீர்வீழ்ச்சி', 'உலகத்தின் மிக ஆழமான சமுத்திரம்,' 'இரண்டாவது பானிபட் யுத்தம் நடந்த வருஷம்.' 'மகாத்மா காந்தியின் பிறந்தநாள்.' 'தாஜ்மகாலைக் கட்டியவர் பெயர்,' 'ஹேமமாலினியின் குழந்தை பெயர்.' எல்லாவற்றையுமே சரியாச் சொல்லியும் வேலை தராததினாலே வேற வழியில்லாம இந்த போட்டோகிராபியைக் கத்துக் கிட்டேன். இந்தத் தொழில் ஒழுங்கா சோறு போடுது.''

''நீங்க ரொம்பவும் ஜோவியாப் பேசறீங்க. மிஸ்டர் ஜவஹர்.''

சிரித்தான் ஜவஹர். ''நான் சிரித்து இப்படிப் பேசுவது உங்களுக்குப் பிடிச்சிருக்கா மிஸ் அர்ச்சனா?''

''ரொம்ப...''

''அர்ச்சனா!'' கைகுலுக்கி களைத்து சோர்வாய் கூப்பிட்டபடியே புரபசர் ஆத்மா வந்தார். ''புறப்படலாமா?''

''அப்பா, ஒரு நிமிஷம்! இவர் மிஸ்டர் ஜவஹர்- போட்டோகிராபர். பிரஸ் ரிப்போர்ட்டர்.''

''கடைசியா ஒரு கேள்வியைக் கேட்ட யங் சேப் இவர்தானே?

''எஸ் புரபசர் ஸார்,'' என்றான் ஜவஹர். புன்னகையோடு.

ஆத்மா சிரித்தார். ''மிஸ்டர் ஜவஹர், மனுஷங்களுக்கு எவ்வளவுதான் வசதியும், சௌகரியமும் வரட்டும். அதுக்கு மேலே வசதியைத் தேடுவாங்க. அந்த அடிப்படையிலே எழுந்ததுதான் உங்க கேள்வி.'

''ஸார், உங்க கம்ப்யூட்டரைப் பற்றின ஆர்ட்டிகிள், உங்க டாட்டர் பேட்டி இரண்டையுமே எங்க பத்திரிகையிலே போட விரும்பறோம். நீங்க ஒரு டயம் ஃபிக்ஸ் பண்ணிக்கொடுத்தா நான் வர்றேன். நீங்க எங்கே ஸார் ஸ்டே பண்ணியிருக்கீங்க?''

''போல்ஸ்டார் ஓட்டல்,'' என்றாள் அர்ச்சனா.

''நான் எப்போ வரட்டும்?''

''நாளைக்குச் சாயந்தரம் ஆறு மணிக்கு வாங்க. தர்ம சங்கடமான கேள்விகளோடு வராதீங்க.'' என்று அர்ச்சனா சிரித்தாள்.

''ஸார் ஓட்டலுக்குப் போக கார் ரெடி.'' விழாவை ஏற்பாடு செய்திருந்தவர்களில் ஒருவர் பவ்யமாய் வந்து சொல்ல, ஆத்மா ஜவஹரின் கையைப் பற்றி உற்சாகமாய்க் குலுக்கிவிட்டு புறப்பட்டார்.

அர்ச்சனா சிநேகபாவமாய் ஜவஹரைப் பார்த்தாள்.



சிரிப்போடு நகர்ந்தாள். ஜவஹர் ஸ்கூட்டரை நோக்கிப் போனான்.

அரையிருட்டில் பிரஸிடெண்ட் ஹாலின் வராந்தாவின் கோடியில ஒரு குரோட்டன்ஸ் செடிக்குப் பின்னால் கைகளில் புகையும் சிகரெட்டோடு நின்றிருந்த புரபசர் ஜெக்தீஸும், பிரவீனும் காரில் ஏறிக் கொண்டிருந்த அர்ச்சனாவையும் புரபசர் ஆத்மாவையும் பார்வையால் அளந்தார்கள்.

''பிரவீன்!''

''ஸார்!''

''இன்னும் ஒரே மாசத்துலே நாம நம்ம கம்ப்யூட்டர் கன்வர்ஷனை முடிக்கப் போறோம்.''

''எப்படி ஸார்?''

''எப்படியாவது முடிக்கணும்.''

''ஸார். ஆத்மா அவங்க கம்ப்யூட்டர் கன்வர்ஷன்ல ஃபினிஷிங் ஸ்டேஜ்ல இருக்கார். நாம் இன்னும் அரிச்சுவடி ஆரம்பத்துலே இருக்கோம். டெக்னிக்கலா நாம ரொம்ப பின் தங்கியிருக்கோம். டி.எஸ்.ஆர். யூனிட்டோட பங்ஷன் புவர்.''

''தெரியும். அதையெல்லாம் சரிப்படுத்தி விடலாம்.''

''நீங்க எந்தத் தைரியத்துலே சொல்றீங்க சார்?''

''அர்ச்சனா இருக்கிறாங்கிற தைரியத்திலே..''

''ஸார்! அர்ச்சனா ஆத்மாவோட டாட்டர்.''

''இனிமே அர்ச்சனா நமக்குச் சொந்தம்...!

''எப்படி ஸார்?''

''சொல்றேன் வா. மொதல்ல காரை எடு.''

## (2)

**கா**ந்திபுரம் ஏழாவது கிராஸ்.

சாலையின் ஏறக்குறைய கடைசியில் தனியாய் நின்றிருந்த அந்தக் காவி வண்ண பங்களா முன் ஆட்டோவை நிறுத்தி இறங்கிக் கொண்டாள் உதயா. மீட்டரைப் பார்த்துப் பணத்தைக் கொடுத்துவிட்டு 'எலக்ட்ரோ மெக்கானிகல் கம்ப்யூட்டரிங் சர்வீஸ்'

என்ற பெயர்ப் பலகையைத் தாங்கிய வளைவுக்குக் கீழே குனிந்து போனான்.

PUSH என்ற கண்ணாடிக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தான். ஏ.சி.யின் குளிர் அவனை திடீரென்று வியாபித்தது.

''குட் மார்னிங் சார்.''

ஸ்பேர்ட் புரோக்ராம் ஒன்றை ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்த புரபசர் ஜெகதீஸ் தலை நிமிர்ந்தார். உதயாவைப் பார்த்ததும் அதே வினாடி கையில் இருந்த வாட்சையும் பார்த்தார்.

''கம்ப்யூட்டர்களைத் தயாரிக்கிற கம்பெனியிலே ஒரு ஸ்டெனோவா நீ ஒர்க் பண்ணிட்டிருக்கே. பங்க்சுவாலிடியை கீப் அப் பண்ண மாட்டேங்கறியே உதயா?''

''ஸாரி ஸார். பஸ் கிடைக்கலை.''

''வாரத்துலே நாலு நாள் இதே காரணத்தைச் சொல்றே. பஸ் வர்ற நேரம் பார்த்து பஸ் ஸ்டாப்புல இருக்கணும். நம்ம இஷ்டத்துக்குப் பஸ் வராது.''

உதயா பேசாமல் தரையில் விரித்திருந்த லாமனேட் பூக்களைப் பார்த்துக் கொண்டிருக்க- ஜெகதீஸ் பைலை மேஜை மேல் எறிந்துவிட்டு எழுந்தார்.

''நீ தனியா ஹாஸ்டலில் தங்கியிருக்கிற பெண். அப்பா, அம்மா, புருஷன், குழந்தைகள்னு பிடுங்கல்கள் இல்லாத வாழ்க்கையைச் சுலபமா எடுத்திட்டிருக்கிற பெண். உனக்கு எப்படி ஆபீஸ் வர லேட்டாகும்?''

''ஸாரி ஸார். இனிமே நேரத்துக்கு வந்துடறேன்.''

''கோ அண்ட் டேக் யுவர் சீட்.''

உதயா ஒரு நிம்மதியான பெருமூச்சோடு தன்னுடைய இருக்கையை நோக்கி நடந்தாள். ஜெகதீஸ் பின்னாலேயே வந்தார். சிரித்தபடி சொன்னார்.

''நம்ம கம்பெனியிலே இருக்கிற ஒரே ஸ்டாப் நீதான். நீயே இப்படி லேட்டா வந்தா எப்படி உதயா?''

''இனிமே லேட் ஆகாது ஸார். ஒன் அவர் முன்னாடியே வந்துடறேன்.''



''தட்ஸ் குட்.''

''ஏதாவது நோட்ஸ் எடுக்கணுமா சார்?''

''இப்போதைக்கு வேண்டாம் உதயா. அனலாக் கம்ப்யூட்டர் 'ப்ளோ சார்ட்' காப்பி ஒண்ணு வேணும். அதை முதல்ல எடுத்துக் கொடு.''

''தர்றேன் சார்..''

''நான் உள்ளே யூனிட் செக்கனுக்குப் போறேன். ப்ளோ சார்ட் ரெடியானதும் இன்டர்காமில் என்னைக் கூப்பிடு.''

''எஸ் ஸார்.''

ஜெகதீஸ் அந்த அறையின் கோடிக்கு நடந்து போய், அதன் மூலையில் இருந்த கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனார்.

மெலிதான சோடியம் வேபர் விளக்குகளின் வெளிச்சத்தில் அந்த விஞ்ஞானக்கூடம் தெரிந்தது.

எல்லாமே கம்ப்யூட்டர்கள். இயந்திர மூளைகள். இயந்திர இதயங்கள். காட்ரேஜ் பீரோ சைஸில் வரிசையாய் நின்றிருந்தன. பெரும்பாலானவை டிஜிடல் கம்ப்யூட்டர்ஸ். ஒரு மில்லில், தொழிற்சாலையில், வேலை பார்க்கும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை ஆல்பபெடிக் ஆர்டரில் வரிசைப்படுத்தி, அவர்களுடைய அடிப் படைச் சம்பளம். பி.எஃப்., வாங்கிய அட்வான்ஸ் பிடித்தம். லோன் இன்ஸ்டால்மெண்ட், இ.எஸ்.ஐ. எல்லாம் கணக்குப் பார்த்து கடைசியில் கைக்கு வர வேண்டிய ரூபாய் மதிப்பை பைசா சகிதம் துல்லியமாய் அட்டையில் அடித்து யூனிபார்மாய் வெளித்தள்ளும் கம்ப்யூட்டர்கள், பட்டாஸாய் வெடிக்கும் டெலி பிரிண்டர் மாதிரியான அமைப்புகள்.

ஜெகதீஸ் நடந்தார்.

CENTRAL PROCESSING UNIT தகவல் பலகை தெரிய அதற்குப் பத்தடி தொலைவில் பிரவீன் அந்தச் சிக்கலான கம்ப்யூட்டரின் சர்க்யூட் அமைப்பில் ஈடுபட்டிருந்தான்.

''பிரவீன்!''

''ஸார்..'' வியர்வையைத் துடைத்துக் கொண்டு எழுந்தான். ஜெகதீஸ் அவனை நெருங்கியபடி

கேட்டார். Diagnostic பார்த்தியா?''

''பார்த்தேன் ஸார்...''

''என்ன சொல்லுது?''

''எரர்ஸ் ஒண்ணுமே வரலை.''

''Data Processing எப்படியிருக்கு?''

''அதிலும் சிக்கல் இல்லை ஸார்.''

''பின்னே எங்கே நாம் தப்புப் பண்றோம்? ஃபிங்கர் பிரிண்ட்ஸ் குடுத்தா உருவம் தெளிவில்லாமே போட்டோ டெவலப் ஆகுது. அந்த ஆத்மாவுக்கு போட்டோகிராபி க்ளியராகக் கிடைச்சிருக்கு பார்த்தியா?''

''பார்த்தேன் சார்..''

''கொஞ்சம் தள்ளிக்க. நான் சர்க்யூட்டை ஒரு தடவை செக் பண்ணிப் பார்த்துடறேன்.'' - ஜெக்தீஸ் மண்டியிட்டு அந்தக் கம்ப்யூட்டர் சாதனத்திற்கு முன்னால் உட்கார்ந்தார். ஈஸ்ட்மென் கலரில் நூற்றுக்கணக்கில் பிளாஸ்டிக் ஒயர்கள் பட்டை பட்டையாய் கம்ப்யூட்டரின் உடம்பு பூராவும் ஓடியிருக்க, 'Mechanical Relays' ஒரு விநாடியில் நூற்றில் ஒரு பங்கு நேரத்தில் ஒருமுறை எரிந்து அணைந்தன. -Integrated Circut-ல் ஒரே Chip-ல் பல டிரான்ஸிஸ்டர்கள் பொருத்தப்பட்டுக் குழப்பமாய்த் தெரிந்தன.

சர்க்யூட் அலகுகளைக் கையிலிருந்த ஸ்க்ரூ டிரைவரால் நோண்டிக் கொண்டே ஜெக்தீஸ் மெல்லிய குரலில் கேட்டார்.

''நேத்தைக்கு ராத்திரி 'De- Bugging' செய்து பார்த்தியா? ஏதாவது ரிபிட்டட் மெமோ வந்ததா பிரவீண்?''

''இல்லை ஸார்.''

''செமத்தியா எங்கோ தப்பு பண்றோம். ஆனா எங்கேன்னு மூளைக்கு உறைக்க மாட்டேங்குது. CHECK BIT, CIRCUIT AND, CIRCUIT NO, CIRCUIT OR எல்லாமே ஆரோக்கியமா இருக்கு. காமிரா யூனிட்டும் ஹெல்த்தியா இருக்கு..'' - பேசிய அதே நேரம்...

அருகிலிருந்த இண்டர்காம் 'ஙிஙிஙி' என்றது.



ஜெகதீஸ் எடுத்தார்.

மறுமுனையில் உதயா பேசினாள். ''ஸார் ப்ளோ சார்ட் ரெடி. வர்றீங்களா? இல்லை நானே கொண்டு வரட்டுமா?''

''ஒரு பத்து நிமிஷம் வெயிட் பண்ணு உதயா. நானே வர்றேன். நான் வருகிற வரைக்கும் அந்த சூப்பர் கால்குலேட்டர்ஸ் இன்வாய்ஸை டைப் பண்ணிவை.''

''ஓ.கே. சார்.''

இன்டர்காமை அணைத்துவிட்டு, நெற்றி வியர்வையோடு ப்ரவீனை ஏறிட்டார் ஜெகதீஸ்,

''ப்ரவீன்!''

''ஸார்...''

''இந்தக் கம்ப்யூட்டர் நமக்குத் தண்ணி காட்டுது. சூட்சுமம் எங்கியோ இருக்கு. அந்தச் சூட்சுமம் நமக்கு பிளாஷ் ஆகிறதுக்குள்ளே அந்த ஆத்மா கம்ப்யூட்டரை முடிச்ச நேஷனல் அவார்டைத் தட்டிட்டுப் போயிடுவான். நாம கொஞ்சம் அலர்ட்டா வேலை செய்யணும்.''

''எப்படி ஸார்?''

''அர்ச்சனா நமக்கு வேணும்.''

ப்ரவீகன் சிறிது அயர்ந்தான்.

''அவளைக் கூட்டிட்டு வந்து நம்ம கம்ப்யூட்டரைப் பார்க்கச் சொன்னால் டெக்னிக்கலா நம்ம கம்பெனிக்கு அது ஒரு டீமெரிட் மாதிரித்தான் சார்...''

''முட்டாள் மாதிரி உளறாதே. ப்ரவீன்! அந்த அர்ச்சனாவைப் போய்ப் பார்த்து கெஞ்சி அவளை இங்கே கூட்டிட்டு வரப் போறதில்லை என்னோட திட்டம்.''

''பின்னே?''

''அவளை இங்கே கட்டாயமாகக் கொண்டுட்டு வரப் போறோம். அந்த அழகான- அற்புதமான உடம்புல இருக்கிற- மூளையோட அமைப்புல உறைஞ்சி போயிருக்கிற டெக்னிகல் சூட்சுமத்தை மட்டும் எடுத்துக்கப் போறோம்.

''ஸார்...!''

''அர்ச்சனாவை 'Brain Extract' பண்ணப் போறோம்.''

''ஸார்...!''

''நான் யோசிச்சுப் பார்த்துட்டேன் ப்ரவீன். நமக்கு வேற வழியில்லை. நேத்தைக்கு ராத்திரி நான் தூங்கறப்போ மணி என்ன தெரியுமா? மூணு. உடம்பு பூராவும் ஒரே டென்ஷன். திப்பெட்டி மாதிரி ஒவ்வொரு டிஜிட்டல் கம்ப்யூட்டரையும் ஈஸியாப் பண்ணிடறோம். ஆனா அந்த TMPயை கன்வர்ஷன் பண்ண முடியலை.''

ப்ரவீன் வியர்த்துப் போய் ஜெகதீஸைப் பார்த்தான். உலர்ந்து போன குரலில் சொன்னான். ''ஸார்... அந்த BRAIN EXTRACT METHOD ஏறக் குறைய ஒரு கொலை செய்யற மாதிரின்னு சொல்லுவாங்க. வாஸ்தவமா சார்?''

''ம்... நீ இன்னும் அந்த ட்ரீட்மென்டைப் பார்த்ததில்லையே?''

''இல்லை சார்.''

''அர்ச்சனாவோட பயாலஜிகல் மெமரியை, எலக்ட்ரானிக் மெமரியா கன்வர்ட் பண்ணக்கூடிய மேக்னடிக் கோர் கம்ப்யூட்டர் யூனிட் நம்மகிட்டே இருக்கு. அதைத்தான் உபயோகப்படுத்தப் போறேன். ஒரு மணி நேரம் அர்ச்சனா நமக்குக் கிடைச்சா போதும் அவளோட டெக்னிகல் சூட்சுமம் பூராவும் Memory storage ல் ரிக்கார்ட் பண்ணிடலாம்.

''அது சாத்தியமா சார்?''

ஜெகதீஸ் சிரித்தார். ''நூறு பர்செண்ட் சாத்தியம், ட்ரையல் பார்க்கலாமா ப்ரவீன்?''

''ட்ரையலா?''

''ம்... ட்ரையல்தான். எம்.சி.சி. சரியா இயங்குதான்னு பார்க்க வேண்டாமா?'' மறுபடியும் சிரித்தார் ஜெகதீஸ்.

ப்ரவீன் உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டான்.

ஜெக்தீஸ் தொடர்ந்தார். ''ட்ரையல் பார்க்க யாராவது ஒருத்தர்- ஒரு உயிருள்ள உடம்பு தேவை.



''யார் ஸார்?''

''உதயா'' என்றார் ஜெகதீஸ்.

''ஸார்...!''

''பயப்படறியா ப்ரவீன்? அந்தப் பயத்தை முதல்ல உதறு! நீ எனக்கு அஸிஸ்டெண்டாக வந்து ஆறு மாசம்தான் ஆகுது. என்கிட்டேயிருந்து நீ நிறையக் கத்துக்கணும். இந்த எம்.சி.சி. எப்படி ஒருத்தரோட மூளையை வசப்படுத்தி அவளைப் பேச வைத்து அந்த விஷயங்களை மெமரி டிஸ்கில் சேகரிக்குதுன்னு நீ பார்க்க வேண்டாமா?''

''பார்க்கணும் சார்.''

''இன்னிக்கு சாயந்திரம் நாம் உதயாவைப் பயன்படுத்தப் போறோம். சாயந்தரம் ஆறு மணிக்கு மேல் எந்த அப்பாயின்ட்மென்டையும் வெச்சுக்க வேண்டாம். யூனிட்லேயே இரு.''

''உதயா இந்த ட்ரையலுக்கு ஒப்புக்குவாளா சார்?''

ஜெகதீஸ் புன்னகைத்தார். ''உயிரை விட யாராவது ஒப்புக்குவாங்களா ப்ரவீன்? அவளுக்கு இந்த எம்.சி.சி.யைப் பத்தி ஓரளவுக்குத் தெரியும். ட்ரையலுக்குட்பட்ட எந்த உயிருக்குமே ஒரு வாரந்தான்ங்கிற விஷயமும் அவளுக்குத் தெரியும். அதைப் பத்தின நோட்ஸை நிறைய தரம் டைப் பண்ணியிருக்கா..''

''பின்னே உதயாவை எப்படிச் சம்மதிக்க வைக்கப் போறோம் சார்?''

''அவளோட சம்மதத்தையெல்லாம் கேட்டிட்டிருக்க நேரம் இல்லை ப்ரவீன்! அவளுக்கே தெரியாம அவளைக் கொண்டுட்டு வரணும்.''

''எப்படி சார்?''

''சாயந்தரம் அஞ்சு மணிக்கு என்னோட ரூமுக்கு வா. சொல்றேன்.'' ஜெகதீஸ் சொல்லிவிட்டு தன் அறையை நோக்கி நடந்தார்.

ப்ரவீனின் இதயம் வேகமாய் அடித்துக் கொள்ள ஆரம்பித்தது.

## ③

புரபசர் ஜெக்தீஸ் பைப்பில் புகையிலையை அடைத்து, நெருப்பைக் காட்டி முதல் புகையைச் சோகையாய் வெளியிட்டார்.

அறைக்கதவு சப்திக்கப்பட-

''எஸ், கம். இன்,'' என்றார்.

பிரவீன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான்.

''வா பிரவீன்!''

''ஸார். உதயா புறப்படத் தயாராயிட்டிருக்கா. இருக்கச் சொல்லட்டுமா?''

ஜெக்தீஸ் அவசரக் குரலில் சொன்னார். ''வேண்டாம். அப்படியெல்லாம் சொன்னால், அவ சந்தேகப்பட ஆரம்பிச்சுடுவா. நான் அவளைக் கூப்பிட்டுப் பேசிக்கிறேன். நீ அதுக்குள்ளே ஒரு காரியம் செய்யணும்.''

''சொல்லுங்க சார்.''

''ஈதர் எவாப்ரேடிங் காஸ் ரூமுக்குப் போய், மெயின் குழாயோட ஒரு வால்வைக் கொஞ்சம் லூஸா வை.''

''ஸார்...''

''ரொம்பவும் அதிகமாத் திறந்துடாதே. வால்வைத் திறந்து விட்டுக் கதவை மூடிக்கிட்டு வந்துடு. நீ கம்ப்யூட்டர் யூனிட்டுக்குப் போயிடு. நான் இன்டர்காம்ல கூப்பிடும் போது வா. அதுக்கு முன்னாடி வந்துடாதே.''

''சரி...''

பிரவீன் வெளியேறினான்.

அவன் வெளியே போனதும் ஜெக்தீஸ் இன்டர்காமை உயிர்ப்பித்தார். ரிஸீவரை எடுத்தார். மெல்லிய குரலில் கேட்டார்.

''ஹலோ, உதயாவா?''

''எஸ் ஸார்.''

''புறப்பட்டுட்டியா?''

''ஆமா ஸார். டைம் ஈஸ் சிக்ஸ்..''



''ஒரு நிமிஷம் என்னோட ரூமுக்கு வந்துட்டுப் போறியா?''

''வர்றேன் சார்.''

ரிஸீவரை வைத்து இன்டர்காமை அணைத்தார். பைப்பில் அடர்த்தியாய்ப் புகைவிட்டபடி உதயாவிற்காகக் காத்திருக்க ஆரம்பித்தார்.

அடுத்த நிமிஷத்தின் ஆரம்பத்தில் உதயா உள்ளே நுழைந்தாள். முகம் கழுவியிருந்தாள். லேசாய் பவுடர் பூச்சும், வட்டப் பொட்டும் தெரிந்தன.

''வா உதயா. எனக்காக ஒரு சின்ன ஹெல்ப் செய்யணும். வில் யூ?''

''சொல்லுங்க ஸார்..''

''ஈதர் எவாப்ரேடிங் காஸ் ரூம்ல காஸ் பொஸிஷன் லெட்ஜர் இருக்கு. அதைக் கொஞ்சம் எடுத்துக் குடுத்திட்டுப் போயிடு. ஸாரி, டிஸ்டர்பிங் யூ.''

''பரவாயில்லை.'' உதயா புறப்படத் திரும்பினாள்.

''லெட்ஜர் ஸ்டூல் மேலதான் இருக்கும்.''

''சரி ஸார்.''

உதயா கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். மனசுக்குள் சின்னதாய் ஒரு கோப அலை அடித்தது. என்ன கம்பெனி இது? கஞ்சத்தனமான கம்பெனி? ஒரு கிளார்க் இல்லாமல், ஒரு ப்யூன் இல்லாமல்! சை! ஒண்டிப் பிசாசாய் எல்லாத்துக்கும் நான்தான்!'

ஈதர் எவாப்ரேடிங் காஸ் அறைக் கட்டிடத்தின் கடைசியில் இருந்தது. புராதன அறை. எந்நேரமும் நீர் கசியும் அறை. எப்போதாவது அபூர்வமாய் உள்ளே நுழையும் அறை.

அறையை நெருங்கினாள்.

கதவு சாத்தியிருந்தது.

ஒற்றைக் கதவைத் திறந்து கொண்டு உடலைக் குறுக்கி உள்ளே போனாள்.

ஏதோ பழ வாசனை குப்பென்று அடித்தது.

வாசனை, என்ன இது? நிதானிப்பதற்குள் நாசித் துவாரங்களில் மூச்சை அடைக்கிற மாதிரி ஏதோ ஒரு

நெடி. மூக்குப்பாதையில் ஏதோ காரமாய் இறங்கியது. கதவை நோக்கித் திரும்பி வருவதற்குள் கழுத்தை அச்சாகக் கொண்டு தலை சுற்ற ஆரம்பித்தது. தலைசுற்றலை சமாளித்து கதவை நோக்கிப் பாய்ந்தாள். மூடியிருந்த ஒற்றைக் கதவில் மோதிக் கொண்டு அறைக்குள் மல்லாந்தாள்.

''உதயா... உதயா...!''- புரபசர் ஜெகதீஸ் கத்திக் கொண்டே ஓடி வந்தார். கத்தினார். ''இந்தப் பிரவீன் ஹைலி இன்ஃபிஷியன்ட் பெல்லோ. கேஸ்பைப் வால்வை திறந்து விட்டுட்டே போயிருக்கிறான்!''

மயக்க நிலைக்குப் போய்க்கொண்டிருந்த உதயாவின் காதுகளில் ஜெகதீஸின் வார்த்தைகள் மெதுவாக போய் விழுந்தன. அடுத்து வந்த விநாடிகளில் பூரண மயக்கமானாள்.

ஜெகதீஸ் மெயின் காஸ் போர்டுக்குச் சென்று காஸ் வரும் குழாயின் பாதைக்கான ஸ்விட்சை அணைத்தார்.

முகத்தைக் கைக்குட்டையால் பொத்திக்கொண்டு அறைக்குள் நுழைந்து மல்லாந்திருந்த உதயாவின் தோளைப்பற்றி வெளியே இழுத்துப் போட்டார்.

அருகிலிருந்த ஜெனரேட்டர் ரூமுக்கு போய் அங்கிருந்த இண்டர்காமில் பிரவீனைக் கூப்பிட்டார்.

''காஸ் ரூமுக்கு வா பிரவீன்.. உதயா நமக்காகத் தயாராயிட்டா...''

''வர்றேன் ஸார்!''

ரிஸிவரை வைத்துவிட்டு மறுபடியும் உதயாவிடம் வந்தார் ஜெகதீஸ்.

உதயா கைகளைப் பரத்திக் கொண்டு லேசாகப் பிளந்த வாயோடு, கண்கள் செருகிய நிலையில் கிடந்தாள். கால்கள் ஒரே பக்கமாய் மடங்கியிருந்தன. கீழே விழுந்ததில் கை வளையல்கள் உடைந்திருந்தன. கன்னப் பரப்பில் கொஞ்சம் மண் அப்பியிருந்தது. பிரவீன் வேக வேகமாக வந்தான்.

ஜெகதீஸ் சொன்னார்: ''ப்ரவீன். இவளை நீ தூக்கிக்கிட்டு எம்.சி.சி. யூனிட்டுக்குப் போ. நான் முன்பக்கக் கதவை லாக் பண்ணிட்டு வர்றேன்.''



''எஸ் ஸார்..''

பிரவீன் ஒரு புஷ்பமாய் அவளைக் கைகளில் ஏந்திக் கொண்டு உள்ளேயிருந்த யூனிட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான். ஜெகதீஸ் முன்பக்கமாய் விரைந்தார்.

காம்பவுண்ட் கேட்டையும், முன்பக்க வாசல் கதவையும் பூட்டிக் கொண்டு உள்ளே வருகையில், டெலிபோன் கிர்ர்ர் கிர்ர்ர் என்றது.

நிதானமாய் நடந்துபோய் ரிஸீவரை எடுத்தார் ஜெகதீஸ்.

''ஹலோ, ஜெகதீஸ் ஸ்பீக்கிங்...''

மறுமுனையில் ஓர் ஆண்குரல்... ''ஸார் 'குட் ஐ ஸ்பீக் வித் மிஸ் உதயா?''

''யார் நீங்க?''

''என் பேர் ஆனந்த்.''

''நீங்க உதயாவுக்கு என்ன ஆகணும்?''

''ஸார்... நான் அவளுக்கு வேண்டியவன்..''

''நீங்க சொல்றது எனக்குப் புரியலே.''

''வேண்டியவன்னா, கணவனாக வேண்டியவன். புரிந்ததா சார்?

''ஓ! இன்றைய லவ்வர். நாளைய கணவனா?''

''அதே... கொஞ்சம் பேசச் சொல்றீங்களா ஸார்?''

''ஸாரி. உதயா இப்பத்தான் ஆபீஸ் விட்டுப் போனாள். ஒரு பத்து நிமிஷம் ஆகியிருக்கும்''

''தேங்க்யூ பார் யுவர் இன்பர்மேஷன். அவளை நான் நேர்ல பாத்துக்கறேன் ஸார்...''- மறுமுனையில் ஆனந்த் ரிஸீவரை வைத்து விட ஜெகதீஸும் தோள்களைக் குலுக்கிக் கொண்டே ரிஸீவரை வைத்தார்.

'அந்த அனாதைப் பறவைக்கு ஒரு உறவா?' ஸாரி உதயா அடுத்த ஜென்மத்தில் நீ காதலிக்கலாம்! கல்யாணம் பண்ணிக்கலாம். குடும்பம் நடத்தி குழந்தைகளைப் பெத்துக்கலாம். இந்த ஜென்மத்தில் இதெல்லாம் உனக்குக் கொடுப்பினையில்லை. இந்த மெமரி ரீகால் ட்ரீட்மெண்டுக்குப் பிறகு உனக்கு ஆயுள் ஒருவாரம்தான்.'

ஒரு நிமிஷ நடைக்குப் பின் ஜெக்தீஸ் யூனிட்டுக்குள் நுழைந்தார்.

நீண்ட மேஜையின் மேல் உதயா மல்லாந்திருக்க, அருகே பிரவீன் நின்றிருந்தான். அருகேயிருந்த எம்.சி.சி. யூனிட் தாரான மான சிவப்பு விளக்குகளோடு இயங்கக் காத்திருந்தன.

"ஏழு மணிக்குள் உதயாவை வெளியே அனுப்பிடணும் பிரவீன். அவளுக்கு எந்த உறவுமே இல்லைன்னு நினைச்சேன், புதுசா ஒரு உறவு முளைச்சிருக்கு. இந்த ரீகால் ட்ரீட்மெண்ட்டிலே உதயாவே எல்லாம் சொல்லுவா...."

ஏற்பாடுகளில் இறங்கினார் ஜெக்தீஸ்.

விமல்ஸ் ஹாஸ்டல்.

மரத்தடியில் ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு, விசிட்டர்ஸ் செல்லுக்குள் நுழைந்தான் ஆனந்த், என்கொயரி கௌண்டரில் விசாரித்தான்.

"மிஸ் உதயாவோட பேசணும். ஆபீஸ்லிருந்து வந்தாச்சா?"

"நாட் யெட்!" என்றாள் கௌண்டரில் உட்கார்ந்திருந்த பெண்.

"ஆபீசுக்குப் போன் பண்ணியிருந்தேன். ஆறு மணிக்கே ஆபீஸ் விட்டுப் போயிட்டதாகச் சொன்னாங்க."

"அப்போ வருவாங்க. கொஞ்சம் வெயிட் பண்ணிப் பாருங்க.."

ஆனந்த் அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்தான்.

**எம்**.சி.சி. யூனிட் 'ஹம்' என்ற ரிதத்தோடு இயங்க ஆரம்பித்தது.

அந்த இயந்திர சாதனத்துக்கு எதிரே- ஒரு அலுமினிய நாற்காலியில் உதயா உட்கார வைக்கப்பட்டிருந்தாள். தலை நேர்ப் பார்வையில் நிமிர்த்தப்பட்டிருந்தது. தலையின் இரண்டு பக்கங்களிலும் ஹெட்போன் மாதிரியான ஒரு சமாசாரம் பொருத்தப்பட்டிருக்க, நூற்றுக்கணக்கான ஒயர்கள் தலை பூராவும் மொய்த்திருந்தன.

எலந்தப்பழ சைஸில் இருந்த ஒவ்வொரு சிவப்பு விளக்கும் அணைந்து அதற்குப் பக்கத்தில் இருந்த



பச்சை விளக்கு உயிர்பெற ஆரம்பித்தது.

ஜெக்தீஸ் சொன்னார். "பிரவீன், உதயாவோட மூளைப் பகுதியில் பொருத்தப்பட்டிருக்கிற இந்த சர்க்யூட் தான் ரொம்பவும் முக்கியம். டென்ட்ரைட்டையும், ஆக்ஸானையும் ஆக்ரமிக்கிற சர்க்யூட் ஒவ்வொரு நரம்பின் சைனாப்ஸையும் தொடற சர்க்யூட். R.N.A. வை அதிகப்படுத்தற சர்க்யூட்டும் இதுதான்.

பிரவீன் உன்னிப்பாய் உதயாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். ஜெக்தீஸ் எம்.சி.சி. யூனிட்டைச் சுற்றி சுற்றி வந்து சில பட்டன்களைத் தட்டினார்.

சில நிமிஷ நேரங்களுக்குப் பிறகு-

உதயாவின் கண்ணிமைக் கால்கள் துடித்தன.

ஜெக்தீஸ் சந்தோஷித்தார்.

"பிரவீன், நவ் ஷி ஈஸ் ரெடி டு ஒர்க். அந்த SPEECH RECOGNITION டேப்பை ஸ்பீக்கர்ஸ்ல விடு.."

பட்டனைத் தட்டினான் பிரவீன்.

டேப் சுருள் ஒன்று மௌனமாய்ச் சுழல ஆரம்பித்தது.

உதயாவின் கண்ணிமைக்கால் துடிப்பது நின்றது. கண்களை மெல்ல மலர்த்தி நேர் பார்வையால் பார்த்தாள்.

உடம்பு நிமிஷத்திற்கொருமுறை உதறிக் கொண்டது.

ஜெக்தீஸ் உதயாவுக்கு எதிரில் நாற்காலியொன்றைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார். நிதானமான குரலில் பேச ஆரம்பித்தார்.

"உன்னோட பேரு?"

"உதயா..."- உதயாவின் உதடுகள் ஒரு கட்டளைக்குட்பட்ட மாதிரி இயங்கியது. கண்ணின் பாவைகள், அசையாமல் நின்றன.

"உனக்கு அப்பா அம்மா இருக்காங்களா?"

"இல்லை..."

ஜெகதீஸ் எழுந்து பிரவீனின் அருகே வந்தார். "பிரவீன், இப்போ உதயா பேசற வார்த்தைகள் எதுவுமே அவளோட தன்னுணர்வுக்குத் தெரியாது.

அவனோட மூளையில் பதிவாகியிருக்கிற எந்த
சின்ன விஷயமும் அவனுக்குத் தெரியாமலேயே
வெளிவந்துடும். இதே மாதிரிதான் நாம் அந்த
அர்ச்சனாவையும் கையாளப் போறோம். இப்ப...
ஒரு வேடிக்கையை...!''

சொல்லிவிட்டு உதயா அருகே வந்து உட்கார்ந்தார் ஜெகதீஸ்.

''உதயா, அதானே உன் பேர்?''

''ஆமாம்...''

''உனக்குக் கல்யாணம் ஆயிடுச்சா?''

''இன்னும் இல்லை.''

''நீ ஒருத்தரைக் காதலிக்கிறே. சரியா?''

''சரி.''

''அவரோட பேர்?''

''ஆனந்த்.''

''நீயும் ஆனந்தும் உடலுறவில் ஈடுபட்டதுண்டா?''

''உண்டு.''

''எத்தனை தடவை?''

''ஒரு தடவை.''

ஜெகதீஸ் பிரவீனைப் பார்த்து கண்ணைச் சிமிட்டியபடி உதயாவிடம் கேட்டார். ''எந்த இடத்தில்... எப்போன்னு சொல்ல முடியுமா உதயா?''

''போன மாசம் இருபத்தெட்டாம் தேதி, மலப்புழா ரெஸ்ட் ஹவுஸ்...''

''அந்த அனுபவம் எப்படின்னு சொல்ல முடியுமா?''

உதயா சொல்ல ஆரம்பித்தாள்.

(உதயா சொன்னதை அப்படியே எழுதினால் இப் புத்தகம் தடை செய்யப்படும் என்கிற பயத்தில் அந்தப் பகுதி காலியாய் விடப்பட்டிருக்கிறது. 'ராஜேஷ்குமார்')

ஜெகதீஸ் தொடர்ந்தார். ''அந்த ஆனந்த் கண்டிப்பா உன்னைக் கல்யாணம் செஞ்சுக்கு வாரா?''



''நான் இப்போ கர்ப்பம்னு தெரிஞ்சு ரொம்பவும் அதிர்ச்சியா இருக்கார். அவர்தான் ஒரு முடிவுக்கு வரணும்.''

ஜெகதீஸ் அயர்ந்தார்.

''நீ கர்ப்பமா?''

''ஆமாம். இன்னிக்குக் காலைலதான் எனக்கே தெரிஞ்சது.''

''மை குட்னெஸ்.''

ஜெகதீஸும், பிரவீனும் உதயாவை இமைக்காமல் பார்த்தார்கள்.

**எ**ரிச்சல் மேலிட தன் கையில் கட்டியிருந்த வாட்சைப் பார்த்தான் ஆனந்த்.

அது 6.55 என்று காட்டி விட்டு அடுத்த விநாடியில் 6.56 என்று பளிச்சிட்டு அருகிலேயே விநாடிகளை 1,2,3 என்று உற்பத்தி செய்தது.

'உதயா எங்கே போயிருப்பாள்?'

'மறுபடியும் ஆபீசுக்கே போன் பண்ணிப் பார்க்கலாமா?' ஆனந்த் வெளியே வந்தான். சாய்ந்தர நேரம் எப்போதோ காலாவதியாகி ராத்திரி அரும்ப ஆரம்பித்திருந்தது. தெருவோர விளக்குகள் மின்சாரத்துக்காகக் காத்திருந்தன.

நீல வண்ண பெயிண்டிங் தெரிந்த உடல் ஊனமுற்றோர் டெலிபோன் பூத்தை நோக்கி நடந்தான் ஆனந்த். ஒரு பெரியவர் போனில் பேசிக்கொண்டிருக்க-

காத்திருந்தான்.

மனசு பூராவும் உதயா வியாபித்திருந்தாள். காலையில் போட்ட சண்டை மனசைப் பிறாண்டியது. 'நான் அந்த மாதிரி பேசியது சரியில்லைதான்!'

''ஸார்... நெம்பர் சொல்றீங்களா?''

பூத்தில் இருந்த வாலிபன் கேட்டான்.

ஆனந்த் நெம்பரைச் சொன்னான்.

**எம்.**சி.சி. யூனிட் தன் இயக்கத்தை நிறுத்தியிருந்தது. ரிதம் செத்துப் போயிருந்தது.

உதயாவின் தலையிலிருந்து ஹெட்போன் சாதனத்தைக் கழற்றி அவளை சர்க்யூட்டிலிருந்து விடுவித்துக் கீழே கிடத்தினான் பிரவீன்...

''பத்தே நிமிஷம். உதயா ஞாபகத்துக்கு வந்துடுவா..'' ஜெக்தீஸ் சொல்லிக் கொண்டிருந்தபோது பிரவீன் அவளை நெருங்கினான்.

''ஸார், உதயாவை முன்னாடி இருக்கிற ஆபீஸ் ரூமுக்குக் கொண்டு போயிடலாம். அவ கண் விழிச்சுப் பார்க்கறப்போ இந்தக் கம்ப்யூட்டர் யூனிட்ல இருந்தா ஏதாவது சந்தேகப்படுவா..''

''யூ ஆர் கரெக்ட் ப்ரவீன். அவளை எடுத்துக்க... முன்னாடி போயிடலாம்.''

பிரவீன் உதயாவை ஏந்திக் கொள்ள ஜெக்தீஸ் ஆபீஸ் அறைக்கு வந்தார். சோபா-கம்-பெட்டைச் சுட்டிக்காட்டியபடி சொன்னார். ''அதிலே அவளைப் படுக்க வை ப்ரவீன். மூஞ்சியில் கொஞ்சம் தண்ணியை அடிச்சுப் பார்.''

ப்ரவீன் செயல்பட்ட அதே நேரம்...

டெலிபோன் அழைத்தது.

ஜெகதீஸ் ரிஸீவரை எடுத்தார்.

''ஸார்... நான் ஆனந்த் பேசறேன்..''

''ஓ. நீங்களா?''

''ஸார்! உதயா இன்னும் ஹாஸ்டல் வந்து சேரலை. அவள் ஆபீஸை விட்டுக் கிளம்பறப்போ உங்ககிட்டே ஏதாவது சொன்னாளா சார்?''

ஜெகதீஸ் குரலை மிருதுவாக்கிக் கொண்டார். ''மிஸ்டர் ஆனந்த். உங்ககிட்ட ஒரு விஷயம் சொன்னாப் பதட்டமடைய மாட்டீங்களே?''

''என்ன ஸார்?''- ஆனந்தின் குரலில் பயம் தெரிந்தது.

''நீங்க ஆறு மணிக்கு எனக்குப் போன் பண்ணினப்போ உதயா ஆபீஸ்லதான் இருந்தா. ஆனா கான்சியஸா இல்லை. ஈதர் எவாப்ரேடிங் கேஸ் ரூமுக்கு லெட்ஜர் எடுக்கப் போனபோது காஸ் லீக்கேஜ்ல மயக்கமாயிட்டா. மயக்கத்தைத் தெளிவிச்சு அனுப்பலாம்னு உங்களுக்கு நான் தகவல் சொல்லலை. ஸாரி...''

''இப்போது உதயா அங்கேதானே இருக்கா?''

''ஆமா..''



''தெளியற ஸ்டேஜ். நீங்க நேர்ல வந்தா கூட்டிட்டே போயிடலாம்... வர்றீங்களா? வர்றப்போ ஒரு ஆட்டோவிலே வாங்க.''

''இப்ப வர்றேன் ஸார்.''

ரோட்டுக்கு வந்து ஆட்டோவைத் தேடினான் ஆனந்த். முந்நூறு வினாடிகளுக்குப் பிறகு காலி ஆட்டோ ஒன்று விர்ரென்று ரோட்டைத் தேய்த்துக் கொண்டு போக- நிறுத்தினான். தாவி ஏறிக் கொண்டான்.

''காந்திபுரம் செவன்த் க்ராஸ்.''

''மீட்டர் போட மாட்டேன். ஐம்பது ரூபா ஆகும் ஸார்..''

''தர்றேன் போப்பா.''

ஒரு மொளிச் சவாரி கிடைச்ச சந்தோஷத்தில் ஆட்டோவின் ஆக்ஸிலேட்டரை முடுக்கினான் ஆட்டோ டிரைவர். ஆட்டோவுக்கு இறக்கைகள் முளைத்துக் கொண்டது.

சாஸ்திரி மைதானத்தைத் தொட்டுத் திரும்பி, ரத்தின விநாயகர் கோயிலைத் தரிசித்து, திவான் பகதூர் ரோட்டின் அகலத்தில் மூக்கை நுழைத்து, சவீதா ஹாலைத் தாண்டி, பாரஸ்ட் காலேஜ் ரோட்டில் விரிக் கொண்டு போனது. மாம்பழ நிற சோடியம் விளக்குகள் வெளிச்சத் தூறலை ஆரம்பிச்சிருக்க. ஜனங்கள் சாலையின் இருபுறமும் அடைசல் அடைசலாய்ப் போய்க்கொண்டிருந்தார்கள்.

பத்தாவது நிமிஷம்!

ஆட்டோ காந்திபுரம் ஏழாவது கிராஸை உரசியது.

''அதோ, அந்தக் கட்டிடத்துக்கு முன்னாடி ஆட்டோவிலே நிறுத்திக்கப்பா. போனதும் வந்துடறேன். திரும்பவும் காந்தி பார்க் போகணும்.''

''அப்படீன்னா வெயிட்டிங்கோடு சேர்த்துப் நூறு ரூபா ஆகும் ஸார்.''

''தர்றேன்,'' என்றான் எரிச்சலோடு.

ஆட்டோ ஜெக்தீஸ் ஆபீஸ் வாசலில் நின்றது. இறங்கி உள்ளே ஓடினான் ஆனந்த். முன்புற வராந்தாவில் வெளிச்சம் தெரிய- ஜெக்தீசும் பிரவீனும் நின்றிருந்தார்கள். ஆனந்தைப் பார்த்ததும்

வந்தார்கள்.

''வாங்க, நீங்கதான் ஆனந்தா?''

''ஆமாம் ஸார். உதயா இப்போ எப்படியிருக்கா?''

''மயக்கம் தெளிஞ்சுடுச்சு. உள்ளே வாங்க.''

எல்லோருமாய் உள்ளே போனார்கள். உதயா சோபா- கம்- பெட்டில் தளர்ந்து போய்ப் படுத்திருந்தாள். கண்கள் திறந்திருக்க முகம் வேர்த்திருந்தாள். ஆனந்தைப் பார்த்ததும் எழ முயன்றாள்.

''உ..த..யா...'

அவளருகே அமர்ந்தான் ஆனந்த்... ''இப்போ உனக்கு ஒண்ணுமில்லையே? போகலாமா? ஆட்டோ கூட்டிட்டு வந்திருக்கேன்.''

உதயா பலவீனமாய்க் கண்களை உயர்த்தி ஆனந்தை ஏறிட்டாள். குரல் கமறக் கேட்டாள். ''நீங்க எப்படி இங்கே வந்தீங்க, ஆனந்த்?''

ஜெக்நீஸ் பேச்சில் குறுக்கிட்டார். ''உதயா, நீ ஈதர் கால் அறையில் மாட்டிக்கிட்டு மயங்கி விழுந்த சமயம் - மிஸ்டர் ஆனந்த் எனக்குப் போன் பண்ணி உன்னைக் கேட்டார். நீ மயக்கமா இருக்கறதைச் சொல்லி வீணாக அவரைக் கலவரப்படுத்த விரும்பலை. அதான் நீ போயிட்டதாப் பொய் சொன்னேன். உனக்கு மயக்கம் தெளிஞ்ச சமயம் அவர் போன் பண்ணினார். உடனே விஷயத்தைச் சொல்லி ஆட்டோவோடு வரச் சொன்னேன். வந்திருக்கார். உன்னால எழுந்திருச்சி நிக்க முடியும்ன்னா இப்பவே அவரோட போலாம். முடியலைன்னா இங்கேயே கொஞ்ச நேரம் ஓய்வு எடுத்துக்கிட்டுப் போலாம்.''

உதய பல்லைக் கடித்து- விண்விண்ணென்று தெறிக்கிற தலையை இரு கைகளாலும் பற்றிக் கொண்டு மெல்ல எழுந்து நின்றாள்.

''இல்லை ஸார். ஐ கேன் ஸ்டாண்ட். நான் அவரோடவே போயிடறேன்.'' அருகே நின்ற ஆனந்தின் கைகளைப் பற்றிக் கொண்டாள் உதயா.

''ஸாரி உதயா. உன்னை காஸ் ரூமுக்கு அனுப்பி அனாவசியமா தொந்தரவு கொடுத்திட்டேன். ஐ நீட்



யுவர் எக்ஸ்க்யூஸ்.''

''பரவாயில்லை ஸார். கொஞ்ச நேரத்திலே நான் நார்மல் ஆகிடுவேன். வர்றேன் ஸார். வர்றேன் மிஸ்டர் பிரவீன்!''

ஆனந்த் அவளுடைய தோளைப் பற்றிக் கொள்ள உதயா மெல்ல நடந்தாள். தலைக்குள் நெருப்புக் கம்பிகளாய் நரம்புகள் புரள- உற்பத்தியான வலியை உதடுகளில் மென்றாள்.

''என்ன உதயா தலை ரொம்பவும் வலிக்குதா?''

''உம்.''

'ஈதர் அப்படித்தான் இருக்கும். நல்லாத் தூங்கி எழுந்திருச்சாச் சரியாயிடும். உன்னால நடக்க முடியலைன்னா என்னைக் கெட்டியாப் பிடிச்சுக்கோ..''

ஆட்டோ டிரைவர் பீடியை எறிந்துவிட்டு ஓடிவந்தான்.

ஆனந்த் உதயாவை ஆட்டோவின் உள்ளே நுழைந்து தானும் ஏறிக் கொண்டான். ''அப்படியே சாய்ஞ்சுக்கோ உதயா..''

''உம்..''

''டிரைவர்! விமன்ஸ் ஹாஸ்டல் போகணும்.''

''சரி ஸார்.'' - ஆட்டோ கிளம்பியது.

செவன்த் கிராஸைத் தாண்டி, கிராஸ்கட் ரோட்டின் மெயினுக்கு வந்ததும் உதயா மெல்ல குரல் கொடுத்துக் கேட்டாள். ''நீங்க எதுக்காக ஜெக்நீஸுக்குப் போன் பண்ணி உங்களைக் காட்டிக்கிட்டீங்க?''

''ஸாரி உதயா... எனக்கிருந்த சந்தோஷத்தில் உனக்கு உடனடியாகப் போன் பண்ணி விஷயத்தை சொல்லணும் போலிருந்தது.

''சந்தோஷமா? என்ன விஷயம்?''

''சந்தோஷமான விஷயம்தான். நம்ம காதலை என்னோட அப்பாகிட்டச் சொல்லி அக்மார்க் முத்திரை வாங்கியாச்சு. உன்னைப் பார்க்கணுமாம். நாளைக்கு வெள்ளிக்கிழமை கூட்டிட்டு வர்றதாகச் சொல்லியிருக்கேன்.''

''இந்த வார்த்தை நிஜமா ஆனந்த்?'' திணறுகிற குரலில் கேட்டாள் உதயா.

''பத்தே நிமிஷம். உதயா ஞாபகத்துக்கு வந்துடுவா..'' ஜெகதீஸ் சொல்லிக் கொண்டிருக்கும்போதே பிரவீன் அவரை நெருங்கினான்.

''ஸார், உதயாவை முன்னாடி இருக்கிற ஆபீஸ் ரூமுக்குக் கொண்டு போயிடலாம். அவ கண் விழிச்சுப் பார்க்கறப்போ இந்தக் கம்ப்யூட்டர் ரூமில இருந்தா ஏதாவது சந்தேகப்படுவா..''

''யூ ஆர் கரெக்ட் ப்ரவீன். அவளை எடுத்துக்கிட்டு முன்னாடி போயிடலாம்.''

பிரவீன் உதயாவை ஏந்திக் கொள்ள ஜெகதீஸ் ஆபீஸ் அறைக்கு வந்தார். சோபா கம் பெட்டைச் சுட்டிக்காட்டியபடி சொன்னார். ''அதிலே அவளைப் படுக்க வை பிரவீன். மூஞ்சியில் கொஞ்சம் தண்ணீரை அடிக்கப்பார்.''

ப்ரவீன் செயல்பட்ட அதே நேரம்...

டெலிபோன் அழைத்தது.

ஜெகதீஸ் ரிஸீவரை எடுத்தார்.

''ஸார்... நான் ஆனந்த் பேசறேன்..''

''ஓ. நீங்களா?''

''ஸார்! உதயா இன்னும் ஹாஸ்டல் வந்து சேரலை. அவள் ஆபீஸை விட்டுக் கிளம்பறப்போ உங்ககிட்டே ஏதாவது சொன்னாளா சார்?''

ஜெகதீஸ் குரலை மிருதுவாக்கிக் கொண்டார். ''மிஸ்டர் ஆனந்த். உங்ககிட்ட ஒரு விஷயம் சொன்னாப்பதட்டமடைய மாட்டீங்களே?''

''என்ன ஸார்?''- ஆனந்தின் குரலில் பயம் தெரிந்தது.

''நீங்க ஆறு மணிக்கு எனக்குப் போன் பண்ணினப்போ உதயா ஆபீஸ்லதான் இருந்தா. ஆனா கான்சியஸா இல்லை. சதர் எவாப்ரேடிங் கேஸ் ரூமுக்கு லெட்ஜர் எடுக்கப் போனபோது காஸ் லீக்கேஜ்ல மயக்கமாயிட்டா. மயக்கத்தைத் தெளிவிச்சு அனுப்பலாம்னு உங்களுக்கு நான் தகவல் சொல்லலை. ஸாரி...''

''இப்போது உதயா அங்கே...



''தெளிஞ்சுட்டா மேடம். நீங்க நேர்ல வந்தா கூட்டிட்டே போயிடலாம்... வர்றீங்களா? வர்றப்போ ஒரு ஆட்டோவிலே வாங்க.''

''இப்ப வர்றேன் ஸார்.''

ரோட்டுக்கு வந்து ஆட்டோவைத் தேடினான் ஆனந்த். முந்நூறு வினாடிகளுக்குப் பிறகு காலி ஆட்டோ ஒன்று விர்ரென்று ரோட்டைக் கிழித்துக் கொண்டு போக- நிறுத்தினான். தாவி ஏறிக் கொண்டான்.

''காந்திபுரம் செவன்த் க்ராஸ்.''

''மீட்டர் போட மாட்டேன். ஐம்பது ரூபா ஆகும் ஸார்..''

''தர்றேன் போப்பா.''

ஒரு யமாளிச் சவாரி கிடைச்ச சந்தோஷத்தில் ஆட்டோவின் ஆக்ஸிலேட்டரை முடுக்கினான் ஆட்டோ டிரைவர். ஆட்டோவுக்கு இறக்கைகள் முளைத்துக் கொண்டது.

சாஸ்திரி மைதானத்தைத் தொட்டுத் திரும்பி, ரத்தின விநாயகர் கோவிலைத் தரிசித்து, ஹெபான் பகதூர் ரோட்டின் அகலத்தில் மூக்கை நுழைத்து, சவிதா ஹாஸ்பிடலைத் தாண்டி, பாரஸ்ட் காலேஜ் ரோட்டில் விரிக் கொண்டு போனது. மாம்பழ நிற சோடியம் விளக்குகள் வெளிச்சத் தூறலை ஆரம்பித்திருக்க, ஜனங்கள் சாலையின் இருபுறமும் அடைசல் அடைசலாய்ப் போய்க்கொண்டிருந்தார்கள்.

பத்தாவது நிமிஷம்!

ஆட்டோ காந்திபுரம் ஏழாவது கிராஸை உரசியது.

''அதோ, அந்தக் கட்டிடத்துக்கு முன்னாடி ஆட்டோவிலே நிறுத்திக்கப்பா. போனதும் வந்துடறேன். திரும்பவும் காந்தி பார்க் போகணும்.''

''அப்பா என்னா வெயிட்டிங்கோடு சேர்த்துப் நூறு ரூபா ஆகும் ஸார்.''

''தர்றேன்,'' என்றான் எரிச்சலோடு.

ஆட்டோ ஜெகதீஸ் ஆபீஸ் வாசலில் நின்றது. இறங்கி உள்ளே ஓடினான் ஆனந்த். முன்புற

''நிஜமான நிஜம் உதயா! காலையில உன்கிட்ட நான் நடந்துக்கிட்ட முறை தப்பு. மகா தப்பு. ரொம்ப நேரம் கழிச்சுத்தான் உணர்ந்தேன். மனசிலே திமிர்ந்து ஒரு துணிச்சல். உத்வேகம். அப்பா கிட்டே போனேன். மளமளன்னு விஷயத்தைச் சொல்லிட்டு அவரோட முகத்தைப் பார்த்தேன். அப்பா உதட்டுலே சிரிப்பு. கூட்டிட்டு வாடா அந்தப் பொண்ணை. நான் பார்க்கணும்'னு சொன்னார்.''

உதயா சந்தோஷப்பட முயன்று முடியாமல், முகச் சுளிப்போடு தலையை இரு கைகளாலும் பற்றிக் கொண்டாள். வலி... அசாத்திய வலி.

''தலையை ரொம்பவும் வலிக்குதா உதயா?''

''உம். என்னால தாங்க முடியலே ஆனந்த். பின்னந்தலை பூராவும் குண்டூசி செருகி வைச்ச மாதிரி வலி.''

''டாக்டர்கிட்டே போலாமா?''

''வேண்டாம். ஹாஸ்டலுக்கே போயிடறேன். நீங்க சொன்ன சந்தோஷமான விஷயம்தான் எனக்கு ட்ரீட்மெண்ட். நாளைக்கு எத்தனை மணிக்கு உங்கப்பா கிட்டே என்னைக் கூட்டிட்டு போகப் போறீங்க ஆனந்த்?''

''காலைல எட்டு மணிக்கு ரெடியாயிரு..''

ஆட்டோ விமன்ஸ் ஹாஸ்டலை நெருங்கிக் கொண்டிருந்தது.

## 4

''இதோ பார் பிரவீன்! இதெல்லாம் பாவமில்லே. ஒரு விஞ்ஞானி தன்னுடைய பரிசோதனைக்காக நூற்றுக் கணக்கான குரங்குகளைக் கொல்லலாம். அதில் தப்பில்லை. அதுவும் உயிர்தான். அதுவும் துடித்துத்தான் செத்துப் போகிறது. இந்த உதயாவும் நமக்கு அப்படித்தான். எம்.சி.சி. யூனிட் ஆரோக்கியமா இருக்குங்கிறதை உதயா மூலம் கன்பர்ம் பண்ணிக் கிட்டோம்.''- கனமான குரலில் சொல்லிவிட்டு பைப்பைப் பற்ற வைத்துக் கொண்ட ஜெக்தீஸ் சிரித்தார். கேட்டார்:



''இன்னும் ஏழு நாளிலே சாகப்போற இந்த உதயா கர்ப்பமாமே?''

ப்ரவீனும் சிரித்தான்.

இடம்: ஜெக்தீஸ் தனியறை. காலை 7.00 மணி. ஜெகதீஸ் தொடர்ந்தார். ''பிரவீன்! அர்ச்சனா இன்னும் ஒரு வாரம் இந்தக் கோயமுத்தூர்ல தங்கியிருக்கப் போறா. அதுக்குள்ளே அவ இங்கே வரணும். ஐ மீன்... கொண்டுட்டு வரணும். நம்ம எம்.சி.சி யூனிட்டுக்கு அவளை உட்படுத்தி அவ மூளையை கம்ப்யூட்டர் ரைஸ் பண்ணி டெக்னிகல் சீக்ரெட்டைப் பறிக்கணும்..''

ப்ரவீன் குறுக்கிட்டான். ''சார்...! இந்த அர்ச்சனா விஷயத்துல நாம கொஞ்சம் எச்சரிக்கையாகச் செயல்படறது பெட்டர். கிட்நாப்பிங்[illegible]''

ஜெக்தீஸ் சிரித்தார்.

''உனக்கு இன்னும் தைரியம் போதாது பிரவீன். கம்ப்யூட்டர் கன்வர்ஷன்ல நேஷனல் அவார்டு வாங்கறது ஒரு பெரிய விஷயம். ஒரு நடிகனுக்குக் கிடைக்கிற ஆஸ்கார் பரிசு மாதிரி அது! அந்த நேஷனல் அவார்டுக்காகச் சட்டத்தையும் மீறி, மனசாட்சியையும் கொன்னுட்டுக் குறுக்கு வழியிலே போகலாம். எதையுமே துல்லியமாத் திட்டம் போட்டுச் செஞ்சா மாட்டிக்க மாட்டோம். நான் மனசுக்குள்ளே ஒரு அவுட் லைன் போட்டு வெச்சிருக்கேன். அதன்படி எல்லாம் நடந்தா அர்ச்சனா சுலபமா நமக்குக் கிடைப்பா...''

பிரவீன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

''சொல்லுங்க சார்.''

ஜெக்தீஸ் மெல்லிய குரலில் கேட்டார்: ''உனக்கு சுதாவைத் தெரியுமில்லே ப்ரவீன்?''

''எந்த சுதா ஸார்? யூ மீன் தாமு நகர்ல இருக்கிற கால்கேர்ள் சுதா?'' பிரவீன் நாற்காலியின் நுனிக்கு நகர்ந்தபடி கேட்டான்.

''அவளேதான்!'' அடர்த்தியாய்ப் புகைவிட்டார் ஜெக்தீஸ்... ''அந்த சுதாதான் நமக்கு உதவப் போகிறாள்..''

''எப்படி ஸார்?''

''அந்த சுதா சாமான்யப்பட்டவ இல்லை ப்ரவீன். நாம கஷ்டம்னு நினைக்கிற காரியத்தையும் சுலபமா முடிச்சுக் கொடுத்திடுவா. என்னோட கொலீக் ஒருத்தர் அவளைப் பத்தி நிறையச் சொல்லியிருக்கார். நம்ம விஷயமா இன்னிக்கு சாயந்திரம் அவளைப் பார்க்கப் போறோம். அதற்கு முந்தி நம்ம திட்டத்துக்கு உதவப் போற இன்னொருத்தரையும் இந்த நிமிஷம் உனக்கு அறிமுகப்படுத்தி வைக்கப் போறேன்.''

ப்ரவீன் ஆச்சரியமாய்த் தன் மோவாயைத் தடவ, ஜெக்தீஸ் இன்டர்காமை எடுத்து பட்டனைத் தட்டி உயிர்ப்பித்தார். ரிஸீவரில் கரகரத்தார்.

''என்னோட ரூமுக்குக் கொஞ்சம் வந்துட்டுப் போறியா?''

''...''

''பயப்படாமே வா! யாரும் பார்த்துட மாட்டாங்க...''

ரிஸீவரை வைத்தார் ஜெக்தீஸ்.

''யார் சார் அது?''- ப்ரவீன் கேட்டான்.

''நமக்குத் தேவையான பறவை''- சிரித்தார் ஜெக்தீஸ்.

தள்ளுகதவு அசைந்தது - தயக்கமாய்.

''உள்ளே வா எத்திராஜ். தைரியமா வா... இங்கே யாருமில்லே. நானும் அஸிஸ்டெண்ட் மட்டும்தான்.

எத்திராஜ் மருண்டவனாய் உள்ளே நுழைந்தான். ப்ரவீனையே பார்த்தபடி வந்தான். ஜெக்தீஸ் பைப் சாம்பலை கிண்ணத்தில் தட்டியபடி சொன்னார்.

''ப்ரவீன், இவர் எத்திராஜ். நேத்தைக்கு ராத்திரிதான் எனக்குப் பரிச்சயமானார். காம்பௌண்ட் சுவரைத் தாண்டிக் குதித்துக் குரோட்டன்ஸ் செடிக்குப் பின்னால் ஒளிஞ்சிட்டிருந்த வரைப் பார்த்து நான்தான் உள்ளே கூட்டிட்டு வந்தேன்.''

''சார்... நீங்க சொல்றது எனக்குப் புரியலை..''- ப்ரவீன் எத்திராஜைப் பார்த்தபடி கேட்டான்.''

''இன்னிக்குக் காலைல பேப்பரைப் பார்த்தியா ப்ரவீன்?''



''இல்லை சார்.''

''இந்தா தினத்தந்தி. முதல் பக்க நியூஸைப் படிச்சுப் பாரு!''- ஜெக்தீஸ் நீட்டிய நாளிதழை வாங்கிப் பிரித்தான் ப்ரவீன்.

முகத்தை அறைகிற மாதிரியான எழுத்துக்களில் அந்தச் செய்தி கண்ணில் பட்டது.

**இரட்டைக் கொலை-**
**கள்ளக் காதலில் பயங்கரம்.**
**கணவனுக்குப் போலீஸ் வலைவீச்சு!**

செய்திக்குப் பக்கத்திலேயே பிரசுரமாகியிருந்த போட்டோவில் மணிக்கமும், சகுந்தலாவும் குப்புற விழுந்து கிடந்தார்கள். கொஞ்சம் தள்ளி எத்திராஜின் புகைப்படம் முழு சைஸில் தெரிந்தது. 'இரட்டைக் கொலை சம்பந்தமாய்த் தேடப்பட்டு வரும் எத்திராஜ் இவர்தான்.'

''ஸார். தயவு செஞ்சு என்னைப் போலீஸ்ல காட்டிக் கொடுத்துடாதீங்க ஸார். நான் அந்த ஜெயில் நரகத்துக்குப் போக மாட்டேன். நான் அவங்களைக் கொன்னிருக்கக் கூடாதுதான். கழுதைங்க எப்படியோ இருந்துட்டுப் போகட்டும்னு விரட்டியிருக்கணும். ஆத்திரத்திலே கொன்னுட்டேன் சார்..'' பிரவீனின் கைகளைப் பற்றிக் கொள்ள வந்தான் எத்திராஜ்.

ஜெகதீசன் அதட்டினார். ''எத்திராஜ்! நேத்தைக்கு ராத்திரியே உனக்குப் படிச்சுப் படிச்சுச் சொல்லியிருக்கேன். இப்பவும் சொல்றேன் கேட்டுக்கோ. இந்த பங்களாவிலேயும் சரி, பங்களாவுக்குப் பின்னாடி இருக்கிற கம்ப்யூட்டர் யூனிட்டிலேயும் சரி, யாரும் உள்ளே வரமாட்டாங்க. என்னோட அனுமதியில்லாம ஒரு துரும்பு கூட வெளியே பறந்து போகாது. உள்ளேயும் வராது.

''ஸார், நான் சொல்ல வந்தது...'' என்று ஏதோ பேச முற்பட்ட எத்திராஜை இடது கையால் அமர்த்தி விட்டு தொடர்ந்தான் ஜெக்தீஸ்.

''எத்திராஜ்...! உன்னோட பயம் எனக்குப் புரியுது. ரெண்டு கொலைகளை செஞ்சிட்டு தலைமறைவாகி விட்ட ஒருத்தனை போலீஸ் சும்மா விடாது.

உடம்பூராவும் சல்லடை போட்டு சலிக்க ஆரம்பிக்கும். இந்த இடத்தைத் தவிர நீ வேறு எந்த இடத்திலே இருந்தாலும் சரி போலீஸ் உன்னை மோப்பம் பிடிச்சுடும். இந்த இடத்துக்கு போலீஸ் வராது. நம்பலாம். அப்படியே போலீஸ் வந்தாலும் உன்னை என்னால காப்பாத்த முடியும். உன்னோட ஆயுசு பூராவுலே காப்பாத்த முடியும்...''

''ஸார்...!'' நெகிழ்ந்தான் எத்திராஜ்.

''ஆனா எத்திராஜ்! என்கிட்ட ஒரு கெட்ட பழக்கம் இருக்கு. நான் யாருக்காவது ஏதாவது உதவி பண்ணினா அந்த உதவிக்குப் பதில் உதவியா அவங்க கிட்டேயிருந்து ஒரு உதவியை எதிர்பார்ப்பேன்.''

''நீங்க என்ன உதவி கேட்டாலும் செய்யறேன் சார்.''

''நிச்சயமா?''

''சத்தியமா சார்.''

''அப்புறம் பேச்சு மாறக்கூடாது.''

''மாறமாட்டேன் சார்..''

''தட்ஸ் குட்.'' என்றார் ஜெக்நீஸ். ''இந்தப் போட்டோவிலே இருக்கிற பொண்ணை இதுக்கு முந்தி எங்கேயாவது பார்த்திருக்கிறாயா எத்திராஜ்?''

மைக்கைப் பிடித்தபடி பேசிக்கொண்டிருந்த அர்ச்சனாவின் போட்டோவை நீட்டினார் ஜெக்நீஸ். எத்திராஜ் போட்டோவை வாங்கினான். பார்த்தான். அரை நிமிஷ நேரத்திற்குப் பிறகு தலையாட்டினான்.

''பார்த்ததில்லை ஸார் பாட்டுப் பாடற பொண்ணா?''

''இல்லை... இவள் ஒரு அற்புதமான பொண்ணு. எல்லோருக்கும் தலையில மட்டும்தான் மூளையிருக்கும். ஆனால் இவளுக்கு உடம்பு பூராவும் மூளை. ஒரு கம்ப்யூட்டர் தயாரிக்க இவளோட மூளைதான் கச்சாப் பொருள். இந்தக் கச்சாப் பொருள் எங்களுக்கு வேணும். அதுக்குத்தான் உன்னோட உதவி தேவைப்படுறது எத்திராஜ்....''

''நீங்க சொல்றது எனக்குப் புரியலீங்களே சார்?''

''ப்ரவீன்! எத்திராஜுவுக்குப் புரியலை...''

ப்ரவீன் எத்திராஜைப் புன்னகையோடு பார்த்தான்.

''எத்திராஜ்! இந்த அர்ச்சனா பம்பாய்க்காரி... ரெண்டு



நாளைக்கு முன்னாடிதான் கோயமுத்தூர் வந்தா. ஓட்டல் போல் ஸ்டார்லே அவளும் அவளோட அப்பாவும் தங்கியிருக்காங்க. இன்னும் ஒரு வாரம் வரைக்கும் இதே ஊர்ல தங்கியிருக்கப் போறாங்க. அவள் பம்பாய் போறதுக்குள்ளே இங்கே வரணும்... அதாவது அவளை பலவந்தமா கொண்டுட்டு வரணும்.''

''ஸார்...!'' அதிர்ந்தான் எத்திராஜ்.

''ரெண்டு பேரை அடிச்சே கொலை செய்துவிட்டு வந்திருக்கிற நீ இந்த சாதாரண விஷயத்துக்கெல்லாம் அதிர்ச்சியடையக்கூடாது எத்திராஜ்.''

''அந்தப் பெண்ணை கடத்திட்டு வரச் சொல்றீங்களா ஸார்?''

''பார்த்தியா! நீயே கரெக்டா சொல்லிட்டே...''

வெகுவாய் வியர்த்தான் எத்திராஜ். ''சார் எம்மேல ஒட்டிட்டு இருக்கிற கொலைகாரன்கிற பட்டத்தோட ஈரம்கூட இன்னும் காயலை. அதுக்குள்ளே மறுபடியும் ஒரு குத்தத்தை பண்ணனுமா சார்?''

ஜெக்நீஸ் சிரித்தார். ''எத்திராஜ், உனக்கு ஒரு பழமொழி தெரியுமா? 'தலைக்கு மேலே வெள்ளம் போனால் சாண் என்ன? முழம் என்ன?' அது மாதிரிதான் உன்னோட விஷயமும். ஒருத்தனைக் கொன்னாலும் கொலைகாரன்தான். பத்துப் பேரைக் கொன்னாலும் கொலைகாரன்தான். நீ ஏற்கெனவே கொலைக் குத்தத்திலே முழுக்க நனைஞ்சிட்டே. மறுபடியும் ஒரு முங்கு போட்டுடு. நீ போலீஸ் கையிலே மாட்டாமே எம் பங்களாவிலேயே இருந்துடலாம். உன்னோட ஆயுட்காலம் வரைக்கும் இருந்துடலாம்..''

''ஸார்...!''

''நல்லா யோசனை பண்ணு எத்திராஜ். அப்புறமா உன்னோட முடிவைச் சொல்லு. அவசரமில்லை.''

''சார்... நான் ஏற்கெனவே போலீஸாலே தேடப்பட்டுக் கொண்டிருக்கிற ஆசாமி. இந்த நிலைமையிலே நான் வெளியே போய் அந்தப் பெண்ணைக் கடத்திக்கிட்டு வர முடியுமா?''

''முடியும் எத்திராஜ். கண்டிப்பா முடியும் தம் நிர்மாணிக்கிற திட்டப்படி நல்லியமா நீ நடத் அர்ச்சனா இங்கே இருப்பா. உனக்குத் துணை கூதாவும் செயல்படுவாள்.''

''அதாவா?''

''உனக்கு அவளைத் தெரிய நியாயமில்லை எத்திராஜ். இன்னிக்கு சாயந்திரம் நாம அவ சந்திக்கப்போறோம். அதுக்கு முன்னாடி உன்னோ முடிவைச் சொல்லிடு.''

''ஸார்...''

''உம்... சொல்லு...''

''நீங்க சொல்றபடி நான் நடந்துக்கறேன் சார்.''

''தட்ஸ் குட்.''

எத்திராஜ்'விடம் சொல்லிவிட்டு ஒரு புன்னகை யோடு பிரவீணைப் பார்த்தார் ஜெகதீஸ்.

## 5

ஆனந்த் விமன்ஸ் ஹாஸ்டலின் ரிசப்ஷ அறையில்- ஒரு மரப் பெஞ்சில் உட்கார்ந்திருந்தா

காலை எட்டு மணி.

ஆண்கள் வர முடியாத இடமாயிற்றே என் துணியில் பாத் ரூமிலிருந்தும் அரைகுறையா வெளிப்பட்ட பெண்கள் நிறந்த முதுகுகளோ போய்க்கொண்டிருக்க. அப்போது தான் தூக்கத் லிருந்தும் விடுபட்ட பெண்கள் பற்பசை பிதுக்க பட்டடுத் பிரஷ்களோடு வராந்தாவில் தெரிந்தார்க

''எக்ஸ்க்யூஸ்மீ...''

தனக்குப் பின்புறம் குரல் கேட்டுத் திரும்பினா ஆனந்த். குளித்து முடித்து, பணிச்சென்று ஆபீசுக்கு புறப்படும் கோலத்தில் இருந்த அந்தப் பெ முகத்தில் ஒருவித கவலை தெரிய நின்றிருந்தா மெல்லிய குரலில் கேட்டாள்.

''நீங்க உதயாவைப் பார்க்க வந்திருக்கீங்களா?''

''ஆமாம்!''

''உதயா ராத்திரி பூராவும் தூங்க ரொம்பவு கஷ்டப்பட்டுட்டா. தலையை ரெண்டு கையாலு



அமுக்கிப் பிடிச்சுக்கிட்டு விடிய விடிய உட்கார்ந்திருந்தா. விடியறதுக்குக் கொஞ்சம் முந்தி தான் தூங்க ஆரம்பிச்சா. மறுபடியும் இப்ப எழுந்து தலையைப் புடிச்சிட்டு அவஸ்தை பட்டுட்டிருக்கா.''

பதட்டமாய் எழுந்தான் ஆனந்த்.

''நான் உள்ளே போய் அவளைப் பார்க்கலாமா?''

''பர்மிஷன் கேட்டுட்டுத்தான் நீங்க உள்ளே போகணும்.. ஆனா எங்கொயரி கௌண்டருக்கு ஆள் இன்னும் வரலை. ஆள் வர பத்து மணியாயிடும்.

''நீங்க உதயாவோட அறைத் தோழியா?''

''ஆமா. என் பேர் ஜானகி. டெலிபோன்ஸ்லே ஒர்க் பண்றேன். உதயா உங்களைப் பத்தி நிறையச் சொல்லியிருக்கா.''

''மிஸ் ஜானகி. நீங்க எனக்கொரு உதவியைச் செய்ய முடியுமா? ரூம்ல இருக்கிற உதயாவை மெல்லக் கைத்தாங்கலா இங்கே அழைச்சிட்டு வந்துடுங்களேன். ப்ளீஸ்!''

''இதோ வர்றேன்!'' ஜானகி வேகமாய்ப் போனாள்.

பத்து நிமிடங்களுக்குப் பிறகு-

உதயாவைத் தோளில் சாத்தியபடி நிதானமாய் நடை பயின்று வந்தாள். ஆனந்த் பதற்றமாய் ஓடிப்போய் உதயாவை ஏந்திக் கொண்டான்.

உதயா ரொம்பவும் சோர்ந்திருந்தாள். முகம் பூராவும் உலர்ந்திருந்தது. கண்களுக்குக் கீழே மெலிதான நீல நிறம் தெரிந்தது.

''உதயா, உனக்கு என்ன பண்ணுது?''

''வ... லி... தலை வ.. லி..க்... க...'' அரற்றினாள்.

''டாக்டர்கிட்டே போகலாமா?''

''ம்..''

''மிஸ் ஜானகி, ப்ளீஸ் கொஞ்சம் சிரமத்தைப் பார்க்காமெ வெளியே போய் ஒரு ஆட்டோவை நிறுத்த முடியுமா?''

''நீங்க மெதுவா உதயாவைக் கூட்டிட்டு வாங்க. நான் ஆட்டோவை நிறுத்தறேன்.'' - ஜானகி விரைவாய் வெளியே போனாள்.

ஹாஸ்பிடலின் வராந்தாவில் பெண்கள் கும்பல் கும்பலாய் நின்று வேடிக்கை பார்க்க ஆனந்த் உதயாவை ஒரு குழந்தையாய் நடத்திக் கொண்டு போனான்.

"என்னால் வலி தாங்க முடியலிங்க..."

"இதோ, கொஞ்ச நேரத்துலே டாக்டர்கிட்டே போயிடலாம். உதயா... பயப்படாதே. என் கையை கெட்டியாப் புடிச்சுக்கோ.."

மெல்ல நடந்து வாசலுக்கு வந்தார்கள்.

ஜானகி ஆட்டோவை நிறுத்தியிருந்தாள்.

உதயாவை ஆட்டோவில் உட்கார வைத்து, அவளுக்கருகில் தானும் உட்கார்ந்தான் ஆனந்த்.

"டாக்டர் மோகனரங்கம் க்ளினிக்," என்றான்.

ஆட்டோ ஓர் அரை வட்டம் சுற்றிக் கொண்டு சுக்ரவாரப் பேட்டை சாலையில் ஓடியது. காலை நேரப் போக்குவரத்து களைகட்டாத கோவை நகரத் தெருக்களில் ஆட்டோ சுலபமாய் ஓடி ஸ்டேன்ஸ் ஹைஸ்கூல் அருகே இருந்த மோகனரங்கம் கிளினிக்கின் முன் நின்று மௌனமானது.

டாக்டர் மோகனரங்கம் அந்தக் காலை வேளையில் கும்பல் இல்லாமல் இருந்தார். எக்ஸ்ரேக்களை வெளிச்சத்தில் உயர்த்திப் பார்த்துக் கையிலிருந்த கலர் பென்சிலால் மார்க் பண்ணிக் கொண்டிருந்தார். நெற்றியில் ஸ்ரீசூர்ணம் தெரிந்தது.

"குட்மார்னிங் டாக்டர்."

"அடே, நீயா ஆனந்த்! வா வா. வெரி குட்மார்னிங்." - கையிலிருந்த எக்ஸ்ரே கற்றையை மேஜையின் மேல் அப்படியே கவிழ்த்துவிட்டு வரவேற்றார். ஆனந்தின் அருகே நின்றிருந்த உதயாவைப் பார்த்தார். அவளைப் பற்றி ஒன்றும் கேட்காமல் ஆனந்தைப் பார்த்து புன்னகைத்தார். "அப்பா சௌக்கியம்தானே ஆனந்த்?"

"ம்... அவர் சௌக்கியம்தான் டாக்டர்"

"ம்... இப்படி உட்கார். யாருக்கு என்ன உடம்பு?"

ஆனந்த் உதயாவைக் காட்டினான். "டாக்டர். இவள் பேர் உதயா. கூடிய சிக்கிரம் எனக்கு மனைவியாகப் போகிறவள். உங்க சிநேகிதரான என்



அப்பாவுக்கும் இந்த விஷயம் தெரியும்."

"சவிட்!" - என்றபடி உதயாவைப் பார்த்தார் டாக்டர். ஆனந்த் தொடர்ந்தான். "நேத்தைக்குச் சாயந்தரம் உதயா தன்னோட ஆபீஸ்ல ஈதர் காஸ் லிக்கேஜ்ல மாட்டி அன்கான்ஷியஸ் ஆயிட்டா. மயக்கம் தெளிஞ்சு நார்மலுக்கு வந்த பின்னாடியும் தலை வலிக்குதுன்னு சொல்றா. நேத்து ராத்திரி பூராவும் தூங்கலையாம். கொஞ்சம் பாருங்க டாக்டர்.."

டாக்டர் எழுந்தார்.

பக்கத்து அறையில் எட்டிப்பார்த்து, "நர்ஸ்!" என்றார்.

ஸ்பிரிட் விளக்கில் எதையோ டெஸ்ட் டியூபில் காய்ச்சிக் கொண்டிருந்த அந்தப் புஷ்டியான நர்ஸ் எட்டிப் பார்த்தாள். வெளியே வந்தாள்.

"இந்தப் பெண்ணைக் கூட்டிட்டு எக்ஸாமிங் ரூமுக்குப் போ.." என்றவர். ஆனந்தைப் பார்த்து, "ஒரு பத்து நிமிஷம் இங்கேயே வெயிட் பண்ணு ஆனந்த். உன்னோட 'வுட்பி'க்கு என்னான்னு பார்த்துடலாம்." என்று கூறிச் சிரித்தார்.

அந்த நர்ஸ் தளர்வாய் இருந்த உதயாவின் புஜத்தைப் பற்றி மெதுவாய்க் கூட்டிப்போனாள். உதயா வலியில் கண்களை மூடி உதட்டைப் பற்களால் கடித்திருந்தாள்.

"தைரியமாய்ப் போ உதயா! இவர் எங்க குடும்ப டாக்டர். இவர் கையை வெச்சாலே உன்னோட தலைவலி பறந்துடும்."

உதயா நர்ஸ் உதவியோடு வராந்தாவில் நடந்து மறைந்ததும் ஆனந்த் டாக்டரின் மேஜையிலிருந்த அந்த வெளிநாட்டு மாகஸினை எடுத்தான்.

சர்ஜரி பற்றின புத்தகம் அது.

மெல்ல மெல்ல அதில் ஆழ்ந்து போனான்.

எவ்வளவு நேரம்!

தெரியவில்லை.

புத்தகத்தின் கடைசி பக்கத்தை மேய்ந்துவிட்டு தலை நிமிர்ந்தவன் டாக்டர் மோகனரங்கம் லேசாய்த் தலை கலைந்து மூக்குக் கண்ணாடியை கையில்

பிடித்தபடி வருவதைக் கண்டதும் எழுந்தான்.

"டாக்டர்"

"ஆனந்த்.. உட்கார்.."

"உதயாவுக்கு ஒண்ணுமில்லையே டாக்டர்?"

"முதல்ல நானும் அப்படித்தான் நினைச்சேன். ஆனால் இந்த நிமிஷம் நான் நினைக்கிறேன்- அவளுக்கு ஏதோ ஆகியிருக்கு."

"அதான் டாக்டர் அந்த ஈதர் காஸ்.. சிக்கி..."

"நோ. உதயாவுக்கு இப்போ வந்திருக்கிற தலைவலிக்கு ஈதர் காரணமில்லே. ஈதர் ஒரு அனஸ்தீஷ்யா மாதிரிதான் ...ஆபத்தில்லை."

"உதயாவோட தலைவலிக்கு வேற ஏது காரணம்னு நினைக்கிறீங்க டாக்டர்?" - படபடத்த ஆனந்தை கவலையாய்ப் பார்த்தார் மோகனரங்கம்.

"ஆனந்த், என்னோட ஏக்ஸ்டர்னல் எக்ஸாமின்படி உதயாவுக்கு மூளைக்கு போகின்ற நரம்புகள் பூராவும் ஏதோ ஒரு அதிர்ச்சியாலே தாக்கப்பட்டிருக்கு. டென்ஷன் இல்லாத கயிறு மாதிரி மூளையோட ஆக்சான், சைனாப்ஸ் எல்லாமே தளர்ந்து போயிருக்கு."

"டாக்டர்!"

ஆனந்த் முகம் மாறினான்.

"பயப்படாதே ஆனந்த். இஞ்செக்ஷன் கொடுத்திருக்கேன். தலைவலியிலிருந்து ரிலீஃப் கிடைக்கும். சாயந்தரமா மறுபடியும் ஒருதரம் கூட்டிட்டு வா. நியூரோ சர்ஜன் ரவிக்குமார் இங்கே வருவார். அவர்கிட்ட உதயாவைக் காட்டலாம்."

"நன்றி டாக்டர்."

உதயா நர்ஸின் உதவியில்லாமல் மெதுவாய் வந்து கொண்டிருக்க- ஆனந்த் எழுந்து வேகமாய் அவனை நோக்கிப் போனான்.

## 6

"புறப்படலாமா ப்ரவீன்?" ஜெக்நீஸ் கேட்டார்.

"ம்" என்றான் ப்ரவீன்.

அருகில் நின்றிருந்த எத்திராஜ் நிறைய



மாறியிருந்தான். தூக்கிச் சீவிய நரை கலந்த விக். ஒட்டி வைக்கப்பட்ட பிரஷ் மீசை. தங்க பிரேமிட்ட மூக்குக் கண்ணாடி. பிஸ்கெட் நிற ஃபுல் சூட்.

ஜெக்நீஸ் சிரித்தார். "எத்திராஜ், சும்மா அடிக்கடி விக்மேல கையை வெச்சு வெச்சி பார்த்துக்காதே. அவ்வளவு சுலபத்துலே அது வந்துடாது."

"எனக்கென்னவோ பயமாயிருக்கு ஸார்."

"மறுபடியும் பயமா? எத்திராஜ்!

இந்த டிரஸ்ல, இந்த விக்கில நேரா நீ போலீஸ் ஸ்டேஷனுக்கே போய் ஒரு கெட்ட கம்ப்ளையண்ட் கொடுத்துட்டு இன்ஸ்பெக்டர் கையாலே ஒரு காப்பியைக் குடிச்சிட்டு வரலாம்."

எத்திராஜ் அவஸ்தையாய் சிரித்துக் கொண்டான்.

"பிரவீண் சுதாவுக்குப் போன் பண்ணிட்டியா?"

"சாயந்திரமே பண்ணிட்டேன் சார்."

"சுதா வெயிட் பண்ணிட்டிருப்பாளா?"

"கண்டிப்பா."

வெளியே தெருவில் இருட்டில் நின்றிருந்த காரை நோக்கிப் போனார்கள். பழக்கமில்லாத அந்த டிரஸ்ஸில் கொஞ்சம் சிரமப்பட்டு நடந்தான் எத்திராஜ்.

ப்ரவீண் காரை ஓட்ட - பின் சீட்டில் சாய்ந்தார்கள் எத்திராஜும், ஜெகநீஸும்.

ஒரு இருபது நிமிஷ நேர பயணம்.

நகர எல்லையைத் தாண்டி தாமு நகர் அவென்யூ வந்தது. சுத்தமான பிரதேசம். ஆரோக்கியமான மினி பங்களாக்கள். ஒவ்வொரு கேட்டின் வாசலிலும் கூர்க்கா விசுவாசமாய் நின்றிருக்க- காம்பௌண்ட் சுவரோரமாய் வளர்ந்திருந்த பாரிஜாத மரங்களும், பன்னீர் மரங்களும் மொக்குகளை அவிழ்த்து வாசத்தை காற்றுக்கு அனுப்பிக் கொண்டிருந்தது. புதிதாய்ப் போட்ட மெட்டாலிக் சாலையில் கார் சிரமம் இல்லாமல் நீந்தியது.

காரை ஓட்டிக் கொண்டிருந்த ப்ரவீன் திரும்பிப் பார்த்தான்.

"சுதா நல்ல ஏரியாவைத்தான் செலக்ட் பண்ணியிருக்கிறாள். வந்து போக நல்ல இடம்.

மத்தவங்க விஷயத்திலே அக்கறை காட்டாத ஜனங்க வசிக்கிற இடம்.''

எத்திராஜ் முதன் முறையாக வாயைத் திறந்தான். ''ஸார்... சுதாவை இந்த விஷயத்திலே எந்த அளவுக்கு நம்பலாம்?''

ஜெகதீஸ் தன் கையிலிருந்த டன்ஹில் சிகரெட் டைக் காரின் கதவு வழியே கண்டியெறிந்து விட்டுச் சிரித்தார்.

''எத்திராஜ், உன்னை நான் எந்த அளவுக்கு சம்பறேனோ அதே அளவுக்கு சுதாவையும் நம்பறேன். சுதாவுக்குப் பணம்தானே முக்கியம். ஒரு நோட்டுக்கட்டை அதிகமாக வைத்தால் உயிரையே தூக்கிக் கொடுத்துடுவா.''

கார் தாமு நகரின் வால் பகுதியைத் தொட்டு இடதுபுறமாய்த் திரும்பி அதே திசையில் கடைசி வரைக்கும் ஓடி ஹாக்கி மட்டையின் வளைவு மாதிரியான திருப்பத்தில் இருட்டில் ஒரு மரத்துக்குக் கீழே மௌனமானது.

எதிரே சின்னதாய்ப் பங்களா தெரிந்தது.

அடுத்த தெருவில் காசைக் கண்டினால் இந்தத் தெருவில் சத்தம் கேட்கக் கூடிய அளவுக்கு அபார அமைதி. வானத்தில் நிலா அழுக்கான மேகங் களுக்கு மத்தியில் சிக்கிக்கொண்டு ஒளியைத் தற்காலிகமாய் இழந்திருந்தது. காற்று கால்குலேட்டர் வைத்துக் கொண்ட மாதிரி நிமிஷத்திற்கொருமுறை விசுக்கென்று வீசியது.

மூன்று பேரும் காரின் கதவுகளை மூன்று பக்கங்களிலும் திறந்து கொண்டு கீழே உதிர்ந்தார்கள். சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டார்கள்.

சுதா தன் வீட்டு வாசலில் காத்திருந்தாள்.

உதட்டில் உறைந்துபோன புன்னகையோடு மெலிதாய், ''வாங்க!'' என்று சொல்லிவிட்டு உள்ளே போனாள். சுதா முப்பது வயதைத் தொட்டுக் கொண்டிருந்தாள். அரேபியக் குதிரையின் மதர்ப்பு அவளிடம் இருந்தது. உடம்புக்குப் புடவை அன்னியம் என்கிற மாதிரி பரவியிருந்தது. சேலையின் லோஹிப் கட்டுத் தொப்புள் குழிக்கு



கீழே... கீ...ழே... அபாயகரமான எல்லை வரைக்கும் இறங்கியிருந்தது.

மூன்று பேரும் உள்ளே போனார்கள்.

சுதா கதவைத் தாழிட்டாள்.

''ரொம்ப நேரமா வெயிட் பண்றியா சுதா?''- ஜெகதீஸ் கேட்டார்.

''நோ... நோ. இப்பத்தான் ஷாப்பிலிருந்து வந்தேன். குளிச்சேன். நீங்க வர்றீங்களான்னு பார்க்கிறதுக்காக வாசல்ல வந்து நின்னேன்.''

சுதா செழிப்பாய் இருக்கிறாள் என்பது அந்த அறையைப் பார்த்த உடனேயே தெரிந்தது. ஒரு ஃப்ரிஜ், ஏர் கூலர், போம் கட்டில், பீரோக்கள், லாமினேட் பதிக்கப் பெற்ற டைனிங் டேபிள், வால் பெயிண்டிங்க்ஸ்.

''பீ ஸீட்டட் மிஸ்டர் ஜெகதீஸ்.'' பாலிஷ் ஏற்றப்பட்ட பிரம்பு நாற்காலிகளைக் காட்டினாள் சுதா. எல்லோருமாய்ச் சரிந்தார்கள்.

''எனி ட்ரிங்க்ஸ்!''

''வேண்டாம் சுதா. மொதல்ல விஷயத்தை பேசிடுவோம்.''

''ம்... சொல்லுங்க ஜெகதீஸ்.'' எதிரே உட்கார்ந்தாள் சுதா.

''சுதா. உன்னைப் பற்றி எனக்கு நல்லாத் தெரியும். எந்தக் காரியத்தையும் காதும் காதும் வைத்த மாதிரி முடிச்சுக் காட்டுவதில் நீ ரொம்பவும் சாமர்த்தியக் காரின்னு ஒருத்தர் உன்னைப் பத்தி சொல்லி யிருக்கார். அவர் சொன்ன திறமை உன்கிட்ட நிஜமாகவே இருக்கான்னு டெஸ்ட் பண்ணத்தான் இப்போ வந்திருக்கோம். இவர் என்னோட அஸிஸ்டெண்ட் பிரவீன். இவர் எத்திராஜ். என்னோட புது நண்பர். நான் இப்போ சொல்லப் போற திட்டத்திலே இவருக்கும் ஒரு முக்கியப் பங்கு இருக்கு.''

சுதா சிரித்தாள். மார்புச் சேலையை அலட்சியப் படுத்தி யிருந்தாள்.

''நீங்க வந்த விஷயத்தைச் சொல்லலாம். மிஸ்டர் ஜெகதீஸ்.''

ஜெக்தீஸ் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். "சுதா! ஒரு பெண்ணை தந்திரமா பேசி என் பங்களாவுக்குக் கூட்டிட்டு வரணும்."

"கடத்திட்டு வரணும்னு சொல்லுங்க!"

"தேர் யூ ஆர்."

"யார் அந்தப் பெண்?"

"அதை அப்புறமா சொல்றேன். மொதல்ல இந்த வேலையைச் செய்ய நீ ஒப்புக்கதியா இல்லையா?"

"கொஞ்சம் ரிஸ்க்கான வேலைதான். பணம் எவ்வளவு கொடுப்பீங்க?"

"நீ எவ்வளவு எதிர்பார்க்கிறே?"

"இருபத்தஞ்சாயிரம்."

"தர்றேன். ஆனா விஷயம் கச்சிதமா முடியணும்."

"இந்த சுதா சுடுபட்ட எந்த விஷயமும், அரையும் குறையுமா முடிஞ்சதில்லை. பொண்ணு யாரு? எந்த ஊரு?"

"ப்ரவீன்! நீ சொல்லு" - ஜெக்தீஸ் பிரவீனைப் பார்த்தார். ப்ரவீன் தன் கையிலிருந்த ஒரு கவரிலிருந்து ஒரு போட்டோவை எடுத்து நீட்டினான்.

"இந்தப் பெண்தான். பேரு அர்ச்சனா. பம்பாய்க்காரி. தற்சமயம் கோயம்புத்தூர் வந்திருக்கா. சொந்தம் அப்பா மட்டும். பிளாஸ்டிக் ஒயர் கூடைகளைப் பின்னற மாதிரி கம்ப்யூட்டர் கன்வர்ஷனில் கெட்டிக்காரி. அவளோட திறமை எங்களுக்கு வேணும். அந்த அற்புதமான மூளையோட செயல்திறன் எங்களுக்கு வேணும்."

சுதா உன்னிப்பாய் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"அந்த அர்ச்சனா ஓட்டல் போல் ஸ்டார்லதான் தங்கியிருக்கா. இன்னும் அஞ்சு நாள் இந்தக் கோயமுத்தூர்ல இருப்பா. அதுக்குள்ளே அவ நம் இடத்துக்கு வரணும்."

"கொண்டு வந்துரலாம். ஏதாவது திட்டம் வெச்சிருக்கீங்களா பிரவீன்?

"ம்... இருக்கு.."

"என்ன திட்டம்?"

"எத்திராஜும் நீயும் நாளைக்கு காலையில் சரியாப் பத்து மணிக்கு ஓட்டல் போல் ஸ்டார்ல



அர்ச்சனாவையும், ஆத்மாவையும் மீட் பண்ணப் போறீங்க."

"ஒன் மினிட் பிரவீன். இந்தத் திட்டத்துல மிஸ்டர் எத்திராஜும் ஆக்ஷன்ல இருக்கிறதாகச் சொன்னீங்க. எத்திராஜ் யார்? என்ன பண்ணிட்டிருக்கார்னு என்கிட்ட சொல்லவே இல்லையே?" எத்திராஜை அரைக் கண்ணால் பார்த்தபடி கேட்டாள் சுதா.

"அது உனக்குத் தேவையில்லாத விஷயம் சுதா. இந்தப் பிளான்ல உன்னோடு பார்ட்டை ஒழுங்காப் பண்ணு போதும். மத்தவங்களைப் பத்தி கவலைப் படாதே!"

முகம் லேசாய் மாறினாள் சுதா. "சரி, பிளானைச் சொல்லுங்க."

"அர்ச்சனாவை மீட் பண்றதுக்கு முன்னால நீ கொஞ்சம் மாறணும். உருவ அமைப்பைச் சொல்றேன். முக்கியமா ஹேர் ஸ்டைல் மாறணும். ஹோம்லி லுக் வரணும். எல்லாத்துக்கும் மேலா கொஞ்சம் எஜுகேட்டட்டா தெரியணும்.'

"சரி.."

"எத்திராஜ் உனக்கு ஹஸ்பெண்டா நடிப்பார். நீங்க ரெண்டு பேரும் அர்ச்சனாவை சந்திக்க பேச வேண்டிய விஷயம் இதுதான். கோயமுத்தூர்லிருந்து பதினைந்து கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிற கணேசபுரம் குட்மதர்ஸ் அஸோசியேஷன்ஸ்ங்கிற மாதர் சங்கத்திலிருந்து வர்றதாச் சொல்லணும். நாளைக்குச் சாயந்தரம் 6 மணிக்கு மாதர் சங்கம் சார்பில் ஒரு விழா ஏற்பாடு பண்ணியிருக்கிறதாகவும், அந்த விழாவிலே சீப்கெஸ்டாக் கலந்துக்க அர்ச்சனாவை அழைக்க வந்ததாயும் சொல்லணும்."

"குட் அப்ரோச். வெல் பிளான்ட். அப்புறம்?"

"அர்ச்சனா உங்க அழைப்பைக் கண்டிப்பா ஏத்துக்குவா. ஏன்னா நேற்றைக்குக்கூட ஓட்டல் அலங்கார்லே நடந்த ஜெமிட்டல் பங்க்ஷனுக்கு போயிருக்கா.."

ஜெக்தீஸ் குறுக்கிட்டுத் தொடர்ந்தார்.

"எத்திராஜ்- சுதா, ரெண்டு பேருமே நல்லாக்

கவனியுங்க. அர்ச்சனா விழாவுக்கு வர்றதா ஒப்புக்கிட்ட பின்னாடிதான் நம்ம பிளான் செமத்தியாச் செயல்படணும். இது ஒரு கிட்நாப்பிங் அட்டெம்ப்ட். எங்கேயாவது ஒரு இடத்துலே தவறினாலும் மாட்டிக்குவீங்க. பேர்கட்டத்தையும் இயல்பா இருக்கணும். நாம எல்லோருமே சேப்டி கார்னர்ல இருந்துட்டுத்தான் செயல்படணும். பதட்டம் இருக்கக்கூடாது. இந்தத் திட்டத்துலே டைம் ஃபேக்டர் ரொம்பவும் முக்கியம். வேட் ஆகவே கூடாது. ரிலே ரேஸ் மாதிரி வேகம் இருக்கணும். அதிகப்படியான அவசரம் வரக் கூடாது. இப்போதான் பிளானோட எக்ஸிக்யூஷனைச் சொல்றேன். பிரவீன்... அந்த சார்ட்டை கொடு...''

ஜெகதீஸ் பிரவீனை நோக்கிக் கையை நீட்டினார்.

பிரவீன் ஒரு பழுப்புத் தாளை அவனிடம் நீட்டினான். கம்ப்யூட்டர் பிளானை செம்மைப்படுத்திக் கொடுத்திருந்தது.



சார்ட்டைப் பார்த்தான். நெற்றியைச் சுருக்கித் தன் தோள்களைக் குலுக்கிக் கொண்டான். ''உங்க கம்ப்யூட்டர் பாஷை உங்களுக்குத்தான் புரியும். இதனோட மொழிப்பெயர்ப்பை நீங்களே சொல்லிடுங்க புரபசர் சார்...''

ஜெகதீஸ் தனக்குள் சிரித்துக் கொண்டு...

சொல்ல ஆரம்பித்தார்.

வெகுநேரம்வரைக்கும் சொன்னார்.

## 7

மறுநாள் காலை பத்துமணி.

புரொபசர் ஆத்மா ஹைவன் ஸ் ஃபீல்டில் இன் பிலிம் டெக்னாலஜி சம்பந்தப்பட்ட தடிமனான புத்தக மொன்றில் ஆழ்ந்திருக்க, அர்ச்சனா மாடல் சர்க்யூட் ஒன்றைத் திருத்திக் கொண்டிருந்தாள்.

யாரோ கதவைத் தட்டினார்கள். ஆட்காட்டி விரலின் முட்டியால் ''டொக்... டொக்...'' என்று மெலிதாய்த் தட்டும் சத்தம்.

ஜவஹர் போய்க் கதவைத் திறந்தான்.

கதவை அடைத்த மாதிரி அவர்கள் இருவரும் நின்றிருந்தார்கள். பிஸ்கட் நிற ஃபுல் சூட்டில் ஒரு நடுத்தர வயது மனிதர். அரேபியக் குதிரையின் மதர்ப்போடும், வித்தியாசமான சிகையலங்காரத்தோடும் அந்தப் பெண்.

''நீங்க...?'' இழுத்தான் ஜவஹர்.

''மிஸ்டர் ஆத்மாவையும் மிஸ் அர்ச்சனாவையும் பார்க்கணும்.''

''நீங்க யார்ன்னு?''

''என்னோட பேர் சூசைராஜ். இவ என்னோட ஒய்ப் சிசிலி.''

''உள்ளே வாங்க.''

ஆத்மா நாற்காலியினின்றும் எழுந்தார். பார்வையில் குழப்பத்தைத் தேக்கிக் கொண்டு அவர்களை நோக்கிப் போனார். அவர்கள் இருவரும் ஆத்மாவைப் பார்த்ததும் ''குட்மார்னிங் மிஸ்டர் ஆத்மா'' என்றார்கள்.

"குட் மார்னிங். வெல்கம். உட்காருங்கள்.." சோபாவைக் காட்டினார்.

"தாங்க்யூ வெரிமச்." உட்கார்ந்தாள். அறையின் ஓரமாய் கட்டில் அருகே நின்றிருந்த அர்ச்சனாவை பார்த்தார்கள்.

"மிஸ் அர்ச்சனா?"

"நான்தான்." என்றாள் அர்ச்சனா புன்னகையாக. அந்தப் பெண் எழுந்து போய் அர்ச்சனாவின் கைகளைப் பற்றிக் கொண்டு, கன்னத்தில் மென்மையாய் முத்தமிட்டாள். "யூ ஆர் கிரேட். ரியலி கிரேட் அர்ச்சனா. ஒரு பெண், கம்ப்யூட்டர் துறையிலே ஆணுக்குச் சமமா இருப்பது சாதாரண விஷயமில்லை. உங்களை நினைச்சுட்டே ஒவ்வொரு பெண்ணும் தலையை நிமிர்த்திட்டு நடக்கலாம்..."

அர்ச்சனா மென்மையாய்ச் சிரித்துக் கொண்டாள்.

ஆத்மா அவர்களுக்கு எதிரே உட்கார்ந்தார். "எக்ஸ்க்யூஸ் மீ. நீங்க என்ன விஷயமா வந்திருக்கீங்கன்னு நான் தெரிஞ்சிக்கலாமா மிஸ்டர் சூசைராஜ்?"

"ஷ்யூர் ஷ்யூர். சிசிலி... வந்த விஷயத்தைச் சட்டுன்னு சொல்லம்மா. எனக்கும் பாக்டரிக்கு நேரமாச்சு.."

சிசிலி ஆத்மாவை நோக்கித் திரும்பினாள். "மிஸ்டர் ஆத்மா! உங்க பெண் அர்ச்சனா ஒரு ஜெம். கம்ப்யூட்டர் துறையில் உங்க பெண் மாதிரி இந்தியாவிலே வேற யாரும் இல்லை. அவங்க எங்க ஊருக்கு வந்ததை நினைச்சு ரொம்பவும் பெருமைப்படறோம். இவ்வளவு திறமையோட இருக்கிற உங்க பெண் அர்ச்சனாவை எங்க மாதர் சங்கம் மூலமாக கவுரவப்படுத்த எங்களுக்கு ஆசை."

ஆத்மா பரவசமானார். மகளைத் திரும்பிப் பார்த்தார்.

சிசிலி தொடர்ந்தாள். "இங்கிருந்து பதினஞ்சு கிலோ மீட்டர் தூரத்திலே கணேசபுரம் இருக்கு. அங்கே பத்து வருஷமா 'குட் மதர்ஸ்



அஸோஸியேஷன்' என்கிற பேரில ஒரு மாதர் சங்கத்தை நடத்தி வர்றோம். வருஷா வருஷம் ஒவ்வொரு துறையிலேயும் எமினென்ட்டா விளங்குகிற பெண்களை செலக்ட் பண்ணி அவங்களை விருந்தினராகக் கூப்பிட்டு கவுரவப் படுத்தறது எங்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய அம்சம். நீங்க எந்தவித மறுப்பும் சொல்லாமே உங்க டாட்டரை எங்க ஃபங்க்ஷனுக்கு அனுப்பி வைக்கணும்."

"உங்க மாதர் சங்கம் எங்கே இருக்குன்னு சொன்னீங்க மேடம்?" ஜவஹர் மெல்லிய குரலில் கேட்டான்.

"கணேசபுரம்."

"எந்த கணேசபுரம்? அன்னூர் போற வழியிலே இருக்கிற கணேசபுரமா?"

"உம்... அதேதான்."

"அந்தச் சின்ன ஊர்ல ஒரு மாதர் சங்கமா? ஆச்சரியமாயிருக்கே?"

"நாங்க சத்தமில்லாமே செயல்பட்டுட்டு வர்றோம்."

"சத்தம் போடாமே ஒரு மார்தர் சங்கமா? அதிசயமா இருக்கு."

"நீங்க யாருன்னு நான் தெரிஞ்சுக்கலாமில்லையா?"

"ஜவஹர். ஒரு பிரஸ் போட்டோகிராபர்."

"ஐ...ஸி..." என்ற சிசிலி ஆத்மாவை ஏறிட்டாள். "உங்க டாட்டரை அனுப்பி வையுங்க மிஸ்டர் ஆத்மா. அஸோஸியேஷன் மெம்பர்ஸ் எல்லாம் ஆர்வமா இருக்காங்க."

"என்னிக்கு ஃபங்க்ஷன்?"

"இன்னிக்கு சாயந்தரம் ஏழு மணிக்கு."

ஆத்மா மோவாயைத் தேய்த்தார். "ஏறக்குறைய ராத்திரி."

போகவர கன்வேயன்ஸ் ஏற்பாடு பண்ணிடறோம். ஃபங்க்ஷன் ஒரு மணி நேரம் நடக்கும். எட்டரை மணிக்கெல்லாம் உங்க மகளைக் கொண்டாந்து விட்டுடவோம்."

அம்மா திரும்பி அர்ச்சனாவைப் பார்த்தார்.

"என்னம்மா அர்ச்சனா, போறியா?"

"நீங்க போகச் சொன்னாப் போறேன்."

"தாங்க்யூ!" கைகளைக் குலுக்கிவிட்டு சந்தோஷப் புன்னகையோடு குசைராஜும் சிசிலியும் புறப்பட எழுந்தார்கள்.

ஜவஹர் சிசிலியை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இதற்கு முன் இவளை எங்கோ பார்த்திருக்கிறேன், எங்கே?

## 8

மத்தியானம் சிறிதளவு சாதம் ரசம் விட்டுச் சாப்பிட்டுப் படுத்துத் தூங்கி ஒரு மணி நேரம் கழித்து எழுந்ததில் கொஞ்சம் உற்சாகமாய் இருந்தது உதயாவுக்கு. பின் மண்டையில் தலைவலியின் குத்தல் வெகுவாய் குறைந்திருந்தது.

அறையைவிட்டு வெளியே வந்தாள்.

ஹாஸ்டல் முழுவதும் வெறிச்சோடிக் கிடந்தது. எல்லா அறைகளும், கதவுகளும் சாத்தப்பட்டு பல சைஸ்களில் பூட்டுகள் தொங்கிக் கொண்டிருந்தன.

புரபசர் ஜெக்தீஸுக்குப் போன் செய்து ஆபீஸுக்கு இரண்டு நாள் கழித்து வருவதாக சொல்லிவிட வேண்டும் என்ற எண்ணத்தைச் செயலாக்க ஹாஸ்டலின் என்கொயரி கௌண்டரை நோக்கி மெல்ல நடந்தாள் உதயா. போன் சரியாயில்லை.

மெல்ல நடந்து போய் தெரு முனையில் நின்ற ஆட்டோவில் ஏறிச் சாய்ந்து கொண்டாள். சில அடிகள் நடந்து வந்ததிலேயே வியர்வையாய் ஊற்றியது அவளுக்கு.

இவ்வளவு களைப்பு எப்படி வந்தது?

'என் உடம்புக்கு என்னாயிற்று?

ஈதர் வாயுவை சுவாசித்தால் இவ்வளவு பெரிய பாதிப்பு வருமா?' மனசுக்குள் கேள்விகள் சரசரவென்று ஓடிக் கொண்டிருக்க ஆட்டோவும் ஓடிக்கொண்டிருந்தது.



பத்தாவது நிமிஷம்.

ஆட்டோ ஆபீஸ் முன்னால் நின்றது.

பர்ஸை எடுத்து காசைக் கொடுத்துவிட்டு கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனாள் உதயா.

முன் அறையில் யாருமில்லை.

ஜெகதீஸ் எப்போதும் உட்கார்ந்திருக்கும் பக்கவாட்டு ஏ.சி. ரூமை எட்டிப்பார்த்தாள்.

அறைக்குள் காற்று மட்டும் இருந்தது.

'எங்கே யாரையும் காணோம்? உள்ளே யூனிட்டில் இருப்பார்களா?' யூனிட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தவள் சட்டென்று நடுங்கினாள்.

பின்னந்தலையின் அடிப்பாகத்திலும்-

அடிவயிற்றிலும் திடீரென்று அந்த வலி உதயமாயிற்று. மெல்ல... மெல்ல... மெல்ல அந்த வலி ஆவேசமாய் வளர ஆரம்பித்தது.

பாத்ரூமுக்குள் நுழைந்தாள். கதவைத் தாழிட்டுக் கொண்டாள்.

"உவ்வ்வ்... வே...ய்ய்...ய்ய!" தலையைப் பிடித்துக் கொண்டு ஸிங்க்கிற்குள் தீவிரமாய் வாந்தி எடுக்க முயன்றாள். தொண்டை நரம்புகள் அவஸ்தையால் பம்மின.

அடுத்த விநாடி...

உதயா நெஞ்சை கைகளால் பற்றிக் கொண்டாள்.

"அம்... மா...ஆ...!" ஈனமான அலறல்.

அப்படியே முன்பக்கமாய்-

ஒரு காகிதம் மடங்கி விழுவது மாதிரி கீழே சாய்ந்து-

எக்ஸ் குறியாய் மயக்கமானாள்.

## 9

எத்திராஜுக்கு உடம்பு பூராவும் உதறலாக இருந்தது.

பயம் அடிக்கடி நரம்புகளை உருவிவிட்டது.

வியர்த்து வியர்த்து வழிந்தான்.

அவனைத் தோளில் தட்டினார் ஜெக்தீஸ்.

''எத்திராஜ், நான் சொன்னது பூராவும் ஞாபகம் இருக்குல்ல? இப்ப மணி சரியா அஞ்சு. அஞ்சரை மணிக்கெல்லாம் நீ டாக்ஸி பிடிச்சு திகம்பரம் பார்க் கேட் போயிடணும். டாக்ஸியை அனுப்பிட்டு அங்கேயே வெயிட் பண்ணணும். சுதா அந்த நாற்பதுக்கு டாக்ஸியிலே வருவாள். அந்த டாக்ஸியையும் அனுப்பிவிட்டு நீங்க ரெண்டு பேரும் வேற ஒரு டாக்ஸி பிடிச்சு ஓட்டல் போல் ஸ்டாருக்கு போகணும்.

''எல்லாமே ஞாபகம் இருக்கு ஸார்.''

''ம். நாங்க அந்த ரூம்ல இருக்கோம். நீ புறப்பட்டு போறப்போ சொல்லிட்டு போ...''

''சரி ஸார்..''

ஜெகதீஸனும் பிரவீனும் எதிரேயிருந்த அறையை நோக்கிப் போனார்கள்.

''பிரவீன், நவ் த டைம் ஈஸ் ஃபைவ் டென். நாம போட்டிருக்கிற பிளான்படி நான் இப்ப ஆத்மாவைச் சந்திக்க யு.எம்.எஸ். போறேன். நீ எத்திராஜை ஃபைவ் தர்ட்டிக்கு அனுப்பி விட்டு ஆறு மணிக்கெல்லாம் நம்பர் பிளேட்டை மாற்றிவிட்டு நம்ம காரை எடுத்துட்டுச் சிவானந்த நகர் போறே..''

''ஆமா ஸார்.''

''பி கேர்ஃபுல் முழுக்க மாறிடு. தலையிலே ஹேட்டும் கண்ணுல கூலிங் கிளாஸூம் முக்கியம். தாடையிலே தாடியைப் பரப்பிக்க..''

''சரி ஸார்.''

''நான் புறப்படறேன். அர்ச்சனா வந்து சேர்ந்ததும் போன் பண்ணு. Bird is in the handனு ஒரு வாக்கியம் சொல்லு. போதும். நான் புரிஞ்சுப்பேன்.''

பிரவீன் தலையாட்டினான்.

ஜெகதீஸ் வெளியே வந்து போர்டிகோவில் நின்றிருந்த தன்னுடைய பத்மினி ஸ்டாண்டர்டை எடுத்தார்.

## 10

**பா**த்ரூமில் உதயா இன்னமும் எக்ஸ் குறி அமைப்பில் மயங்கிக் கிடந்தாள்.



## 11

**ஜ**வஹருக்கு அந்தச் சந்தேகம் இதயத்தின் மையத்தில் எழுந்து கொண்ட வண்ணம் இருந்தது. இந்த சிசிலியை இதற்கு முன்னால் எங்கேயோ பார்த்திருக்கிறோம்?

எங்கே?

ஜவஹரின் மைய மூளையில் ஒரு நரம்பு பளிச்சென்று நிமிர்ந்தது.

சிட்டி காமிரா ஹவுஸ்.

உள்பக்க அறையின் மேல் சுவர்ப் பகுதி.

சிரிக்கும் குழந்தைக்குப் பக்கத்தில் இந்த சிசிலி மந்தகாசமாய்ப் புன்னகைத்துக் கொண்டிருப்பாள்.

கையைச் சொடுக்கிக் கொண்டு ஸ்கூட்டரில் பரவி ஆக்ஸிலேட்டரைத் திருப்பிப் பறந்தான். பெட்ரோல் ரிசர்வைக் காட்டியது.

''வாடா! ஜவஹர்'' என்றான் சுவாமி என்கிற சுவாமி நாதன். போட்டோ ஸ்டுடியோவின் முதுகெலும்பு அவன்தான்.

ஜவஹர் சுவாமியிடம் பதில் பேசாமல் உள் அறைக்குச் சென்று மேல் சுவர் பகுதியைக் கவனித்தான். சுதா கிளாஸி பிரிண்ட்டட் 12'' X 10'' சைஸில் புன்னகைத்தாள். கண்களில் வா வா வசந்தமே.. என்று பாடினாள். மார்க் கச்சையை வேண்டுமென்றே தூக்கியிருந்தாள்.

''என்னடா ஜவஹர், வந்ததும் வராததுமா அவளைப் பார்த்துட்டு நிக்கறே? என்ன விஷயம்? ராத்திரி கனவுலே வந்தாளா?

''டேய் சுவாமி, இவ யாரு?''

''சுதா.''

''சுவாமி! இவளை உனக்குத் தெரியுமா?''

''தெரியும்.''

''நல்லாத் தெரியுமா?''

''உம்.. தெரியும். என்னடா விஷயம்?''

''சுவாமி!இவ எங்கே இருக்கா?'' கேள்வியை

படபடப்பாய் எழுப்பிவிட்டு அதே படபடப்போடு கேட்டான். ''கணேசபுரமா?''

''கணேசபுரமா? அது எங்கே இருக்கு? ...ரித்தான் சுவாமி. ''சுதா இருக்கிறது காமு நகர். ஜெ... பில்ட்ஸ் காண்டி...''

முதன் முறையாய் அதிர்ந்தான் ஜவஹர். ... நடந்ததைச் சுருக்கமாய்ச் சொன்னான். ''இ... லைப்பெண்ட் பேரு சூசைராஜா?''

சுவாமி ஜவஹரை விநோதமாய்ப் பார்த்தான். ''இன்னிக்கு உனக்கு என்னடா ஆச்சு பையா! ... குடும்பப் பெண்ணில்லை. அது ஒரு மாதிரியான... பொண்ணு. பணம் இருக்கிறவங்களைக் கண்டா... அவளுக்கு சந்தோஷம். நேத்து ராத்திரிவரைக்கும்... அவ யாரையும் கல்யாணம் பண்ணிக்கலை. அது... எனக்குத் தெரியும்.''

ஜவஹர் பரபரத்தான். ஓட்டல்போல் ஸ்டாரின்... டெலிபோன் எண்ணை ஞாபகத்துக்குக் கொண்டு... வந்து டயலைச் சுழற்றினான். காதுக்கு ரிஸீவரைக்... கொடுத்தான்.

''ஸீ...ஸீ...ஸீ...'' என்கேஜ்ட் டோன். திரும்பத் திரும்ப.

வெளியே வந்து ஸ்கூட்டரை உசுப்பி - வேகமாய் டிராபிக்கை ஊடுருவிக் காற்றை அரைத்து பறந்தான்.

ஓட்டல் மானேஜர் தலையை உயர்த்தினார். ஜவஹரின் பதட்டம் அவருடைய மனசுக்குப் பட்டிருக்க வேண்டும்.

''எஸ்...'' என்றார்.

மிஸ் அர்ச்சனா எப்போது வெளியே போனாங்கன்னு சொல்ல முடியுமா?''

மானேஜர்யோசித்தார். பிறகு சொன்னார்.

''பத்து நிமிஷத்துக்கு முன்னாடி ஒரு ஜென்டில்மேனும் ஒரு லேடியும் வந்து கூட்டிட்டுப் போனாங்க. மிஸ்டர் ஆத்மா ஒரு மணி நேரத்துக்கு முன்னாடியே புறப்பட்டுப் போய்விட்டார்.

இடிந்து போனான் ஜவஹர்.



# 12

...க்ஸி ஓம்பராசக்தி மில்லைத் தாண்டியது.

...பங்க்ஷனை சீக்கிரமா ஆரம்பிக்க சீக்கிர... முடிச்சுடுங்க மிஸஸ் சிசிலி. நேரமானா ...கவலைப்படுவார்.'' என்றாள் அர்ச்சனா.

...மென்று சிசிலி கூறினாள். ''அதோ பார்த்... நம்ம கார் எதிரில் வருது. சர்வீஸிலிருந்து ...வர் எடுத்திட்டு வந்துட்டான் போலிருக்கு. ... ஆட்டி காரை நிறுத்துங்க. டிரைவர் ...வரியமாய் ஓட்டலுக்குப் போயிடப் ...''

அட... ஆமாம்.. நம்ம கார்தான்.''... எத்திராஜ் ...வருக்கு வெளியே கையை நீட்டி எதிரே வந்து ...ண்டிருந்த அம்பாஸிடர் காரை நிறுத்தினான்.

அம்பாஸிடர் எத்திராஜின் கையசைப்புக்குப் ...மாய்ப் பணிந்து சாலையோரமாய் இருந்த ஒரு ...மரத்துக்குக் கீழே ஒதுங்கியது.

...க்ஸியும் எதிர்புறத்தில் போய் நின்றது.

...த்திராஜ் கீழே இறங்கினான். ''மிஸ் அர்ச்சனா. ...ம காரே வந்தாச்சு. வாங்க அதிலேயே ...யிடலாம். கொஞ்சம் கன்வீனியன்ட்டா ...க்கும்.''

''ஓ.கே.'' அர்ச்சனா இறங்கினாள். சிசிலியும் ...டர்ந்து இறங்கினாள். டாக்ஸி டிரைவருக்கு ...கேப்படி கட்டணம் தந்து அனுப்பினார்கள்.

'என்ன ஸார் இது? கணேசபுரம் போக வண்டி ...ச்சீங்க. பாதி வழியிலேயே இறங்கி வேற ...ண்டியிலே போறீங்க?''

...த்திராஜ் தன் கோட் பாக்கெட்டினின்றும் ...பர்ஸை எடுத்து ரூபாய் நோட்டுக்களை ...எண்ணினான். ''கணேசபுரம் போகப் பேசின ...தொகையை குடுத்துடறேன் டிரைவர்! எங்க கார் ...ர்வீஸிலிருந்து வந்தாச்சு. அதுலேயே போயிட ...ம்.''

''சார்ஜைக் குறைக்காமே இருந்தா சரிதான் சார்'' ...சந்தோஷப் பல்லிளிப்போடு பணத்தை வாங்கிக்

கொண்டு டாக்ஸியை ஒரு அரைவட்டம் அ
கோயமுத்தூரை நோக்கி திருப்பிக் கொ
போனான் டாக்ஸி டிரைவர்.

''வாங்க அர்ச்சனா போகலாம்.''

எதிர்ப்புறமாய் நின்றிருந்த காரை நோ
நடந்தார்கள். தலையில் கவிழ்க்கப்பட்ட தொ
கண்களைக் கவ்விய கூலங் கிளாஸ். கருமை
தாடி. பச்சை காக்கி யூனிபாரம்மில் டிரெஸ். டி
சீட்டில் உட்கார்ந்திருந்த உருவத்தைப் பா
கொண்டே காருக்குள் ஏறி உட்கார்ந்தான் அ

அவனுக்கு இருபுறமும் நெருக்கமாய்
ராஜும், சுதாவும் பின் சீட்டில் பரவினா
அர்ச்சனா அந்த அதிர்ச்சியைச் ஜீரணிப்பத
கதவின் நான்கு கண்ணாடிகளும் சரே
மேலேற்றப்பட கார் விசுக்கென்று ஒரு தே
வாய்ப் பறந்தது.

''என்ன இது வந்த வழியிலேயே போ
அர்ச்சனா உதடுகளை அசைத்து வார்த்தை
உதிர்ப்பதற்குள் தோள் பட்டையில் சுருக்கெ
ஏதோ ஒன்று ஜில்லென்று பாய்ந்தது.

## (13)

**ஹா**ஸ்டலின் ரிசப்ஷன் கௌண்டரில் அ
பெண் சொன்னதைக் கேட்டு ஆச்சரியப்பட்
ஆனந்த்.

''மூன்று மணிக்கே ஆபிசுக்கு லீவு சொ
போனவள் இன்னும் வரக்காணோம் ஸார்.''

பேயாய் அடித்துக் கொள்கிற இதயத்
உதயாவின் ஆபீஸ் டெலிபோன் நெம்பர்
டயலில் சுழற்றினான்.

மறுமுனையில் ரிங்போய்க் கொண்டிருந்த
களைத்துப்போய் ரிஸீவரைப் பொருத்தி
ஆனந்த்.

''நானே நேரில் போய்ப் புரபசர் ஜெக்
பார்த்து உதயா வந்தாளான்னு கேட்
வந்துடறேன்'' வெளியே வந்து ஸ்கூட்



உடைய யதார்த்த ஸ்தானத்திலிருந்து விடுவித்து
த்தினான். கையிலிருந்து கடிகாரத்தைப்
த்தான்.
மணி 6.40.

## (14)

**பா**த்ருமிலிருந்து மயங்கிக் கிடந்த உதயாவுக்கு
மெதுவாய் உணர்வு திரும்பியது.
எழுந்து உட்கார்ந்தாள்.
இருட்டாய் இருந்தது.
மெல்ல எழுந்தாள்.

## (15)

**ச**க்கையாய்த் தளர்ந்து போய் நாற்காலியில்
தொப்'பென்று வந்து விழுந்த ஜவஹரைக்
ட்டான் சுவாமி.

''என்னடா ஆச்சு? அர்ச்சனாவைப் பார்த்தியா?''

''அவங்க முந்திட்டாங்க.''

''அந்த சுதா உண்மையிலேயே கணேசபுரம் மாதர்
சங்கத்துல இருக்காளோ என்னவோ? நிஜமாகவே
அர்ச்சனாவுக்கு ஒரு பாராட்டு விழா ஏற்பாடு
பண்ணியிருக்கலாமோ?''

''அந்தச் சந்தேகமும் எனக்கு இருந்தது. இப்போ
கணேசபுரம் போயிட்டுத்தான் வர்றேன். அங்கே
மாதர்சங்கமும் இல்லை. ஒரு மண்ணாங்கட்டியும்
இல்லை. விசாரிச்சா அவனவன் சிரிக்கிறான். 'இந்தக்
கிராமத்துக்கு அதெல்லாம் எதுக்குங்கறு என்னையே
கேட்கிறான்.

''சரி... இனிமே என்ன பண்ணப் போறே?''

''முதல்ல யு.எம்.எஸ். போய் புரபசர் ஆத்மாவைப்
பார்த்து விவரம் சொல்லணும். அவர் என்ன
சொல்றாரோ அதன்படி நடக்கணும்.''

''ஜவஹர், நீ எதுக்கும் கவலைப்படாதே. அந்த சுதா
யாருன்னு எனக்குத் தெரியும். அவளை மடக்கிடலாம். நீ

புரபாசர்கிட்டே விஷயத்தைச் சொல்லிவிட்
நான் ஸ்டுடியோவைப் பூட்டிட்டுக்காத்திருக்
எழுந்தான் ஜவஹர்.

''சுவாமி, உன்னோட ஸ்கூட்டரை எடுத்
போறேன். என்னோட ஸ்கூட்டர் க
போயிட்டு வந்ததிலே கொஞ்சம் இருமுது.''

''ம்... ம்... எடுத்துட்டுப் போ...''

**ம**றுபடியும் 'ஸ்கூட்டர் பயணம்.

கவர்மெண்ட் ஆர்ட்ஸ் காலேஜ் ரோ
பாய்ந்து, சர்க்யூட் ஹவுஸ் பக்கமாய்ப் பிரயாண
ஆர். கே. ஸ்ரீரங்கம்மாள் ஸ்கூலைக் கடந்து அ
சிலைக்கு எதிரே இருந்த யு.எம்.எஸ். ஐந் தெ
ஜவஹர்.

வாசலிலேயே துணி பேனரில் 'COM
WELCOME' வாசகங்கள் காற்றில் அசைந்தன.
திறந்த வெளியில் நின்றிருந்த காரின் மண்
சோடியம் வேபர் விளக்குகளில் நிறம்
பிரகாசித்தன.

உள்ளே போனான் ஜவஹர்.

சட்டைப் பகுதியில் பெரியதாய் பாட்
வருபவர்களை வரவேற்றுக் கொண்டிருந்த
இளைஞனை நெருங்கினான்.

''நான் புரபசர் ஆத்மாவைப் பார்க்கணும்.''

அந்த இளைஞன் நெற்றியைச் சுருக்கின
''ஆத்மா...?''

''பம்பாயிலிருந்து வந்திருக்கிறாரே?''

''ஓ.. அவரா? ஹால் நெம்பர் த்ரியில் இருப
மூன்றாம் நெம்பர் ஹாலைத் தாண்டிச் செ
போனான்.

ஹால் வந்தது.

கம்ப்யூட்டர் சம்பந்தப்பட்ட உறுப்புகள் ஹ
சுவரோரம் மேஜைகளில் நேர்த்தியாய்க் காண
நடுவே ஆத்மா நின்றிருந்தார். கூடவே ஜெக்தீ
வேகமாய் அவர்களை நோக்கிப் போ
ஜவஹர்.

ஆத்மா பார்த்துப் புன்னகைத்தார்.



''வாங்க ஜவஹர்.''
நெருங்கினான். ''ஸார்...'' எச்சிலை
முழுங்கினான்.

''இந்த 'COMPU 83' யைப் பத்தி உங்க மகளின்ல
துங்க ஜவஹர். மிஸ்டர் ஜெக்தீஸ், ஜவஹர் ஒரு
ண்ட்ரஸ்டிங்கான யூத். இந்த நாலு நாளும்
ர்ச்சனாவுக்கு இவர்தான் கம்பெனி'' ஆத்மா
ந்தோஷமாய் பேசினார்.

''ஸார் ... உங்கிட்ட ஒரு விஷயம்
சொல்லணும்.''

''வாட்? என்ன விஷயம்?''

''அர்ச்சனாவைப் பத்தி.''

''என்ன அவளுக்கு?'' முகம் மாறினார் ஆத்மா.

''அர்ச்சனா கடத்தப்பட்டிருக்கா.''

''வாட் டூ யூ மீன்?'' வெடித்தார் ஆத்மா.

''எஸ் ஸார்! ஐ சஸ்பெக்ட் ஷி ஹேஸ் பீன் கிட்
ப்ட்'' மெல்லிய குரலில் ஆரம்பித்து எல்லாமே
சொன்னான். ''வந்தவங்க போலி ஆட்கள். ஒருத்தி
பெயர் சுதா..''

ஆத்மாவை பதற்றம் தொற்றிக் கொண்டது.
பார்த்தார்.

''போலீஸுக்கு இன்பார்ம் பண்ணிட்டீங்களா?''

''இன்னும் இதுல போலீஸ் இன்வால்வ்
பண்ணலை சார். வந்த அந்த ரெண்டு பேர்ல அந்தப்
பெண் சுதாவை எனக்குத் தெரியும். அவளை ஈஸியா
மடக்கிடலாம். என்னோட பிரண்ட் சுவாமிக்கு
தாவோட வீடு தெரியும்.''

அருகில் நின்றபடி ஆத்மாவின் அதிர்ச்சியை
மனதுக்குள் ரசித்தபடி நின்றிருந்த ஜெகதீஸ்
இப்போது அதிர்ந்தார். அதிர்ச்சியை வெளிக்காட்டிக்
கொள்ளாமல் ஆத்மாவின் தோளில் கையை
வைத்தார். ''மிஸ்டர் ஆத்மா. தைரியமா இருங்க.
உங்க டாட்டர் அர்ச்சனாவுக்கு எதும் ஆகியிருக்காது.
இன்னும் ஒரு மணி நேரம் வெயிட்
பண்ணிப்பாருங்க. அப்புறம் வரலைன்னா
போலீஸுக்குப் போங்க. மிஸ்ர் ஜவஹர் சொல்ற
அந்தப் பெண்ணை - சுதாவை மடக்குங்க..''

அவர் பேசிக் கொண்டிருந்த அதே விநாடி

ஜெகதீஸை ஒரு சிப்பந்தி நெருங்கி, "உங்களுக்குப் போன்" என்றான்.

"எக்ஸ்கியூஸ்மி... இப்ப வந்துடறேன்" உறைந்து போய் நின்றிருந்த ஆக்... சொல்லிவிட்டு மெல்ல டெலிபோனை நடந்தார் ஜெகதீஸ்.

ஹாலின் மூலையில் இருந்த டெலிபோ... நெருங்கி ரிஸீவரை எடுத்தவர் சுற்றும் ... ஒருமுறை பார்த்துக் கொண்டு "ஹலோ" என்...

"ஸார்... நான் பிரவீண் பேசறேன்..." முனையில் பிரவீனின் உற்சாகக் கொப்பளித்தது.

"என்ன பிரவீன்?"

"ஸார்...Bird is in the Hand"

"இப்பீவர்றேன்"

## 16

உதயா சுவரைப் பிடித்துக் கொண்டு எ... நின்றாள்.

தலைவலி காணாமல் போயிருந்தது.

வயிற்றில் அந்த அவஸ்தையில்லை. உ... சுலபமாய் இருந்தது. சுவரோரமாய் ... பாத்ரூமின் கதவை நெருங்கி தாழ்ப்பாளை ... கொண்டு வெளியே வந்தாள். ஹாலும் இரு... உட்கார்ந்திருந்தது. தெரு விளக்குகளின் வெ... சோகையாய் ஜன்னல் வழியே வந்து இருட்... துடைக்க முடியாமல் தோற்றுப் போயிருந்தது.

ஹாலில் நிதானநடை போட்டு ஜன்னல் வ... வந்து நின்று-

தெருவை எட்டிப் பார்த்தாள்.

வெளிப்புறக் கதவும், காம்பௌண்ட் கேட்டு... பூட்டுகளால் தொங்கிக் கொண்டிருப்பதைப்ப... மெலிதாய் அதிர்ந்தாள்.

'நான் பாத்ரூமில் இருக்கிற விஷயமே தெரி... கதவுகளைப் பூட்டிக் கொண்டு போயிருக்கிற...



...க்கச் சிறைவாசம் இன்னும் எத்தனை ...ளிதோ?"

...டை சென்று காரின் ஹெட் லைட் வெளிச்சம் ...லில் விழுந்தது.

...ரிலிருந்தும் பிரவீன் இறங்கினான். உதயாவுக்கு ...வீனின் உடை வித்தியாசம் ஆச்சரியமாய் ...ந்தது. இதென்ன வேஷம்?

...பிரவீன் சாவிக் கொத்தோடு கதவைத் திறக்க- ...ராஜூம் ககாவும் தொய்வாயிருந்த அர்ச்சனாவை ...லிருந்து இறக்கினார்கள்.

...தூக்கிக் கொண்டு வாசற்படியேறினார்கள். ...ர்த்துக் கொண்டிருந்த உதயாவுக்கு நெஞ்சை ...டைத்தது-

'யார் இவர்கள்?

'அந்தப் பெண்ணுக்கு என்ன?'

...மனசுக்குள் ஒரு சந்தேகம் பொறியாய் கிளம்ப- ...இந்த நிமிஷம் இவர்கள் கண்ணில் படுவது ...யில்லை, தீர்மானித்தவளாய் மறுபடியும் ...த்ரூமை நோக்கி ஓசைப்படாமல் ஓடினாள், ...த்துகொள்ள.

## 17

புரபசர் ஜெக்தீஸ் காரைவிட்டு இறங்கினார்.

படியேற முயன்ற அதே நேரம்.

"ஸார்" -பின்புறம் அந்தக் குரல் கேட்டது.

...திடுக்கிட்டுப் போய்த் திரும்பினார்கள். ...இருந்தார்கள்.

காம்பௌண்ட் கேட்டுக்கு வெளியே ஸ்கூட்டரை ...றுத்தி விட்டு கேட்டின் கம்பிகளைப் பற்றியபடி ...ஆனந்த் நின்றிருந்தான். முகம் பூராவும் வியர்வைத் ...வலைகள்.

"பிரவீன்! இந்நேரத்துக்கு இவன் எதுக்காக ...வந்திருக்கான் போய் விசாரி"? மெல்லிய குரலில் ...சொன்னார் ஜெக்தீஸ்.

பிரவீன் படியிறங்கி ஆனந்தை நோக்கிப் ...போனான். அவனுக்கு அருகாக போய் நின்று

கொண்டு ''எஸ்'' என்றான்.

''ஸார்! உதயா இங்கே வந்தாளா?'',
கேட்டான்.

''உதயாவா? வரலையே?''

''ஹாஸ்டலிலிருந்து மத்தியானம்
மணிக்கே புறப்பட்டு ஆபீஸ் வந்தாளாம்
சொல்ல வந்தாளாம். ஆனா இதுவரை
ஹாஸ்டலுக்குத் திரும்பலை.'' ''அவள் ஆ
வரலை. நான் காலையிலிருந்து இங்கே
இருக்கேன். உதயாவுக்கு இப்போ உ
தேவலையா?''

''தேவலை ஸார். பட்கன்ட்ஷியுவா ட்ரீட்மெ
எடுக்கணும். ஒரு நியூரோ சர்ஜனைப் பா
சொல்லியிருக்கார் டாக்டர் மோகனரங்கம்.''

''நீங்க மறுபடியும் ஹாஸ்டலுக்கே திரு
போய்ப் பாருங்க ஆனந்த். இந்த நேரம் உதயா தி
யிருக்கலாம். நிச்சயமா உதயா இங்கே வ
ஐயாம் ஷ்யூர் அபௌட் இட்...'' பி
சொல்லிவிட்டு நகர- வேறு வழியில்ல
ஆனந்தும் ஸ்கூட்டரை நோக்கிப் போனான்.

ஜெகதீஸனும் பிரவீனும் புன்னகை
நடந்தார்கள்.

யூனிட்டுக்குள் நுழைந்தார்கள்.

இளஞ்சிவப்பு வெளிச்சத்தில்
நிரம்பியிருந்தது. கம்ப்யூட்டர்களில்
சர்க்யூட்டுகள் உயிரோடு இருந்தன. யூனிட்
கடைசி அறைக்குள் நுழைந்தார்கள்.

நாற்காலிகளில் காத்திருந்த எத்திராஜனும்
எழுந்தார்கள். அங்கேயிருந்த நீண்ட மேஜை
மேல் அர்ச்சனா பரப்பப்பட்டிருந்தாள்.

## 18

**ஜ**வஹரும் ஆத்மாவும் போலீஸ் ஸ்டேஷ
இன்ஸ் பெக்டர் அவினாஷுக்கு முன்



...ப்பாய் உட்கார்ந்திருந்தார்கள். சுவாமி கொஞ்சம்
...னி மரப்பெஞ்சில் இருந்தான்.

''கண்டுபிடிக்கட்டாம் இன்ஸ்பெக்டர் ஆத்மா. தைரியமா
...ங்க! ஜவஹர் சொன்ன அந்த கதா இதுலே
...வாசல் ஆகியிருந்தா ப்ராப்ளம் ஈஸி. சுவாமி
...களுக்கு அவன் வீடு தெரியுமில்லே?''

தெரியும் இன்ஸ்பெக்டர். வெளியாவுலே நடிக்கப்
...ாதா ஒரு நடலை சொல்லி... போனவன் சில
...க்கணும் வாங்கணுக்கு கட்டாயப்படுத்தினான்...
...யிருந்தேன்.''

''அந்த வீட்ல அவன் மட்டும்தான் இருக்கானா?''

''ஆமாம் இன்ஸ்பெக்டர். சொந்த பந்தம்னு
...ம் இல்லாதவன். ஆண் பிள்ளைதான்.''

இன்ஸ்பெக்டர் அவினாஷ் எழுந்தார். மேஜையின்
...லிருந்து தொப்பியைத் தலையில் வைத்து
...ப்படுத்திக் கொண்டார்.

''வாங்க போய்ப் பார்க்கலாம். வீட்டுக்கு
...ம்பியிருந்தாலும் திரும்பியிருப்பான்.''

எல்லோருமாய் எழுந்தார்கள்.

வாசலில் நின்றிருந்த ஜீப்பில் ஐக்கியமானார்கள்.
ஜீப் ஒரு சின்னப் புயலாய்ப் புறப்பட்டது.

## 19

**பா**த்ரூமிலிருந்து மெல்ல வெளிப்பட்டாள்
...யா. இதயம் அதிர ஆரம்பித்தது.
...சாக்கு மூட்டையைச் சுமந்து கொண்டு பிரவீனும்,
...த ஆளும் காரில் எங்கே புறப்பட்டுப்
...ானார்கள்?

குழப்ப முடிச்சு நெற்றியில் உற்பத்தியாக-
...ந்தாவில் மெள்ள நடந்து போய் யூனிட்டிற்குள்
...டிப்பார்த்தாள்.

யூனிட்டின் கோடியில் முதுகைக் காட்டிக்
...ாண்டு ஜெகதீஸ் தெரிந்தார். வாயில் பைப்
...கத்து கொண்டிருந்தது.

உதயா உள்ளே ஓசைப்படாமல் நுழைந்தாள்.
...சையாய் நின்றிருந்த டிஜிட்டல் கம்ப்யூட்டர்

களுக்கு பின்னே மறைந்து நடந்தான்.

இருபதடி தொலைவில்-

நீண்ட மேஜையொன்று தெரிய அதில்
பரப்பப்பட்டிருந்த கோலம் உதயாவின் கவ
பட அதிர்ந்தாள்.

'யார் அந்தப் பெண்?'

'எதற்காகக் கொண்டு வந்திருக்கிறார்கள்

இன்னும் நாலடி முன்னாள் போனாள்.

ஜெக்தீஸ் சரேலென்று எதற்கோ திரும்ப

உதயா கம்ப்யூட்டரின் பின்னே அப
குனிந்து உட்கார்ந்து கொண்டாள். அங்கிருந்து
மெல்லத் தலையை மட்டும் நீட்டிப் பார்த்த

ஜெகதீஸ் அருகிலிருந்த ஒரு கம்ப்யூ
சர்க்யூட் சேனலைத் திறந்து - இன்டிக் கே
எதையோ தேடிக் கொண்டிருந்தார்.

உதயாவின் பார்வை சுற்றுமுற்றும் அலை
முடிவில்-

சின்னதாய் - கொஞ்சம் தள்ளி நின்றிருந்த
பீரோவின் தலைமேல் உட்கார்ந்திருந்த
பிஸ்டலின் மேல் நிலைத்து நின்றது. அதை
மெல்ல ஊர்ந்தாள்.

## 20

**தா**மு நகர்.

போலீஸ் ஜீப் ஒரு பூனையின் லாவகத்
சுதாவின் வீட்டு வாசலில் நிற்க, வீட்டுக்
பூட்டு ஒற்றைக் கண்ணோட மௌனமாய்ப் ப
சுற்றிலும் இருட்டு கனமாய் இருந்தது.

ஜீப்பினின்றும் உதிர்ந்த எல்லே
சேர்ந்தார்கள். (இன்ஸ்பெக்டர் அவினாஷ், ஜ
ஆத்மா, சுவாமி, இரண்டு கான்ஸ்டபிள்கள்)

சுதாவின் வீட்டுக்கு அக்கம்பக்கத்து வீ
ஜன்னல்களிலும், வாசல்களிலும் த
முளைத்து அவர்களையே பார்க்க- இன்ஸ்
அவர்களை நோக்கி நடந்தார்.



ஒரு சிலர் தலைகளை இழுத்துக்கொள்ள, சிலர்
டும் தைரியமாய் நின்றார்கள். அவினாஷ்
டியோடும், முண்டா பனியனோடும்
றிருந்த அந்த நடுத்தர வயது ஆசாமியிடம்
ங்கினார். மெல்லிய குரலில் கேட்டார்.

"இந்த வீடு எப்பவிருந்து பூட்டிக் கிடக்குன்னு
ல்ல முடியுமா...?"

"தெரியலை இன்ஸ்பெக்டர்..."

"இந்த வீட்ல இருக்கிற பொண்ணை உங்களுக்குத்
ரியுமா?"

"தெரியும். அவளைப்பத்தி இங்கே
க்கிறவங்க யாருக்குமே நல்ல அபிப்பிராயம்
டயாது.... அவள் ஒரு மாதிரியான பொண்ணு
ர். எப்போ வீட்லே இருப்பா... எப்போது
ளியே போவான்னு தெரியாது. கடந்த ரெண்டு
ா அந்தப் பெண்ணை யாரோ மூணு பேர் கார்லே
து பார்த்திட்டு போயிட்டிருந்தாங்க..."

அவினாஷ் புருவங்களை அதிகபட்ச உயரத்திற்கு
ர்த்தினார்.

"சைட்! அவங்க யாருன்னு உங்களுக்குத்
ரியுமா?"

"தெரியலை ஸார்..!"

"வந்தவங்க எப்படியிருந்தாங்க?"

"நான் கவனிக்கலை ஸார். ஒரு வேம்ப் வீட்டுக்கு
ர் யாரோ வருவாங்க. யார் யாரோ போவாங்க.
தையெல்லாம் பார்த்திட்டிருக்கிறதா நம்ம
லை...?"

"உங்க பேர்?"

"ஜம்னா தாஸ்...!"

"என்ன தொழில் செய்யறீங்க...?"

"கோயமுத்தூர்ல ரயில்வே ஸ்டேஷன்ல உ
ால் வெச்சு நடத்திட்டிருக்கேன்..."

"மிஸ்டர் ஜம்னா தாஸ்... மறுபடியும் அந்த
ட்களைப் பார்த்தா உங்களாலே அடையாளம்
டுபிடிக்க முடியுமா...?"

"முடியும்னு நினைக்கிறேன் ஸார்..! ஏன் ஸார்
ந்தப் பெண்ணுக்கு ஏதாவது ஆபத்தா?"

அவினாஷ் சிரித்தார். ''ஆபத்து
பொண்ணுக்கு இல்லை! அந்தப் பொண்
இல்லொரு பொண்ணுக்கு ஆபத்து உ
யிருக்கு. அவளை இப்போ தேடிட்டிருக்
அவினாஷ் ஜம்னாதாஸை விட்டு
மறுபடியும் கதவிட்டு வாசலுக்கு வந்தார்.
ஆத்மா இன்னமும் அதிர்ச்சியில் இருந்
''அவன் உஷாராயிட்டா இல்லெபெ
ஜவஹர் படபடத்தான்.
''இப்ப என்ன செய்யலாம்..?'' - அவி
மோவாயைத் தடவினார்.
''விடிய விடிய காத்திருந்தாலும், அவ
போறதில்லை. பூட்டை உடைக்க உள்ளே
பார்த்தா அவளைப் பத்தின தடயம் ஏ
கிடைக்கலாம்.'' - சுவாமி மெல்லிய கு
சொன்னான்.
''கோ அஹெட் இட்''- என்றார் அவினாஷ்.
கான்ஸ்டபிள்களில் ஒருவர் பூட்டை க
அடித்து நகக்கலாக்கி- கதவைப் பிளந்துவிட
எல்லாருமாய் உள்ளே போனார்கள்.
வீட்டின் ஒவ்வொரு மில்லி மீட்டரையும்
ஆரம்பித்தார்கள். அர்ச்சனாவின் கட
சம்பந்தமாய் எதாவது ஒரு 'சின்ன' 'இக்
இடத்திலாவது கிடைக்குமா?
மேசைடிராயரை-
பீரோவை-
ஷெல்ஃபை.
சுத்தமாய் அலம்பி ஒவ்வொருத்தராய் சே
கொண்டிருந்தார்கள்.
ஜவஹர் மட்டும் அதிகபட்ச தீவி
இருந்தான்.

## 21

யூனிட்டின் கதவு திறக்கப்பட்டு- பிரவீன் உ
நுழைவதைக் கண்டதும்- உதயா கம்ப்யூட்ட
பின்னால் இன்னும் நன்றாக ஒண்டிக் கொண்



ளைக் கொப்பளிக்க உள்ளே வந்தான் பிரவீன்.
ரிந்திருந்த பேண்ட்டிலும் ஷர்ட்டிலும் திட்டு
ட மண். கைகளில் மணல் திற்றுக்கள்.
வா ப்ரவீன்.'' என்றார் ஜெக்தீஸ்.
ரவீன் அவரை நெருங்கினான்.
''ஒதெறிதாக முடிச்சுட்டியா ப்ரவீன்?''
சக்ஸஸ்!''
''தொந்தரவு குடுத்தானா?''
''இல்லே... கலவரமாச் செத்தான். ஒரே குழியில
ரண்டு பேரும் அடங்கிட்டாங்க.'' ப்ரவீன்
த்தான்.
''வழியில் எதும் இடைஞ்சல் இல்லையே?
''வந்தது.. சமாளிச்சிட்டேன்!''
''சரி வா. அர்ச்சனாவைக் கவனிக்கலாம்.
வீன். அவளுக்கு மயக்கம் தெளியற நேரம்
ரும்பிட்டிருக்கு...''
''எம்.சி.சி. யூனிட் ஆரோக்கியமா இருக்கா
ர்?''
''பர்ஃபெக்ட். உதயாவை கம்ப்யூட்டரைஸ்ட்
ண்ணி நாலுநாள் ஆகுது ப்ரவீன். இட் விஸ்பி
ஸ்ரைட். நீ அர்ச்சனாவை யூனிட்டுக்குக்
ண்டா.''
ப்ரவீன் அர்ச்சனாவை நெருங்கினான்- முதுகுக்கடி
லும் பின்புறத்திலும் கையைக் கொடுத்து
ப்படியே வாரிக்கொண்டு யூனிட்டைத்
ாட்டான்.
ிவால்விங் நாற்காலியில் அவளைக் கிடத்தி-
மட் போனைத் தலையில் பதித்து -
ற்றுக்கணக்கான ஒயர் சமாச்சாரங்களை
னுக்கமாய்ப்பொருத்தி- 'ஆன்' ஸ்விட்சில் விரலை
வத்தான்.
''பிரவீன்! ஒரு நிமிஷம்!''
யூனிட்டைக் கடைசி நிமிஷ ஆயத்தத்திற்கு
ட்படுத்திக் கொண்டிருந்த புரபசர் ஜெக்தீஸும்-
'ஆன்' ஸ்விட்சை அழுத்தப்போன ப்ரவீனும்-
டென்று திரும்பினார்கள்.
உதயா டிஜிட்டல் கம்ப்யூட்டரின் மறைவிலிருந்து
வெளிப்பட்டுக் கொண்டிருந்தான்.

வலது கையில் - விரல்களின் அழுத்…
பிடிப்பில் பிஸ்டல் உட்கார்ந்திருந்தது. ட்…
ஆட்காட்டி விரல் அசைந்தது.

"உத... யா... நீயா?" ஜெகதீஸ் வெளுத்…

"நானேதான் புரபசர், உங்களால் கம்ப்யூ…
செய்யப்பட்ட அதே உதயாதான்.."

ப்ரவீன் சீறினான். "உதயா. நீ எப்படி …
வந்தே?"

"அதையெல்லாம் அப்புறமாச் சொல்…
மொதல்ல நான் கேட்கிற கேள்விகளுக்கு ஒழு…
பதில் வரணும். யார் இந்தப் பொண்ணு?"

"......" இரண்டு பேருமே மௌனித்தார்…

"புரபசர்! ப்ரவீன்! நான் சுட…
தயங்கமாட்டேன். நிச்சயமா உங்க முழங்கா…
கீழே சுட்டுடுவேன்."- பிஸ்டலை ஜெக…
முழங்காலை நோக்கித் தாழ்த்தினாள் உதயா.

புரபசர் அவஸ்தையாய் நெளிந்தார். ப்ரவீ…
பார்த்தார்.

"ப்ரவீன் சொல்லிடு...!" என்றார் ஹீனமாய்.

ப்ரவீன் உதயாவை முறைத்தான். …
சொல்லாமல் நின்றான்.

"ம்... சொல்லு...! புரபசரோட முழங்கால்…
சிதர் தேங்காய் மாதிரி சிதறிப்போக நீ ஆசை…
சொல்லாதே..."

"சுட்டுடாதே சொல்றேன்.."

"சொல்லு."

"அவ பேர் அர்ச்சனா."

"புரபசர் ஆத்மாவோட பொண்ணுதானே?"

"ஆமாம்."

"அவளை எதுக்காக கம்ப்யூட்டரைஸ் பண்…
போறீங்க...?"

"டெக்னிகல் சீக்ரெட்ஸுக்காக...!"

"சோதனைக்காக. என்னையும்
கம்ப்யூட்டரைஸ்ட் பண்ணிப் பார்த்திருக்…
இல்லையா?"

"உம்..."

"சதர் காலை நான் சுவாசிச்ச அன்னி…
தானே?"



"உம்..."

…கம்ப்யூட்டரைஸ்ட் செய்யப்பட்ட யாரும் ஒரு
…த்துல செத்துடுவாங்க இல்லையா ப்ரவீன்?

"உம்..."

உதயா விரக்தியாய்ப் புன்னகைத்தாள். "எனக்குத்
…ரியாமலே என்னோட வாழ்க்கைக்கு முற்றுப்
…ள் வெச்சிருக்கீங்க. தாங்க்யூ ஃபார்… என்னோட
…க்கு அழப்போற ஒரே ஜீவன் ஆனந்த்தான்..."
கண்ணீரால் கலந்த விழிகள் படபடத்தன
…யா.

அதே விநாடி,

ப்ரவீன் சட்டென்று எதிரேயிருந்த - மெயின்
…விட்ச் போர்டை நோக்கி பாய்ந்து - ஸ்விட்சை
…ழுத்தான். மின்சாரம் செத்துப்போக..
…யூனிட் முழுவதும் அட்டைக் கரியாய் இருட்டு
…கார்ந்து ப்ரவீன் கத்தினான். "புரபசர், நீங்க அந்தப்
…க்கமா நகர்ந்துட்டு வாங்க; நான் இந்தப் பக்கம்
…றேன். அவளை அமுக்கிடலாம்...."

உதயா சரேலென பின்வாங்கி நகர்ந்தாள்.
இருட்டில் குறிபார்க்க முயன்று தோற்றாள்.
…னக்குள் பயம் தொண்டையடைத்தாலும் தைரியத்தை
…ரவழைத்துக் கொண்டு கத்தினாள்.

"ப்ரவீன்! புத்திசாலித்தனமாக நடந்துக்கிட்டதாக
…னைச்சுக்காதே. இன்னும் கொஞ்ச நேரத்திலே இந்த
…ருட்டு கண்ணுக்குப் பழகிடும். அப்புறம் உங்க
…டமாட்டம் சுலபமாக எனக்குத் தெரிய
…ரம்பிச்சுடும் சுடுவேன்..."

"சுடு..." என்றான் ப்ரவீன்.

உதயா ஒரு கம்ப்யூட்டரைக் கட்டிக்கொண்டு
…ட்கார்ந்தாள். விழிகளை கொட்டிக் கொட்டி
இருட்டில் அவர்களைத் தேடினாள். இருட்டு.
…சப்தம்.

உதயா மெல்ல நகர்ந்தாள்.

கொஞ்சம் தொலைவில் யாரோ அசைவது
போலத் தோற்றம். அதைக் குறி வைத்து ட்ரிக்கரை
சுண்டினாள்.

'விஷ்ஷ்... ஷ்... ஷ்...' தோட்டா பாய்ந்து - ஒரு

கம்ப்யூட்டரின் உடம்பை பலத்த சத்த
காயப்படுத்தியது.

நான்கு கால்களால் மெல்லத் தவழ்ந்த
இருட்டு கண்களுக்கு நட்டப் புறவைக் கொடு
புலப்பட ஆரம்பித்தது.

ப்ரவின் இரண்டாவது செக்டாரில் - உத
இடது புறமாய் கம்ப்யூட்டர்களுக்கு பி
அரிந்து கொண்டிருந்தான். டிரிக்கரைக் கண்
ப்ரவீன் தரையோடு தரையாய் படுத்துக்
மற்றொரு கம்ப்யூட்டர் அபயக் குரல் கொடு

## 22

ஜவஹர் அறைகளைச் சுற்றிச் சுற்றி வந்
இன்ஸ்பெக்டர் அவினாஷும், கவ
ஆத்மாவும் வெகுவாய் சோர்ந்து சோபாவில்
திருந்தார்கள். ஆத்மா மகளின் கவ
ரொம்பவும் சிதிலமடைந்திருந்தார்.

''இன்ஸ்பெக்டர்... அர்ச்சன
கண்டுபிடிச்சிடுவீங்களா?'' - அடிக்கடி கேட்

''ஷ்யூர் ஆத்மா.. விடியறதுக்குள்ளே
பிடிச்சுடலாம்...!

ஆத்மா சன்னமான குரலில் புலம்பி
''அர்ச்சனாவை எந்த பர்ப்பஸுக்காகக் கடத்தி
காங்கன்னு தெரியலை இன்ஸ்பெக்டர்...
என்னிக்குமே ஹார்ம்லெஸ்தான்...!''

''ஆத்மா... அர்ச்சனாகிட்ட அபரிமிதமான
இருக்கு. அதுக்காகவே யாராவது கடத்திருக்க
எல்லாப் பக்கமும் வயர்லஸ் உயிரோடு இ
கடத்தினவன் யாராயிருந்தாலும் மாட்டிக்குவா

இன்ஸ்பெக்டர் பேசிக்கொண்டிருந்த
நேரம்-

ஜவஹர் கீழே குனிந்து- சோபா
அடியிலிருந்து அந்த கசங்கிய காகிதத்தை எடுத்
பிரித்தான். பார்த்தான்.

பால்பாயிண்ட் பேனாவால் சில கோடுகள்.
சதுரம் சதுரமாய் சில கட்டங்கள். அம்புக்கு



ஆங்கில எழுத்துக்கள் P.S.E.

காகிதத்தில் மறுபக்கத்தைத் திருப்பினான்.

டைப் அடித்த மாதிரி சங்கேத எழுத்துக்கள்,
டிஜிட்டல் கரெக்ஷன்ஸ்.

''இன்ஸ்பெக்டர்... இதைக் கொஞ்சம் பாருங்க..''
- ஜவஹர் காகிதத்தை நீட்ட இன்ஸ்பெக்டர்
வாங்கினார். பார்த்தார். ஆத்மாவும் தலையைச்
சாய்த்துப் பார்த்தார்.

அடுத்த வினாடி- அவருடைய உடம்பில் ஒரு
விறைப்பு.

''இன்ஸ்பெக்டர்... அந்தக் காகிதத்தை இப்படிக்
குடுங்க...''

இன்ஸ்பெக்டர் கொடுத்தார்.

ஆத்மா அந்தக் காகிதத்தை சில விநாடிகள் உற்றுப்
பார்த்தார். ''இன்ஸ்பெக்டர் இந்தக் காகிதம் ஒரு
கம்ப்யூட்டர் பயன்படுத்தின காகிதம். ஒரு டிஜிட்டல்
கம்ப்யூட்டரின் கரெக்ஷன்ஸ்- ரீடபிரிங்ஸ்ட்டார்க்ஸ்
நிறைய இருக்கு. இந்தக் காகிதத்தை ஒரு ஸீப் யூஸ்
பர்ப்பஸுக்காக உபயோகப்படுத்தியிருக்காங்க...''

''நீங்க சொல்றபடி வெச்சுக்கிட்டா கம்ப்யூட்டர்
சம்பந்தப்பட்ட ஆசாமி யாரோ ஒருத்தரோட கதா
வீட்டுக்கு வந்திருக்கணும்.''

''மே... பி...''

''அப்போ... அர்ச்சனாவை கதாவோட உதவி
யோடு கடத்திக்கிட்டு போனது கம்ப்யூட்டர்
சம்பந்தப்பட்ட ஆசாமிதான்னு நீங்க நினைக்க
றீங்களா ஆத்மா...

''எம் மனசுக்கு அப்படித்தான் படுது...
ஒருவேளை என்னோட யூகம் தப்பாகக் கூட
இருக்கலாம். ஒரு ஊகம்தான்...''

''இந்த நிலைமையிலே உங்களுக்கு யார்
மேலயாவது சந்தேகம் வருதா புரபசர்... நீங்க யாரைச்
சந்தேகப்பட்டாலும் தைரியமாச் சொல்லலாம்..''

ஆத்மா யோசித்தார்.

''கம்ப்யூட்டர் சம்பந்தப்பட்ட எல்லாருமே பெரிய
குடும்பங்களைச் சேர்ந்தவங்க.. எல்லோருமே
என்கிட்ட அன்பாப் பழகறவங்க. நான் யாரைச்

சந்தேகிக்க முடியும் இன்ஸ்பெக்டர்...'?'

ஆத்மா தயக்கமாய் சொல்லிக்கொண்டிருந்த அந்த விநாடி- அடுத்த அறையிலிருந்து ஜவஹர்சுத்திலால் குரலில் உற்சாகம்.

''இன்ஸ்பெக்டர்...! இங்கே கொஞ்சம் வாங்க... க்விக்...''

இன்ஸ்பெக்டரும், ஆத்மாவும், சுவாமியும் எழுந்து போனார்கள்.

ஜவஹர் சுவரிலிருந்த அந்த விநாயகர் காலண்டரைக் காட்டினான்.

''அந்தக் காலண்டரைக் கொஞ்சம் பாருங்க இன்ஸ்பெக்டர்.

அவினாஷ் அருகில் சென்று பார்த்தார்.

கூர்மையாய்ப் பார்த்தார்.

முகம் மகிழ்ச்சியில் பம்ம- திரும்பினார்.

''ஜவஹர், ரியலி யூ ஆர் ஹேவிங் எ கிங் பிரெய்ன்...''

சளைக்கும்வரை கைகளைக் குலுக்கினார்.

## 23

உதயாவுக்கு மூச்சு இரைத்தது.

கையிலிருந்த பிஸ்டல் வேர்வையில் வழுக்கியது. பார்வையை உன்னிப்பாக்கிக் கொண்டு நகர்ந்தாள்.

அவர்கள் எந்தப்பக்கம் இருக்கிறார்கள்?

முன்னாலா? பின்னாலா?

திரும்பிப் பார்த்தாள்.

இருட்டில்- எல்லாமே நிசப்தமாய் இருந்தது. கம்ப்யூட்டர் கன்வர்ஷனுக்காக பரப்பப்பட்டிருந்த உதிரி பாகங்கள் வழிபூராவும் தட்டுப்பட ஜாக்கிரதையாய் வளர்ந்தாள்.

சட்டென்று-

அவளுக்கு முன்னால் பத்தடி தொலைவில் ஒரு அசைவு... ஒரு கம்ப்யூட்டரின் மறைவிலிருந்து இன்னொரு கம்ப்யூட்டரின் மறைவுக்கு யாரோ தாவும் முயற்சி.



ட்ரிக்கரைச் சுண்டினான்.

''விஷ்ஷ்ஷ்...''

கண்ணாடி ஜன்னல் ஒன்று சட சடவென்று சத்தத்தோடு நொறுங்கியது.

சத்தம் அடங்கியதும்-

மறுபடியும் நகர்ந்தாள் உதயா.

முன்னால்தான் இருக்கிறார்கள்.

அங்குலம் அங்குலமாய் பின்னோக்கி நகர்ந்து- ஜாக்கிரதை கனத்தோடு பார்வையைச் சுழற்றி இருட்டின் அடர்த்தியில் அவர்களைத் தேடினாள்.

சில நிமிஷங்களுக்கு கனத்த மௌனம்.

பிஸ்டலோடு மண்டியிட்டு உட்கார்ந்தாள் உதயா.

சட்டென்று அவளுக்கு இடது பக்கம் ஒரு அசைவு.

யாரோ தரையோடு தரையாய் படுத்து நகர்கிற மாதிரி.

அசைவை உன்னிப்பாய் குறி வைத்து-

ட்ரிக்கரை சுண்ட....

எங்கோ ஒரு மூலையில் கண்ணாடி ஜன்னலொன்று தொலைதூர இடியைப்போல் சத்தம் எழுப்பியது.

மறுபடியும் பின்னுக்கு நகர்ந்தாள் உதயா.

அதே விநாடி....

ப்ரவீன் கம்ப்யூட்டரின் மறைவிலிருந்து வெளிப்பட்டு இருட்டில் அவளை நோக்கி வந்தான் நிதானமான நடை-

பிஸ்டலை உயர்த்தினாள் உதயா.

ட்ரிக்கரை வளைத்து ஏவினாள்.

க்ளிக்..

''பிரயோஜனமில்லை உதயா. பிஸ்டலோடு வயிறு இந்த நிமிஷம் காலி. ஒவ்வொரு தோட்டாவையும் எண்ணிகிட்டே வந்தேன். அந்த ஆயுதம் இனி உனக்கு வேண்டாம்...'

அவளை நெருக்கினான்.

உதயா எழுந்து பின்வாங்கி ஓட முயன்றாள்.

அப்போதுதான் உணர்ந்தாள்- தான் சாமர்த்தியமாய் யூனிட்டின் மூலையை நோக்கி

தகர்க்கப்பட்டிருப்பதை

இடது கைப்பக்கமிருந்து ஜெக்தீஸ் திடீரென வெளிப்பட்டார்.

''பிரவீன் இந்த இருட்டுல விளையாடினது போதும், மெயின் ஸ்விட்சை ஆன் பண்ணு..''

பிரவீன் ஸ்விட்சை ஆன் செய்ய,

விளக்குகள் உயிர்பெற ஆரம்பித்தது.

ஜெக்தீஸ் நாலே எட்டில் உதயாவை நெருங்கி, அவளுடைய கையிலிருந்த பிஸ்டலை பிடுங்கினார், பிரவீனிடம் வீசினார். 'ப்ரவீன்! பிஸ்டலின் வயிற்றை நிரப்பிட்டு வா. ரெண்டு நாள் கழிச்சு சாவகாசமா சாகப்போகிற உதயா இன்னிக்கே சாகட்டும்...''

உதயா சலனமில்லாமல் நின்றிருந்தாள்.

ஜெக்தீஸ் தொடர்ந்தார். ''சாகப்போறதுக்கு முன்னாடி சில பேர்க்கு மரண பயம் வருமாம். உனக்கும் அது வந்திருக்கு உதயா, ரெண்டு நாள் பொறுத்திருந்தா ஆனந்த் மடியில் தலையை வெச்சுக்கிட்டே நீ உயிரை விட்டிருக்கலாம். அவசரப்பட்டு உள்ளே வந்துட்டே. இந்த யூனிட்டுக்குள்ளே நுழைஞ்சு உயிரோடு திரும்பிப் போனவங்க ரொம்ப கம்மி. கடைசியாப் பலியானவங்க எத்திராஜ், சுதா. அந்த வரிசையிலே நீயும் சேரப் போறே... உதயா!''

''எக்ஸ்க்யூஸ் மீ மிஸ்டர் ஜெக்தீஸ்!''

பின்புறம் குரல் கேட்டுத் திரும்பினார் ஜெக்தீஸ். வயிறு காலியான பிஸ்டலோடு ஷெல்ப்பை நோக்கிப் போய்க் கொண்டிருந்த பிரவீனும் அதிர்ந்து போய்த் திரும்பினான்.

இன்ஸ்பெக்ர் அவினாஷ்.

ஜவஹர்.

ஆத்மா.

சுவாமி- கூடவே ஆனந்த்.

வரிசையாய் நின்றிருந்தார்கள். முகங்களில் புதிதாய் கவர்ந்த புன்னகைகள்.

ஜவஹர் ஜெகதீஸை நெருங்கி அவர் தோளைத் தொட்டான். ''ஸாரி புரபசர் ஸார்! கடைசி



நிமிஷத்துல உங்க தொழிலுக்குத் தொந்தரவாய் வந்து நின்னுட்டோம்...!''

ஜெகதீஸ் சகலமும் அதிர்ந்திருந்தார்.

பிரவீன் இருட்டடித்த முகத்தோடு நின்றான்.

இன்ஸ்பெக்டர் நெருங்கினார். ''புரபசர்...! நாங்க எப்படி இவ்வளவு சரியா இங்கே வந்தோம்னு யோசிக்கிறீங்களா..? காரணம் சொல்லப்போனா ரொம்பவும் ஈஸி... இந்தக் காலண்டரைப் பார்க்கறீங்களா கொஞ்சம்...'' கையில் சுருட்டி வைத்திருந்த காலண்டரைப் பிரித்தார்.

''இந்தக் காலண்டர் சுதா வீட்டில் மாட்டியிருந்த காலண்டர். இதுல இருக்கிற எங்கேஜ்மெண்ட் காலத்தை உன்னிப்பாப் பாருங்க- காரணம் புரியும்''.

ஜெகதீஸ் பார்த்தார்.

ஜூலை 1 பாஸ்கரன் - கனரா பேங்க்.

ஜூலை 2 - வில்லியம்ஸ் - சிட்கோ

ஜூலை 3- கார்மேகம்- கோபிஸ்பின்னிங் மில்

தேதிவாரியாய் சுதாவின் எங்கேஜ்மெண்ட் பட்டியல் தொடர இன்றைய தேதி 20க்கு நேராய்-

'புரபசர் ஜெக்தீஸ்' எக்ஸ்ட்ரோ மெக்கானிக் கம்ப்யூட்டர்சர்வீஸ், என்றிருந்தது.

ஜெகதீஸ் ஆத்திரமாய் உதட்டைக் கடித்துக் கொள்ள இன்ஸ்பெக்டர் தொடர்ந்தார். ''சுதாவோட இந்த எங்கேஜ்மெண்ட் குறிப்பு மட்டும் இல்லேன்னா நாங்க இங்கே வரச் சான்ஸே இல்லை. சுதாவைப் பத்தி உங்ககிட்ட விசாரிக்கத்தான் வந்தோம். காம்பௌண்ட் கேட் கிட்ட வரும்போது அங்கு மிஸ்டர் ஆனந்த் நின்றிருந்தார். உதயாவைப் பத்தி விசாரிக்க வந்ததாகவும் உள்ளே ஏதோ கண்ணாடி ஜன்னல்கள் உடையற சத்தம் கேட்டதாகவும் சொன்னார். உஷாரானோம். உள்ளே ஏதோ நடக்கிறது என்கிற உள்ளுணர்வோடு ஜாக்கிரதையா உள்ளே வந்தோம். காட் த போர்ட்ஸ்.. பை... த... பை... புரபசர்... இந்தக் காகிதம்- சுதா வீட்லே சோபாவுக்குக் கீழே கிடந்தது- உங்க கம்ப்யூட்டர் சம்பந்தப்பட்ட காகிதம்தானே...?''

ஜெக்தீஸ் அந்தக் காகிதத்தைப் பார்த்து விட்டு -

தலையைத் திருப்பிக்கொண்டார். ஒரு கான்ஸ்டபிள் ஜெயந்தியை நோக்கிப்போக மற்றொரு கான்ஸ்டபிள் ப்ரவீணை நோக்கி நெருங்கினார்.

இன்ஸ்பெக்டர் ப்ரபசர் ஆத்மாவின் பக்கமாய்த் திரும்பினார். "இந்தக் கேஸில் ஜவஹருக்கு தனிப்பட்ட முறையிலே நன்றி சொல்லியாகணும். 'அவார்'டுக்கு எழுதணும்...! ஜவஹர்...! ஜவஹர்... எங்கே காணோம்...?"

சுற்றும் முற்றும் பார்த்தார் இன்ஸ்பெக்டர்.

ஆத்மா புன்னகையோடு அந்தப் பக்கமாக கையைக் காட்டினார்.

இன்ஸ்பெக்டர் திரும்பிப் பார்க்க-

ஜவஹர் மயக்கம் தெளிந்துவிட்டிருந்த அர்ச்சனாவைத் தன் தோள்மேல் சாய்த்தபடி மெதுவாய் வந்து கொண்டிருந்தான் அவர்களுக்கு சற்றுத் தள்ளி.

இன்னும் இரண்டு நாள் வாழ்க்கையை மட்டுமே மிச்சம் வைத்துக் கொண்டிருந்த உதயா- ஆனந்தின் மார்பில் முகம் புதைத்து மௌனமாய் அழுது கொண்டிருந்தாள்.



# 1

**வி**ஜய் பட்டுவேட்டி - பட்டு சட்டை சகிதமாய் சோபாவில் அமர்ந்திருந்தான்.

ஆலிவ் நிற சில்க்கில் தேவதை மாதிரி இருந்த அவனுடைய புத்தம் புது மனைவி கவுசிகா அவ்வப்போது அவன் முன்னால் தோன்றுவதும் மறைவதுமாய் இருந்தாள். காலையில் விஜய் கையால் வாங்கிய தாலி மஞ்சள் மெருகோடு பளிச்சென்று அவள் கழுத்தில் அசைந்து கொண்டிருந்தது.

வால்கினாக் முட்கள் எட்டு மணியை அடிக்கும் முஸ்தீபுகளில் ஈடுபட்டிருந்தன.

உறவு ஜனங்கள் கலைந்திருந்தார்கள். முக்கிய உறவினர்களை மட்டும் அந்த மினி பங்களாவுக்குள் பார்க்க முடிந்தது.

குறுக்கே போன ஒரு சிறுமியை அழைத்தான் விஜய்.

''இங்கே வாம்மா...''

''என்ன அங்கிள்...?''

''அங்கிளுக்கு தாகமா இருக்கு... கவுசிகா அக்காவை தண்ணி கொண்டுவரச் சொல்லு...''

''சரி அங்கிள்...''

அந்தச் சிறுமி பட்டுப்பாவாடையை உயர்த்திப் பிடித்துக் கொண்டு உள் அறை ஒன்றை நோக்கி வேகமாய் ஓடிச்சென்றாள்.

சிலவிநாடிகளில் கண்ணாடி தம்ளரில் நிரப்பிய ரஸ்னாவோடு கவுசிகா வந்தாள்.

மெல்லிய குரலில் சொன்னாள்.

''இந்தாங்க ரஸ்னா...''



''நான் தண்ணிதானே கேட்டேன்... நீ ரஸ்னா கொண்டு வந்திருக்கே...?''

''உங்களுக்குத் தண்ணி தாகம் இல்லைன்னு எனக்குத் தெரியும்... அதனாலதான் ரஸ்னா கொண்டு வந்தேன்...''

''என்ன சொல்றே...?''

''நான் சொல்றது சரியா இல்லையான்னு சொல்லுங்க... உங்களுக்கு தாகம் இல்லைதானே...?''

விஜய் புன்னகைத்துக் கொண்டே தலையை ஆட்டினான்.

''ஆமா... எப்படிக் கண்டு பிடிச்சே...?''

''நீங்க அந்த சின்னப் பொண்ணுகிட்டே என்ன சொல்லி அனுப்பினீங்க...?''

''என்ன சொல்லி அனுப்பினேன்...? தாகமா இருக்கு... தண்ணி கொண்டுவரச் சொல்லுன்னு சொன்னேன்...''

''தாகமா இருக்கு... கவுசிகாவை தண்ணி கொண்டுவரச் சொல்லுன்னுதானே சொன்னீங்க...? நிஜமாவே உங்களுக்கு தாகமா இருந்திருந்தா தண்ணி கொண்டுவான்னு மட்டும் சொல்லியிருப்பீங்க... குறிப்பாக என்னைக் கொண்டுவரச் சொன்னதிலிருந்தே நீங்க தாகத்துக்காக தண்ணி கேக்கலைன்னு தெரிஞ்சிகிட்டேன்...''

''புத்திசாலிப் பொண்ணுதான்... ஆனா உங்க வீட்டில் நீதான் அப்பப்ப என்னை வந்து கவனிச்சிக்கணும்ன்னு மட்டும் உனக்குத் தோணலையே...? அம்போன்னு விட்டுட்டு உள்ளே போயிட்டே...''

''சொந்தக்காரங்க யாரோ உங்ககூடப் பேசிட்டு இருந்தாங்களே...?''

''அவங்க அப்பவே போயிட்டாங்க...''

''அப்பா இருந்தாரே...?''

''அவர் கூடவும் எவ்வளவு நேரம் பேசிட்டிருக்க முடியும்...? ஜெனரேஷன் கேப்... எனக்கும் போரடிக்கும்... அவருக்கும் போரடிக்கும்...''

''நமக்குக் கல்யாணம் ஆகி இன்னும் முழுசா பனிரெண்டு மணி நேரம் கூட ஆகலை... சும்மா உங்ககிட்டே வந்து நின்னேன்னா 'ரெண்டும் ரொம்பத்தான் வழியுது'ன்னு எல்லாரும் கிண்டல் பண்ணுவாங்க...''

''யார் அப்படிக் கிண்டல் பண்றது...? 'அவர்கிட்டே நானும் என்கிட்டே அவரும் வழியறதுக்காகத்தான் இன்னிக்கு காலைல சுபயோக சுபமுகூர்த்தத்தில் பெரியவங்க எல்லோருமா சேர்ந்து லைசென்ஸ் கொடுத்திருக்காங்க'ன்னு அவங்ககிட்டே சொல்லு...''

''அய்யோ... அப்புறம் அதிகமா கிண்டல் பண்ண ஆரம்பிச்சிடுவாங்க... சரி... ரஸ்னாவைக் குடிச்சிட்டு சீக்கிரம் தம்ளரைக் கொடுங்க...''

''என்ன அவசரம். கொஞ்ச நேரம் நில்லு...''

''எனக்குக் கால் வலிக்குது...''

''அப்படின்னா பக்கத்தில் உட்காரு...''

''ஊகூம்...''

''என்ன நீ... பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவள் மாதிரி இப்படி பிகு பண்ணிக்கறே...?''

''பிகு பண்ணலைங்க... எனக்குக் கூச்சமா இருக்கு...''

''அடக்கடவுளே... இன்னும் கொஞ்ச நேரத்தில் நமக்கு முதலிரவு... இப்படிக் கூச்சப்பட்டின்னா எப்படி...?''



''நீங்க பயப்படற அளவுக்கெல்லாம் நான் பழமைவாதி இல்லை... நல்லா வாய் வைச்சுக்கோங்களேன்... ரெண்டு நாள் போச்சுன்னா சரியாயிடும்... சரி... தம்ளரைக் கொடுங்க...''

''தர்றேன். அவசரப்படாதே... எனக்கு சில தகவல்கள் வேணும்...''

''என்ன தகவல்...?''

''முதலிரவு ஏற்பாடெல்லாம் எந்த அளவில் இருக்கு...''

''ச்சிய்ய்...''

''என்ன ச்சிய்ய்...?''

''என்கிட்டே போய் இதெல்லாம் கேக்கறீங்க...?''

''உங்க அப்பாவைக் கூப்பிட்டுக் கேக்கவா...?''

''அய்யோ... கொஞ்சம் பேசாம இருங்க...''

''அப்போ நீயே சொல்லு... சுமார் எத்தனை மணிக்கு நம்மை நிம்மதியாப் பேசவிடுவாங்க...? காலைல இருந்து தெரிஞ்சவங்க... தெரியாதவங்க... எல்லாரையும் பார்த்து சிரிச்சு... கைகுவிச்சு... கைகுலுக்கி... காலில் விழுந்து நமஸ்கரிச்சு... அலுத்துப் போச்சு...''

''மணி எட்டுதானே ஆகிறது... இன்னும் நீங்க டிபன்கூட சாப்பிடலை...''

''அதெல்லாம் வேண்டாம்மா... கொஞ்சம் சீக்கிரம் ஆகட்டும்...''

''காய்ஞ்ச மாடு கம்பில் புகுந்த மாதிரி பறக்காதிங்க... ஆக்கப் பொறுத்தவர் ஆறப் பொறுக்கணும்.'' கையைக் குவித்தான்

விஜய்.

''விட்டா பாரதிராஜா படத்தில் வர்ற கிழவி மாதிரி பழமொழி மழையாப் பொழிஞ்சு தள்ளிடுவே போலிருக்கே...? இந்தா தம்ளர்... எடுத்துட்டு நடையைக் கட்டு...''

வெட்கச் சிவப்போடு சிரித்துக் கொண்டே அவள் உள்ளறைக்குள் சென்றபோது -

வாசலில் கார் சத்தம்.

போர்டிகோவுக்குப் பார்வையைத் திருப்பினான் விஜய்.

கிரீம் நிறத்தில் மாருதி ஜென் வந்து நின்றிருந்தது.

காருக்குள்ளிருந்து பெரிய பிரசன்டேஷன் பேக்கோடு இறங்கிய இளைஞனை - சிட் அவுட்டில் அமர்ந்து யாருடனோ பேசிக்கொண்டிருந்த கவுசிகாவின் அப்பா வரவேற்றார். மாப்பிள்ளை உள்ளே இருக்கிறார் என்று கை காண்பித்தார்.

கவுசிகாவின் உறவினர் ஒருவர் அவனை உள்ளே அழைத்து வந்தார்.

அவன் உள்ளே வந்ததுமே விஜய் முகம் மலர்ந்தான்.

''டேய்... பரமேஷ்... என்ன இவ்வளவு லேட்டா வந்திருக்கே...?''

''ஸாரிடா விஜய்... நான் பிசினஸ் விஷயமா பாம்பே போயிருந்தேன்... மத்தியான ஃப்ளைட்டில்தான் வந்து இறங்கினேன்...''

''இப்படி எதையாவது சொல்லுவேன்னு தெரிஞ்சுதான் உனக்கு ஒரு மாசத்துக்கு முன்னமே கல்யாணப் பத்திரிகை கொடுத்தேன்... இன்னிக்கு எந்த பிசினஸ் அப்பாயின்மென்ட்டும் வைச்சிக்காதேன்னு



போன வாரம்கூட போன்ல ரிமைண்ட் பண்ணினேன்...''

''இன்னிக்கு நான் எந்த அப்பாயின்மென்ட்டும் வைச்சிக்கலே இல்லை... அப்படியே வைச்சிருந்தாலும்... உன் கல்யாணத்தைவிட எனக்கு எந்த அப்பாயின்மென்ட்டும் முக்கியமில்லை...''

''பின்னே ஏன் காலைல மேரேஜுக்கு வராம இப்போ வர்றே...?''

''கோபிச்சுக்காதே... வானிலை பிராப்ளத்தால் நேத்திக்குப் புறப்பட இருந்த பிளைட் கேன்சல் ஆயிடுச்சு... இன்னிக்குத்தான் வந்து சேர முடிஞ்சுது...''

''எப்பவும் கடுதண்ணியைக் காலில் கொட்டிகிட்ட மாதிரி பறந்துட்டிருப்பே... நான் நினைச்ச மாதிரியே கல்யாணத்துக்கு ஆப்சென்ட் ஆயிட்டே...''

''இந்த ஜென்மம் பூராவும் இதை ஒரு பெரிய குறையா சொல்லிச் சொல்லி புலம்புவே போலிருக்கே...! நான் இல்லைன்னா கல்யாணம் நின்னு போயிடுமா என்ன...? கல்யாணம் எல்லாம் நல்லபடியா முடிஞ்சதா...? அதைச் சொல்லு...''

''அமர்க்களமா நடந்தது... 'பரமேஷ் உன்னோட திக் பிரெண்ட் ஆச்சே... எங்கே காணோம்'ன்னு நம்ம பிரெண்ட்ஸ் எல்லாரும் உன்னைத்தான் கேட்டாங்க... 'பிசினஸ்ல குதிச்சதிலிருந்து அவனுக்கு ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் முக்கியமில்லாமப் போயிட்டாங்க'ன்னு திட்டிகிட்டே அவங்களுக்கு பதில் சொன்னேன்...''

''நான்தான் ஸாரின்னு லேட்டானதுக்குச் சொல்லிட்டேனே...

காரணத்தையும் சொல்லிட்டேன்... சும்மா தொணதொணன்னு அதையே திருப்பித் திருப்பிப் பேசிட்டிருக்காதே... அப்புறம் உன்னை கவனிக்கிற வழியில் கவனிச்சிக்குவேன்...''

''என்ன செய்வே...?''

''இனிமேல் உன்கிட்டே பேசறதுக்கு என்ன இருக்கு... சிஸ்டரைக் கூப்பிட்டு அறிமுகப்படுத்தி வை... எதுவானாலும் சிஸ்டர்கிட்டே கம்ப்ளைண்ட் பண்ணினா அவங்க பார்த்துக்குவாங்க...''

''டேய்... டேய்...''

''மாப்பிள்ளையா லட்சணமா அப்படி ஒரு பயத்தோட இரு...'' - சிரித்துக்கொண்டே பரமேஷ் அன்பளிப்பு பார்சலை முன்னால் வைத்தான்.

விஜய் குரல் கொடுத்தான்.

''கவுசிகா...''

உள்ளே இருந்து வெளிப்பட்டாள் கவுசிகா.

''இவன் பரமேஷ்... எல்.கே.ஜி. படிக்கிற நாளிலிருந்து என்னோட நெருங்கிய நண்பன்...''

கவுசிகா அவனை நிமிர்ந்து பார்த்து மருதாணி டிசைன் ஓடியிருந்த கையைக் கூப்பினாள்.

''வணக்கம்...''

பதில் வணக்கம் சொல்வதற்காக கையைக் கூப்பி கவுசிகாவின் முகத்தைப் பார்த்த பரமேஷ் பவர்கட் ஆனதைப் போல் சட்டென முகம் இருண்டு போனான்.

விஜய் பரமேஷின் தோளைத் தட்டினான்.

''என்னடா... என்னைப் பத்தி கம்ப்ளைண்ட் பண்ணணும்... சிஸ்டரை



அறிமுகப்படுத்தி வை ...ன்னு பறந்துட்டு இருந்தே... இப்போ சைலண்ட் ஆயிட்டே...?''

''சு... சும்மா விளையாட்டுக்காக அப்படிச் சொன்னேன்... இ... இந்தாங்க... என்னோட சிம்பிள் பிரசன்ட்டேஷன்... சிஸ்டர்... இதைக் கொண்டுபோய் உள்ளே வைச்சிடுங்க...''

பரமேஷ் மாறிப்போன முகத்தோடு - சற்றே திணறலோடு பேசியதைக் கவனித்த விஜய் கவுசிகாவிடம் திரும்பிச் சொன்னான்.

''இந்த பிரசன்ட்டேஷன் பார்சலை உள்ளே வைச்சிட்டு வந்துடு...''

''சரிங்க...''

கவுசிகா தலையை அசைத்துவிட்டு உள்ளே போனாள்.

அவள் அந்தப் பக்கம் போனதுமே - பரமேஷிடம் திரும்பினான் விஜய்.

''பரமேஷ்... என்னாச்சு உனக்கு...? கவுசிகாவைப் பார்த்ததுமே ஏன் அப்செட் ஆனமாதிரி ஆயிட்டே...? யாரா இருந்தாலும் அறிமுகமான நிமிடத்திலேயே கலகலப்பா பேசக்கூடிய நீ அவள்கிட்டே பேச விரும்பாத மாதிரி பிரசன்ட்டேஷனைக் கொண்டுபோய் உள்ளே வைச்சிடுங்கன்னு சொல்லி அனுப்பினியே...? ஏன்...?''

பரமேஷ் தயக்கத்தோடு அவனிடம் சொன்னான்.

''உன்கிட்டே நான் தனியா பேசணும்... அதுக்காகத்தான் உன்னோட புது மனைவி கவுசிகாவை உள்ளே போகச் சொன்னேன்.''

''புரியும்படி சொல்லு.''

''நான் சொல்றதைக் கேட்டு அதிர்ச்சி அடையாதே... நீ தாலி கட்டியிருக்கிறியே

கவுசிகா ... அவ ஒரு பிராஸ்டிட்யூட்...! காசுக்காக கற்பை விக்கற விபசாரி...!''

விஜய் அதிர்ச்சியில் உறைந்து போனான்.

## 2

அங்கே நிலவிய கனமான அமைதியை பரமேஷ்தான் கலைத்தான்.

''என்ன விஜய் பேசாம இருக்கே?''

''எனக்கு என்ன பேசறதுன்னே தெரியலை... இதையே வேற எவனாவது சொல்லியிருந்தா இந்நேரம் ஆத்திரத்தோட பாய்ஞ்சு மூஞ்சியில் ஒரு குத்து விட்டிருப்பேன்.''

''உண்மை எப்பவுமே கோபத்தைக் கிளறிவிடற மாதிரித்தான் இருக்கும்.''

''இல்லை... பரமேஷ்... நீ சொல்றதை என்னால நம்ப முடியலை.''

''ஏன்.''

''கவுசிகாவை அப்படிப்பட்ட பொண்ணா என்னால கற்பனைகூடப் பண்ணிப் பார்க்க முடியலை.''

''இந்தப் பொண்ணு கவுசிகாவைப் பத்தி னக்கு எவ்வளவு தூரம் தெரியும்? எத்தனை ளா பழக்கம்?''

''பழக்கம் எல்லாம் கிடையாது பரமேஷ்... இது அரேன்ஜ்டு மேரேஜ்தான்... பொண்ணைப் பார்க்கப் போனப்ப ஒருதடவை தனியா பேசினேன்.''

''அதை மட்டும் வைச்சு அவளை உத்தமபுத்திரின்னு எப்படி முடிவு பண்ண முடியும்?''



''பெரிய அளவில் நல்ல இன்டெலிஜென்ட்டா தெரிஞ்சா.''

''இன்டெலிஜென்ட் கேர்ள் தப்பு பண்ண மாட்டாள்ன்னு சட்டமா இருக்கு? ன்னேயும் இன்டெலிஜென்ட்டா தப்பு ண்ண நிறையவே வாய்ப்பு இருக்கு.''

பரமேஷ் சொன்ன விநாடி...

வளையல் ஓசை கலகலக்க... அங்கே ந்தாள் கவுசிகா.

''ஒரு அஞ்சு நிமிஷத்தில் டிபன் ரெடியாயிடும்... உங்க ஃப்ரெண்டும் ங்களும் ஒண்ணா உக்காந்து சாப்பிடலாம்.''

பரமேஷ் அவசரமாய் மறுத்தான்.

''வேண்டாம்... சாப்ட் ட்ரிங்ஸ் ஏதாவது கொடுங்க... அதுவே போதும்... நோ ார்மாலிட்டீஸ்.''

விஜய் இடையில் குறுக்கிட்டுச் சொன்னான்.

''கவுசிகா...''

''என்னங்க?''

''ரொம்ப நாள் கழிச்சு இவனைப் பார்த்திருக்கேன்... பத்திருபது நிமிடம் நாங்க ஃப்ரீயா பேசணும்ன்னு நினைக்கிறேன்... இங்கே ஹால்ல எல்லாருமே வரப்போக இருக்காங்க.''

கவுசிகா புன்னகைத்தாள்.

''மொட்டை மாடிக்குப் போயிடுங்களேன்... அங்கே சேர்கூடப் போட்டிருக்கு.''

ஹாலின் ஓரத்தில் இருந்த மாடிப்படிகளைக் காட்டினாள் கவுசிகா.

பரமேஷைக் கூட்டிக்கொண்டு பட்டு வேட்டி சரசரக்க - மாடிப் படிகளை நோக்கி நடந்தான் விஜய்.

சுழன்று சென்ற படிகளின் முடிவில் ஒரு வராந்தாவும் - வராந்தா மையத்தில் மொட்டை மாடிக்குச் செல்வதற்கான வழியும் தெரிந்தது.

கதவைத் திறந்தான் விஜய்.

சென்னைக்கே உரிய உப்புக் காற்று ஜிலுஜிலுவென்று இருவரையும் அலம்பிக்கொண்டு வராந்தாவுக்குள் புகுந்தது.

மங்கலான மஞ்சள் பல்பும், முக்கால் நிலாவின் வெளிச்சமும் சேர்ந்து மொட்டை மாடி இருட்டை மசமச வெளிச்ச சூழ்நிலை ஆக்கியிருந்தது.

அங்கே போடப்பட்டிருந்த பாலிமர் நாற்காலிகளை ஆக்ரமித்தார்கள் இருவரும்.

தூரத்து சாலைகளில் மெர்க்குரி வெளிச்சமும், வாகனங்களின் ஹெட்லைட் வெளிச்சமும் தோரணம் மாதிரி அசைந்து கொண்டிருந்தன.

மொட்டை மாடியில் உட்கார்ந்தபின் சொற்ப விநாடி மவுனம் ஊஞ்சலாடியது.

அதை உடைக்கும் விதமாய்ப் பரமேஷைப் பார்த்து இன்னமும் நம்பிக்கை இல்லாத குரலில் வார்த்தைகளை விடுவித்தான் விஜய்.

''எங்க வீட்டில் அவ்வளவு சுலபத்தில் திருமணத்துக்கு ஒத்துக்க மாட்டாங்க பரமேஷ்... நாலு இடம்ங்கறது பத்து இடத்தில் விசாரிச்சு... ஃபேமிலி பேக்ரவுண்ட்... பொண்ணோட பழக்க வழக்கங்கள் எல்லாமே திருப்திகரமா இருந்தாலதான் சம்மதமே தந்திருக்காங்க பரமேஷ்... கவுசிகா நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பொண்ணு.''

பரமேஷ் மெலிதாய்ச் சிரித்தான்.



''குடும்பம் நல்ல குடும்பமா இருக்கலாம் விஜய்... ஆனா இந்தப் பூனையும் பால் குடிக்குமாங்கிற மாதிரி குடும்பத்தை ஏமாத்திட்டு கூத்தடிக்கிற பெண்கள் நிறையப் பேர் இருக்காங்க...''

''கவுசிகா அந்த ரகம்ன்னா நீ சொல்றே?''

''ஆமா...''

''பரமேஷ்...'' என்று அவநம்பிக்கையோடு பேச வந்த விஜய்யைப் பாதியில் மறித்தான் பரமேஷ்.

''இங்கே பாரு விஜய்... ஒரு பொண்ணுமேல அபாண்டமா பழி போடறதால எனக்கு என்ன லாபம்? நான் உண்மையைத்தான் சொல்றேன்.''

''எதை வைச்சு இவ காசுக்காக கற்பை விக்கறவள்ன்னு சொல்றே?''

''காலேஜ் நாட்களிலிருந்தே நான் 'அந்த மாதிரி' இடங்களுக்குப் போற பழக்கம் உள்ளவன்னு உனக்கே தெரியும்... பிசினஸ் ஆரம்பிச்ச பிறகு எனக்கு வாய்ச்ச பிசினஸ் க்ளையண்ட்ஸும் அப்படியே அமைஞ்சாங்க... காரியம் ஆகணும்ன்னா அவங்களுக்கு எல்லா வகையான வசதிகளையும் நான் செஞ்சு தரணும்... எல்லாமே ஹைகிளாஸ் பொண்ணுங்கதான்... பெரும்பாலும் அவங்கவங்க வீடுகளுக்குத் தெரியாம இந்தக் காரியத்தில் ஈடுபடற பெண்கள்தான்... கவுசிகா அந்த ரகத்தைச் சேர்ந்தவள்தான்.''

சில விநாடி தயக்கத்துக்குப் பிறகு கேட்டான் விஜய்.

''ஏன் பரமேஷ்... நீ பார்த்தது ஏன் வேற ஒரு பொண்ணா இருக்கக் கூடாது?''

''என்ன சொல்றே?''

''கவுசிகாவைப் போலவே சாயல் உள்ள வேற யாராவது ஒரு பெண்ணாக்கூட இருக்கலாமே.''

புன்னகைத்தான் பரமேஷ்.

''ஏன் சிரிக்கறே?''

''தாலி கட்டிட்டோமேங்கற தவிப்பில் நீ, அவ அப்படி இருக்கக் கூடாதுங்கறதுக்கான எல்லா சாத்தியக்கூறுகளையும் யோசிக்கறே... ஆனா நிஜம் கூடற மாதிரிதான் இருக்கு... நான் பார்த்தது இதே கவுசிகாதான்...''

''எப்படி அடிச்சு சொல்றே?''

''ஒரே சாயல்ல ரெண்டு பெண்கள் இருக்கலாம்... ஆனா அந்த ரெண்டு பெண்களுக்கும் மச்சம் கூடவா ஒரே மாதிரி இருக்கும்? கவுசிகாவின் மேலுதட்டுக்கு மேல ஒரு மச்சம் இருக்கே... அதைத்தான் சொல்றேன்... அந்த மச்சம்தான் சட்டுன்னு அவளை எனக்கு ஞாபகப்படுத்திச்சு.''

''உன்னை அவளுக்கு அடையாளம் தெரியலையா?''

''காஸ்ட்லியா இருந்ததால நான் இதுவரைக்கும் இவளை டிமாண்ட் பண்ணினதே இல்லை... ஆனா எந்தவிதத் தயக்கமும் இல்லாம உன்கிட்டே உடைச்சு சொன்னதுக்குக் காரணம் என்ன தெரியுமா?''

''என்ன காரணம்?''

''இந்த மாதிரி பெண்களால்தான் எய்ட்ஸ் நோய் வேகமாப் பரவிட்டிருக்கு... இவளால அப்பாவியான நீ இந்த கொடுமையான உயிர்க்கொல்லி நோய்க்கு பலியாகக் கூடாதேங்கற ஆதங்கத்தில்தான் எனக்குத் தெரிஞ்ச உண்மையை உன்னோட முதலிரவு நடக்கறதுக்கு முன்னால பட்டவர்த்தனமா



சொல்லிட்டேன்.''

''நான் ரொம்பக் குழப்பமா இருக்கேன் பரமேஷ்... நீ பொய் சொல்ல மாட்டேன்னு எனக்குத் தெரியும்... கவுசிகா இப்படி ஒரு தப்பான தொழிலைச் செய்யறவளா இருக்கமாட்டாள்ன்னும் என்னோட உள் மனசுக்குள்ளே ஒரு நம்பிக்கை இழை ஓடிட்டிருக்கு.''

''நான் திரும்பவும் அதையேதான் சொல்ல வேண்டியிருக்கு விஜய்... நிஜங்கள் சில சமயம் கசப்பாய்க்கூட இருக்கும்... கவுசிகா பணத்துக்காக கற்பை விற்கிறவள்ன்னு என்னால ஆதாரத்தோட நிரூபிக்க முடியும்.''

விஜய் யோசனையில் உறைந்து போனவனாய் உட்கார்ந்திருந்தான்.

**க**தவு திறந்தது.

ரோஜா இதழ்கள் தூவப்பட்ட ஃபோம் மெத்தையில் உட்கார்ந்திருந்த விஜய் நிமிர்ந்தான்.

கையில் பால் சொம்புடன் கொலுசு சப்திக்க நடந்து வந்தாள் கவுசிகா.

சொம்பை டீபாய் மேல் வைத்து விட்டு - அவன் காலில் விழுந்து நமஸ்கரிக்கப் போனாள்.

காலை அந்தப் பக்கம் இழுத்துக் கொண்டு ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான் விஜய்.

''என்னங்க... 'தீர்க்க சுமங்கலிபவ'ன்னு ஆசிர்வாதம் பண்ணுவீங்கன்னு பார்த்தா... சிகரெட் பத்த வைச்சிட்டு என்னவோ பலமான யோசனையில் மூழ்கிட்டீங்க.''

''.....''

அவன் இன்னும் மவுனத்தில்

மூழ்கியிருக்க தோளைத் தொட்டு உலுப்பினாள்.

''உங்ககிட்டதான் கேக்கறேன்.''

''ஏ... என்ன சொன்னே?''

''ம்... கதவைச் சாத்தி தாள் போடட்டுமான்னு கேட்டேன்.''

யோசனையிலிருந்து விலகாமல் மெல்ல அவனிடம் திரும்பினான்.

''தாள் போடு.''

அவள் கதவை நோக்கித் திரும்பவும் நடந்து சென்ற போது தொடர்ந்து சொன்னான்.

''ஆனா...''

தாளைப் போட்டுவிட்டுத் திரும்பி வந்து அவனருகில் உட்கார்ந்தாள்.

''ஆனா என்னங்க?''

''நான் சொல்றதைக் கேட்டு நீ அதிர்ச்சி அடையக் கூடாது.''

அவள் புன்னகைத்தாள்.

''சரி... நான் அதிர்ச்சி அடையலை... ஆனா நீங்க முதல்ல பாலை எடுத்துக் குடிங்க... பாலைக் குடிச்சிகிட்டே உங்க அதிர்ச்சிகரமான தகவலைச் சொல்லுங்க.''

''கவுசிகா... விளையாட்டு இல்லை... நான் சீரியசா சொல்லிட்டிருக்கேன்.''

''பரவாயில்லை சொல்லுங்க... காலேஜ் படிக்கிறப்போ எவளையாச்சும் லவ் பண்ணினீங்களா? அல்லது டெய்லி ரெண்டு பெக் உற்சாக பானம் குடிப்பீங்களா? இந்த மாதிரி நியூசெல்லாம் கேட்டு நான் அதிர்ச்சி அடைய மாட்டேன்... இதுவரைக்கும் நீங்க எப்படி இருந்தீங்கங்கறதைப் பத்தி நான் கவலைப்படப் போறதில்லை... இனிமே எப்படி இருக்கப் போறீங்கன்னு மட்டும்தான்



பார்க்கப்போறேன்.''

சொன்னவளை ஊடுருவலாய்ப் பார்த்துக்கொண்டே கேட்டான் விஜய்.

''அதே மாதிரி உன்னோட கடந்த காலத்தைப் பத்தியும் நான் எதுவும் கேக்கக் கூடாதுன்னு சூசகமா சொல்றியா?''

சட்டென்று நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''சேச்சே... நான் அப்படிச் சொல்லலியே? என்னோட கடந்த காலத்தைப் பத்தி தாராளமா நீங்க தெரிஞ்சிக்கலாம்... மடியில் கனமிருந்தால்தானே பயம்... அதிர்ஷ்டவசமா பருவக் கிளர்ச்சிகளுக்கெல்லாம் நான் அடிமை ஆகலை... சமையல்... கோலம் ரெண்டிலும் எனக்கு ரொம்ப இன்ட்ரெஸ்ட் இருந்தது... அந்த ரெண்டிலும் புதுசு புதுசான குறிப்புகளைத் தேடிக் கண்டு பிடிக்கறதிலேயே என்னோட ஓய்வு நேரங்கள் செலவாச்சு... அதனால... மெச்சூரிட்டி இல்லாத வயசில் ஒரு பர்ஸ்ட் லவ் வருமே... அதில்கூட மாட்டிக்கக் கூடிய சந்தர்ப்பம் எனக்கு அமையலை.''

''சரி... இதைப் பத்தியெல்லாம் இப்போ நான் பேச விரும்பலை.''

வெட்கப் புன்னகையோடு அவனைப் பார்த்தாள்.

''பேச்செல்லாம் கிடையாது... ஆக்‌ஷன்தானா?''

அவளுடைய ஜோக்கிற்கு ரியாக்‌ஷனே இல்லாமல் சீரியசாய்ச் சொன்னான்.

''நீ நிறைய கனவுகளோட இந்த ஃபர்ஸ்ட் நைட் அறைக்குள்ளே வந்திருப்பே... உனக்கு ஏமாற்றம் தரப்போறேன்... பெரியவங்க பார்த்து நாள் குறிச்ச இன்னிக்கு நம்ம சாந்தி முகூர்த்தம் நடக்கப் போறதில்லை.''

நிஜமாகவே இதயப் பரப்பு பூராவும் அதிர்ச்சி

தாக்க - அவனைப் பார்த்தாள் கவுசிகா.

# 3

**ம**றுநாள் காலை பத்து மணிக்கு விஜய் செட்டிலிருந்து காரை எடுத்து போர்டிகோவில் நிறுத்தினான்.

சிட்அவுட்டில் இருந்த கவுசிகாவின் அப்பா படித்துக் கொண்டிருந்த பேப்பரை மடித்து டீபாய் மேல் வைத்துவிட்டு கிரில் கம்பிக்கு அருகில் வந்தார்.

ஹிந்தாலியம் பைப்பைப் பிடித்தபடி நின்றுகாருக்குள்ளிருந்த விஜய்யைப் பார்த்துக் கேட்டார்.

''மாப்பிள்ளை... உங்க சித்தப்பா வீட்டுக்குத்தானே இப்போ போகப் போறிங்க?''

தலையசைத்தான்.

''ஆமா...''

''கவுசிகா சொன்னா... எங்கிருக்கு அவர் வீடு?''

''பெசண்ட்நகர்.''

''பக்கம்தான்... மத்தியானம் லஞ்சுக்கு வீட்டுக்கு வந்து சேர்ந்துடுங்க... இங்கே இருக்கப் போற மூணு நாளும் நீங்க வெளியே எங்கேயும் போய் சாப்பிடக்கூடாது.''

''ஆகட்டும் மாமா...''

விஜய் தலையசைத்ததும் அவர் உள்ளே திரும்பி குரல் கொடுத்தார்.

''கவுசிகா.''

''என்னப்பா?''



''உள்ளே என்னம்மா பண்ணிட்டிருக்கே? மாப்பிள்ளை எவ்வளவு நேரமா காத்திட்டிருக்கார்.''

''இதோ வந்துட்டேன்.''

அடர் ஊதா நிறச் சேலையை உடலுக்குச் சுற்றியிருந்த கவுசிகா சேலை மடிப்புகளைச் சரிப்படுத்திக் கொண்டே - வெளியே வந்தாள்.

அவள் அப்பா சொன்னார்.

''ஆம்பளைங்களோட டயத்தை வேஸ்ட் பண்ணக்கூடாதும்மா... கொஞ்சம் சீக்கிரமா கிளம்பணும்.''

''அஞ்சு நிமிடம்தானே... அதுவும் அவருக்காகத்தான்... அவரோட சித்தப்பா வீட்டுக்குக் கூட்டிட்டுப் போறார். நீட்டா போக வேண்டாமா? 'பரவாயில்லை... பொண்ணு பளிச்னு இருக்காள்'ன்னு அவங்க சொல்ல வேண்டாமா?''

அவர் புன்னகைத்தார்.

''உன்கிட்டே பேசி ஜெயிக்க முடியாதும்மா... இனிமே மாப்பிள்ளை பாடு.''

''அப்படி ஒதுங்கிக்கங்க...''

ஃப்ளோரஸண்ட் புன்னகையோடு சொல்லிவிட்டு - காருக்குச் சென்றாள்.

காரின் இடதுபக்கக் கதவைத் திறந்து டிரைவிங் சீட்டில் உட்காந்திருந்த விஜய்க்குப் பக்கவாட்டில் அமர்ந்தாள்.

அவன் என்ஜினைக் கனைக்க விட்டு ஸ்டார்ட் செய்தான்.

கார் நகர்ந்து பங்களா காம்பவுண்டைக் கடந்து சென்று கொண்டிருக்க -

புன்னகையோடு கேட்டாள் கவுசிகா.

''நான் ஏற்கனவே லேட் பண்ணிட்டேன்... அதைப் பத்திக் குறுக்கு விசாரணை பண்ணி எங்கப்பா அதைவிட லேட் பண்ணிட்டார்... இல்லைங்க?''

விஜய் அவளுக்கு பதில் எதுவும் சொல்லாமல் சீரியசாகக் காரை இயக்கிக் கொண்டு வந்தான்.

அவனை நிமிர்ந்து பார்த்தாள் கவுசிகா.

''உங்ககிட்டேதாங்க நான் பேசிட்டு வர்றேன்.''

''ம்...''

''என்ன உம்? திடீர்ன்னு நேத்து ராத்திரியில் இருந்தே நீங்க மூட்அவுட் ஆயிட்டிங்க... நல்லபடியா முதலிரவு முடிஞ்சிருச்சுன்னு என்னோட அம்மாவும் அப்பாவும் நினைச்சிட்டிருக்காங்க... நடந்தது தெரிஞ்சா பதறிப் போயிடுவாங்க தெரியுமா?''

''இதிலே பதறிப்போறதுக்கு என்ன இருக்கு?''

''உங்களைப் பொறுத்தவரைக்கும் ஒண்ணும் இல்லை... ஆனா பெத்தவங்களைப் பொறுத்த வரைக்கும் இது ரொம்ப சீரியசான விஷயம்... எல்லாம் நல்லபடியா நடந்ததான்னு ரிலேட்டிவ்ஸ் ஜாடைமாடையாக் கேட்டாங்க... எதுவும் நடக்காத மாதிரி நான் காட்டிக்கலை.''

''ஏன் மறைக்கணும்?''

''நான் மறைக்கலைன்னா கல்யாண வீடு இந்நேரம் சோக வீடா மாறிப்போயிருக்கும்... நான் என்ன குறை



வச்சேன்னு அப்பா உங்களைக் குடைய ஆரம்பிச்சிடுவார்.''

விஜய் எந்த ரியாக்ஷனும் இல்லாமல் காரை வேகமாய்க் கையாண்டு கொண்டிருந்தான்.

கவுசிகா சிலவிநாடி இடைவெளிக்குப் பிறகு தொடர்ந்து கேட்டாள்.

''சரி... பெரியவங்க விஷயத்தை மறந்துடுவோம்... இன்னிக்கு முதலிரவு நடக்க வேண்டாம்ன்னு சொன்னீங்க... நேத்திக்கு நீங்க ஏனோ மூட்அவுட்டா இருக்கீங்கங்கறதைப் புரிஞ்சுகிட்டு நான் உங்களை எதுவுமே கேக்கலை... எனக்கு அதிர்ச்சியாத்தான் இருந்தது... ஆனா காலைல நிதானமா கேட்டுக்கலாம்ங்கற எண்ணத்தில் அப்போ நான் பேசாம இருந்துட்டேன்... இப்போ சொல்லுங்க... முதலிரவை ஒத்திப் போட்டதுக்கு என்ன காரணம்?''

சாலையில் கவனமாய் இருந்து கொண்டே விஜய் கேட்டான்.

''நான் முதலிரவை ஏன் ஒத்திப் போட்டேன்ங்கறதுக்கான காரணத்தை உன்னால யூகிக்க முடியலையா கவுசிகா?''

கேட்டுவிட்டு அவளுடைய முக ரியாக்ஷனைக் கண்ணாடி வழியே ஒரு செகண்ட் பார்த்தான் விஜய்.

அவள் அப்பாவியாய் முகத்தை வைத்தபடி அவனைப் பார்த்தாள். அந்த முகத்தில் லேசான கோபம் கூட கொப்பளித்தது.

''என்னால ஊகிக்க முடியலை... ஏன்னா

நானோ... எங்க விட்டைச் சேர்ந்தவங்களோ... சீர்வரிசையிலோ... கவனிப்பிலோ உங்களுக்கு எந்தக் குறையும் வைச்ச மாதிரி எனக்குத் தெரியலை... இதையும் மீறி எதாவது குறை இருக்குன்னு உங்க மனசுக்குப் பட்டிருந்தா... அதை உங்கவாயால நீங்க ஒப்பனா சொல்றதுதான் பெட்டர்... அப்படிச் சொன்னிங்கன்னா அந்தக் குறையை நிவர்த்தி பண்ண முயற்சிக்கலாம்...அதை விட்டுட்டு நீங்க மனசுக்குள்ளேயே குமைஞ்சிகிட்டு... முதலிரவை ஒத்திப் போடறது... திடீர் திடீர்ன்னு என்கிட்டே சரியா முகம் கொடுத்துப் பேசாம இருக்கறது... இந்த மாதிரிப் போக்குகளில் ஈடுபடறது படிக்காதவங்க செய்யற காரியம்.''

அந்தத் திருப்பத்தில் காரை வளைத்துக் கொண்டே விஜய் ஒரு விரக்திப் புன்னகை பூத்தான்.

''இந்தச் சின்ன விஷயத்துக்கு நீ ஏன் இவ்வளவு கோபப்படறே? பொண்ணுங்களை என்னால புரிஞ்சிக்கவே முடியலை.''

கவுசிகா முகத்தில் இருந்த மெல்லிய சிவப்பை இன்னமும் இழக்காமல் அவனுக்கு பதில் சொன்னாள்.

''உங்களை மாதிரி 'மூடி' டைப் ஆம்பளைங்கதான் பொண்ணுங்களை விட ஆயிரம் மடங்கு புதிரானவங்க... உண்மையில் சொல்லப்போனா... ஆணாக இருந்தாலும் சரி... பெண்ணாக இருந்தாலும் சரி... வெளிப்படையா பேசாத யாருமே



புரிஞ்சிக்க முடியாத புதிர் போர்வழிங்கதான்... தயவுசெஞ்சு இப்படி இருக்காதீங்க... மனசுவிட்டுப் பேசினாத்தான் ஒருத்தரையொருத்தர் சரியாப் புரிஞ்சிக்க முடியும்... நாம இன்னும் முழுசா ஒரு நாள்கூட சேர்ந்து வாழலை... இன்னும் வாழவேண்டிய வருடங்கள் எவ்வளவோ இருக்கு.''

விஜய் கேட்டான்.

''நீ என்கிட்டே எல்லா விஷயங்களையும் வெளிப்படையா பேசறதா நினைக்கறியா கவுசிகா?''

இதழ்களின் ஓரமாய்க் காய்ந்த புன்னகை ஒன்றை வெளியிட்டான்.

''தாலி கட்டி ஒரு நாள் தான் ஆகியிருக்கு... மனம்விட்டுப் பேச வேண்டிய முதலிரவில் நீங்க மூட்அவுட் ஆகி 'இன்னிக்கு எதுவுமே வேண்டாம்'ன்னு ஒரே வார்த்தையில் சொல்லிட்டுத் திரும்பிப்படுத்துட்டிங்க... நாம எங்கே பேசினோம்?''

''பேசக் கிடைச்ச சொற்ப சந்தர்ப்பங்களில் நீ மனம்விட்டுப் பேசியிருக்கியா?''

''கண்டிப்பா...'' என்று சொல்லி அவனைக் குழப்பமாய்ப் பார்த்தாள் கவுசிகா.

அந்த சிக்னலில் ஓய்ந்து கார் மீண்டு புறப்பட்டபோதுதான் புருவங்கள் சுருங்கினாள் கவுசிகா.

''என்னங்க... உங்க சித்தப்பா வீடு பெசண்ட்நகர்ல இருக்குன்னுதானே சொன்னிங்க.''

''ஆமா...''

''கார் இப்போ வேற ஏதோ டைரக்‌ஷனில்

போயிட்டிருக்கே? இந்த வழியா போனா
பெசண்ட்நகர் போக முடியாதே.''

தலையசைத்தான் விஜய்.

''எஸ்... இந்த வழியா போனா நாம பெசண்ட்நகர் போக முடியாது.''

''பின்னே ஏன் இந்த வழியா காரை விடறீங்க?''

''நாம இப்போ பெசண்ட்நகர் போகலையே.''

''என்ன சொல்றீங்க...''

''உங்க வீட்டைப் பொறுத்த வரைக்கும் நாம பெசண்ட்நகர் சித்தப்பா வீட்டுக்கு போறோம்... ஆனா உண்மையில் நாம அங்கே போகலை... வேற இடத்துக்குப் போயிட்டிருக்கோம்.''

''எங்கே போறோம்?''

''இன்னும் கொஞ்ச நேரத்தில் நீயே தெரிஞ்சிக்குவே.''

குழப்பத்தின் உச்சத்துக்குப் போய்விட்ட கவுசிகா டிராஃபிக்கை வேடிக்கை பார்த்தபடி பயணித்தாள்.

சொற்ப நிமிடங்களில் கார் அந்த அகலமான காம்பவுண்டுக்குள் புகுந்தது.

முகப்புச் சுவரில் அப்பியிருந்த தடிமனான பித்தளை எழுத்துக்களைப் பார்த்துத் திகைப்புடன் கேட்டாள்.

''என்னங்க... இது பிரைவேட் நர்சிங் ஹோம் போல இருக்கே... இங்கே எதுக்காக வந்திருக்கோம்?''

''இங்கே என் ஃப்ரெண்டைப் பார்க்கணும்.''

பார்க்கிங்கில் காரை நிறுத்திவிட்டு



அவளை ரிசப்ஷன் வழியே கூட்டிப் போனான்.

நடக்க நடக்க கவுசிகா கேட்டாள்.

''உங்க ஃப்ரெண்ட் யாராவது இங்கே அட்மிட் ஆகியிருக்காங்களா?''

''இல்லை... இங்கே டாக்டரா பிராக்ட்டீஸ் பண்ணிட்டிருக்கா.''

''இருக்கான்னு சொல்றீங்க... கேர்ள் ஃப்ரெண்டா?''

''ஆமா...''

''நம்ம திருமணத்துக்கு வந்தாங்களா?''

''ராத்திரி வந்துட்டுப் போனா... அதனால உனக்கு அறிமுகப்படுத்தி வைக்க முடியலை... அதனாலதான் இப்போ உன்னை இங்கே கூட்டிட்டு வந்தேன்.''

''இன்னொரு நாளைக்கு வந்திருக்கலாமே... சித்தப்பா வீட்டுக்குப் போறதைவிட இப்போ இந்த அறிமுகம் ரொம்ப முக்கியமா?''

''கண்டிப்பா...''

சொல்லிக்கொண்டே அந்த அறைக்குள் பிரவேசித்தான்.

சற்றே பூசினாற்போல இருந்த அந்த லேடி டாக்டர் நிமிர்ந்தாள். விஜய்யைப் பார்த்ததும் புன்னகைத்தாள்.

''வா விஜய்...''

பதில் புன்னகை பூத்த விஜய் எதிர் நாற்காலியில் அமர்ந்து கொண்டே கவுசிகாவையும் அமரச் சொன்னான்.

''கவுசிகா... இது டாக்டர் அருணா... என்னோட பெஸ்ட் ஃப்ரெண்ட்... க்ளாஸ்மேட்... அருணா... இது என் மனைவி

கவுசிகா...''

அந்த அருணாவும் கவுசிகாவும் பரஸ்பரம் கைகூப்பிக் கொண்டார்கள்.

கவுசிகா புன்னகையோடு சொன்னாள்.

''எங்க திருமணத்துக்கு நீங்க ராத்திரி வந்திருந்தீங்களாம்... அப்போ நான் உங்களைப் பார்க்க முடியலை.''

''எஸ்... எஸ்... புதுமாப்பிள்ளை விஜய் என்ன சொல்றார்?''

''எல்லாமே ஓக்கேதான்... ஆனா உங்க ஃப்ரெண்ட் திமர் திமர்ன்னு மூட்அவுட் ஆயிடறார்.''

''அதெல்லாம் போகப்போக சரியாயிடும்... ஓக்கே... செக்கப் பண்ணிடலாமா?''

டாக்டர் அருணா கேட்டதும் திகைப்புடன் நிமிர்ந்தாள்.

''செக்கப்பா?''

''ஆமா... விஜய் சொல்லலையா? விஜய்... நீ எதுவும் சொல்லிக் கூட்டிட்டு வரலையா?''

அவன் மறுத்தலாய்த் தலையை அசைத்தான்.

''எப்படி சொல்றதுன்னு எனக்குத் தெரியலை... அதனால டாக்டர் ஃப்ரெண்டைப் பார்க்கப் போறோம்ன்னு மட்டும் சொன்னேன்.''

''நல்ல ஆளுப்பா நீ!''

செல்லமாய் விஜய்யைக் கடிந்துகொண்டு கவுசிகாவிடம் திரும்பினாள் அருணா.

''ஒரு மெடிக்கல் செக்கப்பை நான்தான் ரெக்கமண்ட் பண்ணினேன் கவுசிகா.''



''நான் நல்லாத்தானே இருக்கேன்... செக்கப் பண்ண வேண்டிய அவசியம் என்ன வந்தது?''

''ஜெனரல் செக்கப்தான்.''

''அதான் எதுக்காக?''

''இரத்த சம்பந்தம்மா இப்ப நிறைய சிக்கல்கள் வருது... அதை அவாய்ட் பண்ணணும்ன்னா சில சின்னச் சின்னப் பரிசோதனைகளை மணவாழ்க்கையின் ஆரம்பத்திலேயே செஞ்சுக்கறது நல்லது.''

''இரத்த சம்பந்த பிரச்சினைன்னா...? எனக்குப் புரியலை!''

''ஆர்.எச்.வேல்யூவைப் பரிசோதனை பண்ணி தெரிஞ்சிக்கறது நல்லது... ஜாதகப் பொருத்தம் மாதிரி அது ரொம்ப இம்பார்ட்டன்ட்... தாய்க்கு இரத்தம் ஆர்.ஹெச்.நெகட்டிவ்வா இருந்தா குழந்தைப் பிறப்பில் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பிருக்கு.''

விஜய் ஆமோதித்தான்.

''நான் முதலிரவை ஒத்திப் போட்டதுக்கான காரணம் தெரிஞ்சதா கவுசிகா? இந்தப் பரிசோதனை முடிவுகளைத் தெரிஞ்சிக்கிட்டோம்ன்னா... ஆரம்பத்திலிருந்தே மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளோட முறைப்படி நாம மணவாழ்க்கையைத் தொடங்கலாம்... அது உனக்கும்... நமக்குப் பிறக்கப் போற குழந்தைக்கும் நல்லது.''

''நல்லதுதான்... ஆனா இந்தமாதிரி செக்கப்பெல்லாம் நார்மலா யாருமே செஞ்சுக்கறதில்லையே?''

''வந்தா அனுபவிக்கறது யாரு? இதைப்

பத்தியெல்லாம் நம்பிக்கை இல்லாதவங்க அதிகமா இருக்காங்க... அதுக்காக நாமும் அப்படியே இருக்க முடியுமா?''

அருணா சொன்னாள்: ''விஜய் உன்னோட நல்லதுக்காகத்தான் இந்த செக்கப்பை செஞ்சுக்கணும்னு சொல்றான் கவுசிகா.''

கவுசிகா தலையை அசைத்தாள்.

''சரி... நீங்க செக்கப் பண்ணுங்க டாக்டர்.''

அருணா கவுசிகாவை அருகிலிருந்த பரிசோதனை லேபிற்குக் கூட்டிப் போனாள்.

''மேஜையில படுத்துக்கோம்மா.''

கவுசிகா அந்த உயரமான டேபிளில் படுத்துக் கொள்ள - ஸ்டெத்தை அவள் மேல் நகர்த்தினாள் அருணா. பிரஷர் பார்த்தாள். பிறகு ஸ்ரிஞ்சை தோள்பட்டை சதையில் செலுத்தி இரத்தம் எடுத்துக் கொண்டபின் கவுசிகாவின் கன்னத்தில் தட்டினாள்.

''டயர்டா இருக்கும்... அஞ்சு நிமிடம் படுத்து ரெஸ்ட் எடுத்துக்கோ... நான் விஜய்கூட பேசிட்டிருக்கேன்.''

பஞ்சுத் துண்டை அவள் கையில் கொடுத்து ஊசி போட்ட இடத்தைத் தேய்க்கச் சொல்லிவிட்டு அருணா அங்கிருந்து அகன்றாள்.

லேப் அசிஸ்டென்ட்டைக் கூப்பிட்டு இரத்தத்தைக் கொடுத்தாள்.

அந்தப் பெண்ணுக்கு குறிப்புகளை தந்துவிட்டு விஜய்யை உட்கார வைத்திருந்த அறைக்கு வந்தாள்.

உள்ளே நுழைந்ததுமே கோபத்தோடு விஜய்யைப் பார்த்துச் சொன்னாள் அருணா.

''விஜய்... இதெல்லாம் முட்டாள்தனம்...



இவ்வளவு கேவலமா நடந்துப்பேன்னு நான் கொஞ்சம்கூட நினைக்கப் பார்க்கலை... சொந்த மனைவிகிட்டே இப்படி அநாகரிகமா நடந்துக்கலாமா? உன்னோட ஃப்ரெண்டா போயிட்ட பாவத்துக்காக இந்த மோசமான காரியத்துக்கு நானும் உடன்பட வேண்டியதா இருக்கு.''

விஜய் இறுக்கமான முகத்தோடு சொன்னான்.

''இங்கே பாரு அருணா... இந்த ஊரில் டாக்டர்களுக்கு ஒண்ணும் பஞ்சமில்லை... நீ மாட்டேன்னு சொல்லியிருந்தா வேற ஒரு டாக்டருக்கு நான் காசை விட்டெறிஞ்சு காரியத்தை சாதிச்சிருப்பேன்.''

''நீ அப்படிச் செய்வேன்னு எனக்குத் தெரியும்... எங்கேயாவது போய் அவதிப்படறதைவிட நானே உன்னோட சந்தேகத்தைப் போக்கிடலாமேன்னு தான் இதுக்கு ஒத்துக்கிட்டேன்.''

''பிளட் டெஸ்ட் ரிசல்ட் இப்பவே தெரிஞ்சிடுமா?''

''தெரிஞ்சிடும்.''

சொற்பநேரம் கழித்து இன்டர்காமில் லேப் அசிஸ்டென்ட் கூப்பிட்டாள்.

''ஹலோ...''

''.....''

''சொல்லு... டாக்டர் தான் பேசறேன்.''

''.....''

''அப்படியா?''

''.....''

''ஓக்கே... ரிப்போர்ட்டை டைப் பண்ண வேண்டாம்.''

பேசி முடித்து விட்டு விஜய்யிடம் திரும்பினாள்.

விஜய் அவளை ஆர்வமாய்ப் பார்த்தான்.

''ரிசல்ட் என்ன அருணா?''

''விஜய்... நீ நினைச்ச மாதிரி உன் புது மனைவிக்கு எய்ட்ஸ் இல்லை... எச்.ஐ.வி. நெகட்டிவ்ன்னு ரிப்போர்ட் வந்திருக்கு... போதுமா.''

விஜய்யின் முகத்தில் ஏமாற்றம் படர்ந்தது. சிறிது நேர யோசனைக்குப் பிறகு மெதுவாய்ச் சொன்னான்.

''நீ செஞ்ச உதவிக்கு ரொம்ப தேங்க்ஸ் அருணா... இன்னும் ஒரு உதவியும் உன்கிட்டே இருந்து எதிர்பார்க்கிறேன்.''

''என்ன உதவி?''

''இந்த செக்கப் ரிசல்ட் இன்னும் நாலைஞ்சு நாள் கழிச்சுத்தான் தெரியும்ன்னு கவுசிகாகிட்டே நீ பொய் சொல்லணும்.''

''எதுக்காக அப்படிச் சொல்லணும்?''

''எனக்கு கவுசிகா மேல இன்னும் சில சந்தேகங்கள் இருக்கு... அதையெல்லாம் போக்கிக்கற வரைக்கும் நான் அவளைத் தொடாம விலகி இருக்க விரும்பறேன்... இன்னும் ஒரு வாரத்துக்காவது முதலிரவைத் தள்ளிப் போடணும்ன்னு நினைக்கிறேன்.''

''விஜய்... உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு? யார் பேச்சைக் கேட்டு நீ இப்படியெல்லாம் முட்டாள்தனமான சந்தேகத் தீயில் விழுந்திருக்கே?''

''அருணா... இப்போதைக்கு என்னை எதுவும் கேக்காதே... ஒரு ஃப்ரெண்டுங்கற முறையில் நான் கேட்ட இந்த உதவியை நீ



செய்வியா மாட்டியா?''

கோபத்தோடு விஜய் கேட்க -

டாக்டர் அருணா சலித்துக் கொண்டே தலையசைத்தாள்.

''செஞ்சுத் தொலைக்கிறேன்.''

---

# 4

---

**ஹா**ஸ்பிட்டலின் கார் பார்க்கிங்கிலிருந்து காரை ரிவர்ஸில் எடுத்து வந்தான் விஜய்.

பில்லருக்கு அருகே காத்திருந்த கவுசிகா - காரின் கதவைத் திறந்து உள்ளே அமர்ந்தாள்.

கார் சாலையில் சங்கமம் ஆகிப் போக்குவரத்தில் நீந்தத் தொடங்கியது.

கவுசிகா காரில் அமர்ந்தபின் விஜய் கேட்டான்.

''கவுசிகா... என்னைச் சொல்லிட்டே இருந்தே... இப்போ கடைசியில் நீ மூட் அவுட் ஆயிட்டியே?''

அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

அவன் தொடர்ந்து சொன்னான்.

''ரிசல்ட் தெரிய நாலஞ்சு நாளாகும்ன்னு அருணா சொன்னதனால என்னவோ ஏதோன்னு பயப்பட ஆரம்பிச்சிட்டியா?''

''இல்லைங்க... எனக்கு இப்ப தலையில இடி விழுந்த மாதிரி இருக்கு.''

''வாட் டு யூ மீன்?''

''நீங்க உங்க மனசில் என்ன நினைச்சிட்டிருக்கிங்கன்னு எனக்குப் புரியலை... உங்களுக்கு என்மேல இந்த மாதிரி சந்தேகம் எல்லாம் இருந்ததுன்னா

கல்யாணத்துக்கு முன்னாலேயே இந்தப் பரிசோதனை எல்லாம் செய்து பார்த்துட்டு அதுக்கப்புறமா என் கழுத்தில் தாலியைக் கட்டி இருக்கலாமே?''

''கவுசிகா... இப்ப நான் என்ன பண்ணிட்டேன்... உன்னோட நல்லதுக்காக ஆர்.எச். டெஸ்ட்தானே எடுத்தோம்.''

ஒரு சின்ன விசும்பலாய் உடைந்துபோய் கவுசிகா சொன்னாள்.

''என்கிட்டே பொய் சொல்லாதீங்க... எனக்கு எய்ட்ஸ் இருக்கான்னு தானே டெஸ்ட் பண்ணிப் பார்த்திங்க?''

லேசாகத் திடுக்கிட்டு அவளைப் பார்த்தான் விஜய்.

''கவு... கவுசிகா.''

''சோதனைக்கு இரத்தம் எடுத்துட்டு கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துக்கச் சொல்லிட்டு அருணா ரூமுக்குப் போயிட்டாங்க... கொஞ்ச நேரம் கழிச்சு எந்திரிச்சு வெளியே வந்த நான் அருணாவோட ரூம் எதுன்னு தெரியாம குழப்பமாகி வேற ஒரு அறைக்குள்ளே நுழைஞ்சிட்டேன்... அந்த அறை மைக்ரோ பயாலஜி லேப்... அங்கே இருந்த லேப் அசிஸ்டென்ட், அருணாவுக்கு போன் பண்ணி என்னோட இரத்தம் டெஸ்ட் பண்ணினதில் கிடைச்ச ரிசல்ட்டை இன்ட்டர்காம் மூலமா அருணாகிட்ட சொல்லிட்டிருந்தார்... அதைக் கேட்டதும்தான் நீங்க எச்.ஐ.வி. டெஸ்ட் பண்ணியிருக்கிங்கன்னு தெரிஞ்சது.''

விஜய் இறுக்கமான முகத்தோடு அவளைப் பார்த்தான்.

''தெரிஞ்சிடுச்சா? ரொம்ப சந்தோஷம்...



என்னோட இந்த சந்தேகங்களையெல்லாம் உனக்குத் தெரியாம நிவர்த்தி பண்ணிக்கணும்ன்னு நினைச்சேன்.''

''எதுக்காக இந்தப் பரிசோதனைங்கறதுதான் என் கேள்வி.''

''கவுசிகா... உன் மடியில் கனம் இல்லைன்னா நீ பயப்பட வேண்டிய அவசியமில்லை.''

''நான் பயப்படலைங்க... ஆனா ரொம்ப வேதனைப் படறேன்... உங்களுக்கு ஆயிரம் சந்தேகம் வரும்... நீங்க சந்தேகப்படறப்போதெல்லாம் தீக்குளிச்சுத்தான் நிரூபிக்கணும்ன்னா நடக்கிற காரியமா?''

''காரணமில்லாம நான் எதையும் செய்ய மாட்டேன்.''

''காரணம் நியாயமான காரணமான்னு யோசிச்சுப் பார்த்திங்களா? உங்களுக்கு இப்படி ஒரு கேவலமான சந்தேகம் என்மேல வர என்ன காரணம்?''

''இதைக் கேவலமான சந்தேகம்ன்னு ஏன் நினைக்கிறே? அதனால் மட்டும் எய்ட்ஸ் வர்றதில்லை... ஸ்டெரிலைஸ் பண்ணாத இஞ்செக்ஷன் மூலமாகூட எயிட்ஸ் வருது... ஒரு பாதுகாப்புக்காகத்தான் இந்தப் பரிசோதனை.''

''இல்லைங்க... நீங்க என்கிட்டே எதையோ மறைக்கிறீங்க... வெளிப்படையா பேசமாட்டேங்கறீங்க.''

சட்டென்று கண்களில் நீர்கோர்த்தாள் கவுசிகா.

ஈரத்தில் மின்னும் விழிகளோடு சொன்னாள்.

''உங்க மனசில் என்னைப் பத்தி என்ன

சந்தேகம் இருந்தாலும் வெளிப்படையாக கேளுங்க... ப்ளீஸ்.''

''வெளிப்படையாக் கேக்கத்தான் போறேன் கவுசிகா... அதுக்கு முன்னால இன்னும் சில விஷயங்களை ஆதாரபூர்வமா நான் தெளிவு படுத்திக்க வேண்டியிருக்கு.''

''என்கிட்டே நேரடியாக் கேட்டுட்டா நான் தெளிவுபடுத்த மாட்டேனா?''

விஜய் அவளை ஒரு விநாடி ஊடுருவலாய்ப் பார்த்துவிட்டுச் சொன்னான்.

''கவுசிகா... இப்போதைக்கு என்னை எதுவும் கேக்காதே.''

அன்றைக்கு சாயந்தரம் ஆறு மணிக்கெல்லாம் வீட்டை விட்டுப் புறப்பட்டான் விஜய்.

வாயில்வரை அவனோடு நடந்து வந்த கவுசிகா மெல்லக் கேட்டாள்.

''போறப்ப எங்கே போறீங்கன்னு கேக்கக் கூடாதுன்னு சொல்வாங்க.''

''ஆமா... இப்ப நான் எங்கே போறேன்னு கேக்காதே.''

''ஆனா அதைத் தெரிஞ்சிக்கணும்ன்னு இருக்கு.''

''நான் போற இடம் எதுன்னு உனக்குத் தெரியவேண்டி இருந்தா நான் அவசியம் சொல்லிட்டுப் போவேன்.''

''கட்டின பெண்டாட்டிகூட தெரிஞ்சிக்கக்கூடாத ஒரு இடத்துக்கு நீங்க இப்போ போகப் போறீங்களா?''

விஜய் ஏளனமாய்ச் சிரித்தான்.

''கவுசிகா... உன் கழுத்தில் தாலி கட்டியிருக்கேனே தவிர நீ முழுமையா



என்னோட மனைவி ஆகலை... நீ என் மனைவியா ஆகப்போறியா... இல்லையான்னு இன்னிக்கு எனக்குத் தெரிஞ்சிடும்.''

கவுசிகாவின் கண்களில் குப்பென்று கண்ணீர் எட்டிப் பார்த்தது.

''நீங்க ஏன் இப்படியெல்லாம் பேசறீங்கன்னு எனக்குத் தெரியலை.''

''தெரியாதா... இல்லை தெரியாத மாதிரி நடிக்கிறாயான்னு இன்னிக்குத் தெரிஞ்சிடும்.''

''கடவுளே... எவ்வளவு சந்தோஷத்தோட நான் உங்க கையால் தாலியை வாங்கினேன்... ஒரே நாளில் நரகமாக்கிட்டீங்களே.''

''நானும் சந்தோஷத்தோடதான் உன் கழுத்தில் தாலியைக் கட்டினேன்... சொர்க்கம்ன்னு நான் நினைச்ச இந்த மணவாழ்க்கை நரகமா ஆனது உன்னாலா... அல்லது என்னாலான்னு இன்னிக்குத் தெரிஞ்சிடும்.''

கண்களில் நீர்த் திவலைகள் கோர்த்திருக்க அவனைப் பார்த்தாள் கவுசிகா.

''நீங்க வார்த்தையால சாகடிச்சிட்டிருக்கிற இந்தக் கொடுமையை என் அப்பா அம்மாகிட்டேகூட நான் இன்னமும் சொல்லலை... சொன்னா துடிச்சிப்போயிடுவாங்க... என்னோட அப்பா அம்மா மட்டுமில்லை... அத்தை மாமாகூட நடந்த விஷயங்களைப் பத்திக் கேள்விப் பட்டாங்கன்னா துடிதுடிச்சிப் போயிடுவாங்க.''

''அவங்க துடிச்சிப் போயிடுவாங்களேங்கிற நல்ல எண்ணத்தில் இதை

யெல்லாம் யாருக்கும் சொல்லாம மறைச்சு வைச்சிருக்கியா கவுசிகா? வெரிகுட்..., மறைக்க வைக்கறதுதான் உனக்குக் கைவந்த கலையாச்சே.''

கரகரத்த குரலில் சொல்லிவிட்டு சரேலென்று காரை நகர்த்திப் போனான் விஜய்.

கார் ஒரு குட்டிப் புயல் மாதிரி அந்த காம்பவுண்டைக் கடந்தது.

வேக ஓட்டத்தில் டிராபிக்கை ஊடுருவிச் சென்ற கார் சொற்ப நிமிடங்களில் அந்த மூன்று நட்சத்திர ஹோட்டலின் வளாகத்திற்குள் பிரவேசம் ஆனது.

பார்க்கிங் பகுதியில் காரைத் சொருகிவிட்டு உள்ளே சென்றான்.

மங்கலான வெளிச்சத்துடன் இருந்த ரிசப்ஷனில் மெல்லிய கஜல் இசை அசரீரி போல ஒலித்துக் கொண்டிருந்தது.

ரிசப்ஷனிஸ்ட் இளைஞனிடம் கேட்டான்.

''மிஸ்டர் பரமேஷ் எந்த ரூம்?''

''த்ரீ நாட் ஃபோர்.''

''தாங்க்யூ.''

எதிர்ப்பக்கம் இருந்த லிப்ட்டுக்குள் நுழைந்தான் விஜய்.

ஊஞ்சலாட்டமாய் மேல்நோக்கிச் சென்ற லிப்ட் மூன்றாவது தளத்தில் விஜய்யை உதிர்த்தது.

மார்பிள் வராந்தாவைக் காலடியில் நழுவவிட்டு - அறை எண் முந்நூற்றி நான்கை அடைந்தான்.

டொக்...

டொக்...

டொக்...

நாசூக்கான தட்டலுக்குப் பின் - உள்ளே



இருந்து பரமேஷின் குரல் கேட்டது.

''கமின்...''

விஜய்யைப் பார்த்ததும் உதடுகள் முழுவதுமாய் ஒரு புன்னகையைக் கொடுத்தான் பரமேஷ்.

''வா விஜய்... எங்கே இன்னும் காணோமேன்னு பார்த்துட்டு இருந்தேன்.''

''கிளம்பற நேரத்தில் எங்கே போறீங்கன்னு கவுசிகா பிலுபிலுன்னு பிடிச்சிகிட்டா... எரிஞ்சு விழுந்துட்டு வந்தேன்.''

பீரை பாட்டிலில் இருந்து கிண்ணத்தில் சரித்தபடியே பரமேஷ் கேட்டான்.

''கவுசிகாகிட்டே பேசிப் பார்த்தியா? அவளாகவே முன்வந்து ஏதாவது சொன்னாளா?''

தலையசைத்து மறுத்தான் விஜய்.

''ஜாடைமாடையா நான் கேட்டுப் பார்த்துட்டேன்... இன்னோசண்ட் மாதிரித்தான் அவ பதில் சொல்றா... 'எதுக்காக இப்படி வார்த்தையால் என்னைக் கொல்றீங்க'ன்னு அழறா... எச்.ஐ.வி. டெஸ்ட் பண்ணினது அவளுக்குத் தெரிஞ்சிடுச்சு... அதிலிருந்து ரொம்பவே அப்செட் ஆயிட்டா.''

''விஜய்... இவளை மாதிரி பெண்களுக்கு நடிக்கறது கைவந்த கலை... இல்லைன்னா ஒரு குடும்பத்தையே ஏமாத்தி இப்படிப்பட்ட காரியத்தில் ஈடுபட முடியாது.''

''பரமேஷ்... இது மட்டும் ப்ரூவ் ஆகலைன்னா அப்புறம் அவ முகத்திலேயே நான் முழிக்க முடியாது.''

''நான்தான் ப்ரூவ் பண்றேன்னு சொல்றேனே... அதுக்காகத்தானே உன்னை

இன்னிக்கு இந்த லாட்ஜுக்கு வரச்சொன்னேன்... இப்போ கவுசிகா வீட்டில்தான் இருக்காளா... இல்லை உங்க வீட்டுக்கு வந்தாச்சா?''

''அன்னிக்கே எங்க வீட்டுக்கு வந்துட்டோம்.''

விஜய் பதில் சொல்லிக் கொண்டிருந்தபோது - பரமேஷ் டெலிபோனை அருகில் இழுத்து பொத்தான்களை அழுத்தினான்.

யாருடனோ பேசி முடித்துவிட்டு ரிசீவரை வைத்தான்.

''நான் யார்கிட்டே பேசினேன்னு தெரியுமா?''

''தெரியலை பரமேஷ்.''

''இந்த லாட்ஜுக்கு பெண்களை சப்ளை பண்ற பிம்ப்கிட்டே பேசினேன்... அவனை வரச்சொல்லியிருக்கேன்... இன்னும் கொஞ்ச நேரத்தில் அவன் வந்துடுவான்.''

''ஏ... எதுக்காக அவனை வரச்சொல்லியிருக்கே?''

''கவுசிகாவின் சுயரூபத்தை உனக்குக் காட்ட வேண்டாமா? அவள் எப்படிப்பட்டவள்ன்னு நான் சொன்னதை ஆதாரபூர்வமா நிரூபிக்க வேண்டாமா? அதுக்காகத்தான்.''

விஜய் படபடக்கிற இதயத்தோடு நிமிடங்களைக் கடத்தினான்.

கொஞ்ச நேரத்தில் அறைக் கதவு தட்டப்பட்டது.

பரமேஷ் 'கமின்' சொன்னதைத் தொடர்ந்து ஒரு 'ஸேல்ஸ் ரெப்'பின் தோற்றத்தில் சுத்தமான அந்த ஆசாமி உள்ளே நுழைந்தான்.



அவன் சிரித்தபோது பற்கள் மட்டும் பான் கறையோடு அசிங்கமாய் இருந்தது.

பரமேஷ் அவனைப் பார்த்துக் கேட்டான்.

''ஆல்பம் கொண்டுவந்தியா?''

''கொண்டுவந்திருக்கேன் ஸார்.''

சிவப்பு நிற உறையைப் போர்த்தியிருந்த அந்த ஆல்பத்தை படுக்கையின்மேல் வைத்தான்.

அந்த ஆல்பத்தை வாங்கிப் புரட்டிய பரமேஷ் - புரட்டுவதை சட்டென நிறுத்தி - விஜய்யிடம் நீட்டினான்.

''இங்கே பார்த்தியா விஜய்?''

விஜய்யின் பார்வை ஆல்பத்தின்மேல் விழுந்தது.

ஈர்க்கும் புன்னகைகளோடு காட்சியளித்த விதம்விதமான விபசாரிப் பெண்களின் புகைப்படங்கள் வரிசையில் -

காந்தமாய்ச் சிரித்துக் கொண்டு -

கவுசிகா தெரிந்தாள்.

---

# 5

---

கவுசிகாவை அந்த போட்டோ ஆல்பத்தில் பார்த்த நிமிடம் விஜய்க்கு தலையில் சம்மட்டி அடி வாங்கியதைப் போல் இருந்தது.

அந்த ஈர்க்கும் புன்னகை.

மேலுதட்டு மச்சம்.

வெண்ணெய்த் துண்டமாய் மின்னும் மோவாய்.

விஜய்யின் அடிவயிறு பூராவும் கேஸ்

அடுப்பைப் பற்றவைத்தது போல தீ ஜ்வாலை தொடங்கியிருந்தது.

அந்த பிம்ப்பை நிமிர்ந்து பார்த்தான்.

''இ... இவளைக் கூட்டிட்டு வரமுடியுமா?''

அந்த பிம்ப் கறைப் பற்கள் பளிச்சிட புன்னகைத்தான்.

''இவள் ஃபாமிலி கேர்ள் ஸார்... அதிகப் பணம் செலவாகும். பரவாயில்லையா?''

''பணத்தைப் பத்திப் பிரச்சினையில்லை... இவ எங்கே இருக்கா?''

விஜய் கேட்டதும் - அந்த பிம்ப் இன்னும் அகலமாய்ப் புன்னகைத்தான்.

''ஸாரி ஸார்... அந்த விபரங்களையெல்லாம் நாங்க சொல்ல மாட்டோம்.''

''ஏன்?''

''இந்தப் பொண்ணு விபசாரத்தில் ஈடுபட்டிருக்காள்னு இவளைச் சேர்ந்த யாருக்குமே தெரியாது.''

''இவள் பேர் என்ன?''

''வயலட்.''

''வயலட்டா?'' - விஜய் பரமேஷைத் திரும்பிப் பார்க்க - அவன் சொன்னான்.

''அநேகமா வயலட்ங்கறது தொழிலுக்காக அவ வைச்சிருக்கிற பேரா இருக்கும்.''

அந்த பிம்ப் தலையாட்டி ஆமோதித்தான்.

''நீங்க சொல்றது சரிதான் ஸார்... அவளோட நிஜமான பேர் வேற... வயலட்ங்கறது... இந்த தொழிலுக்காக அவ வைச்சிருக்கிற பேர்.''

விஜய் குறுக்கிட்டுச் சொன்னான்.

''எனக்கு இப்போ இவதான் வேணும்.''



''இவளுக்கு டிமாண்ட் அதிகம் ஸார்... அதே மாதிரி அவளும் நிறையப் பணம் கேப்பா... அதனால மத்த எந்தப் பொண்ணை விடவும் இவளுக்கு நீங்க ரெண்டு மடங்கு அதிகமா செலவு செய்ய வேண்டியிருக்கும்.''

விஜய் தன் ஜெர்கின் பாக்கெட்டில் கையை நுழைத்து ஒரு கத்தைப் பணத்தை எடுத்து அவன் முன்னால் போட்டான்.

''இங்கே பாரு மேன்... பணம் ஒரு பிரச்சினையில்லை... இவளை இப்போ கூட்டிட்டு வரமுடியுமா... முடியாதா?''

சலவை மணம் இழக்காத அந்தக் கரன்சிக் கத்தையைப் பார்த்ததும் பிம்ப்பின் முகம் பிரகாசமடைந்தது.

வேகமாய்த் தலையை ஆட்டினான்.

''கொஞ்ச நேரம் வெயிட் பண்ணுங்க ஸார்... நான் பட்சியோட வர்றேன்.''

பிம்ப் சுறுசுறுப்பான நடையில் அந்த அறையைவிட்டு வெளியேறினான்.

அவன் சென்றபின் -

விஜய் குமுறினான்.

''சே... என்னால இதை ஜீரணிக்கவே முடியலை பரமேஷ்.''

''ஏன்?''

''இது பச்சைத் துரோகம் இல்லையா? அத்தனை டிரஸ்சையும் உரிச்சிப் போட்டுட்டு சினிமாவுல ஆடற கவர்ச்சி நடிகைகள் எவ்வளவோ தேவலாம்... அவங்ககிட்டே ஒளிவு மறைவு இல்லை.''

பரமேஷ் அவனைச் சமாதானப்படுத்தினான்.

''கூல் டவுன் விஜய்... நான்தான் அன்னிக்கே அவ வண்டவாளத்தை உடைச்சிட்டேனே... வயலட்ங்கற பேரில்

இவள் இந்த ஸிட்டி பூராவும் பிரபலம்... இந்த ஆல்பம் மட்டுமில்லை... ஸிட்டியில இருக்கிற அத்தனை பிம்ப்களின் கையிலிருக்கும் ஆல்பத்திலும் இவளோட படம் இருக்கு... வேணுமின்னா வேற சில பிம்ப்களையும் வரவழைச்சிப் பார்க்கலாம்.''

விஜய் தலையாட்டி மறுத்தான்.

''அவசியமில்லை... அவ வண்டவாளம் இன்னும் கொஞ்ச நேரத்தில் வெட்ட வெளிச்சமாயிடும்.''

காத்திருந்தார்கள்.

நிமிஷங்கள் பில்ட்டரில் இறங்கும் காபி டிகாக்ஷன் மாதிரி சொட்டு சொட்டாக வடிந்துகொண்டிருந்தன.

கிட்டத்தட்ட அரை மணி நேரம் கழிந்த பின் - அந்த பிம்ப் திரும்பி வந்தான்.

இந்த அரை மணி நேரமும் அங்குமிங்கும் தீவிரமாய் அலைந்திருக்கிறான் என்பதை முகத்தில் பாரா போட்டிருந்த வியர்வைத் துளிகள் காட்டிக் கொடுத்தன.

''என்னாச்சு... நீ மட்டும் வந்திருக்கே?'' - விஜய் கேட்டதும், பிம்ப்பிடமிருந்து தயங்கும் குரலில் பதில் வந்தது.

''அந்தப் பொண்ணு இப்போ வராது ஸார்.''

''ஏன்?''

''அவளுக்கு இந்த வாரம்தான் கல்யாணம் ஆகியிருக்காம் ஸார்... இனிமே வருமோ வராதோன்னு தெரியலை... அப்படியே வந்தாலும் பகல் நேரத்தில்தான் அழைச்சிட்டு வரமுடியும்... நீங்க இந்த ஆல்பத்தில் வேற ஒரு பொண்ணை செலக்ட் பண்ணுங்க.''

'இந்த வாரம்தான் கல்யாணம்



...யிருக்காம் ஸார்.'

'இனிமே வராது... அப்படியே வந்தாலும் ...கல் நேரத்தில்தான் அழைச்சிட்டு ...ரமுடியும்.'

அவன் சொன்னதைக் கேட்டு விஜய்யின் ...கம் தக்காளிப்பழம் போலச் ...வந்திருந்தது.

அவன் நிலையை உணர்ந்து பரமேஷ் ...ம்ப்பிடம் பேசினான்.

''இந்த ஆல்பத்தில் எங்களுக்கு வேற ...ந்தப் பொண்ணும் பிடிக்கலை... முடிஞ்சா ...வளைக் கூட்டிட்டு வா... இல்லைன்னா ...வற எந்தப் பொண்ணும் வேண்டாம்.''

''வேற ஆல்பம் கொண்டுவந்து தரட்டுமா ...ஸார்?''

''வேண்டாம்... நீ போகலாம்... இவ்வளவு ...நேரம் எங்களுக்காக அலைஞ்சதுக்காக ...இந்தப் பணத்தை டிப்ஸா வச்சுக்க.''

ஒரு ஐம்பது ரூபாய்த் தாளை அவன் ...கையில் திணித்து அவனை அனுப்பி ...வைத்தான்.

விஜய்யிடம் திரும்ப - அவன் ஆத்திரத்தின் உச்சத்தில் இருந்தான்.

''இதைவிட வேற எப்படி ப்ரூவ் பண்ண ...முடியும் விஜய்?''

விஜய் புயல் மாதிரி எழுந்தான்.

''பரமேஷ்... கவுசிகா ஒரு பச்சை விபசாரிங்கறது ஆதாரபூர்வமா இப்போ தெரிஞ்சிபோச்சு... நல்ல சமயத்தில் என்னை நீ எச்சரிக்கை செஞ்சதுக்காக தாங்க்ஸ்... இனி நான் அவளை என்ன செய்யணுமோ செஞ்சிக்கறேன்.''

உக்கிரத்தோடு கிளம்பும் விஜய்யைத் தடுக்க முற்பட்டான் பரமேஷ்.

"விஜய்... நீ அவளை என்
செய்யப்போறே?"

அவன் குரலை லட்சியம் செய்யாம
கதவைப் படாரென அறைந்து சாத்திவிட்
அந்த ஹோட்டல் அறையை விட்
வெளியேறினான் விஜய்.

# 6

அந்த சாயந்தர வேளையில் வயலட் பஸ்
ஸ்டாப்பை நோக்கி நடக்கிறபோது
அர்ஜுனின் பைக் அவள் ஓரமாக
உரசிக்கொண்டு வந்து நின்றது.

"ஹாய் வயலட்."

அவனைப் பார்த்ததுமே - லேசாய் முகம்
மாறினாள் வயலட்.

அர்ஜுன் அதைக் கவனித்திருந்தான்.

"ஏய்... என்ன எப்பவும் உற்சாகமா திருப்பி
ஹாய் சொல்லுவே... இன்னிக்கு உன்
முகமே ஒரு மாதிரி இருக்கு?"

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"அர்ஜுன்... இப்ப எதுக்காக இங்கே
வந்திருக்கே?"

அவன் அவளைப் புதிர்ப் பார்வை
பார்த்தபடி கேட்டான்.

"இதென்ன புதுக் கேள்வி? வழக்கமான
காரணத்துக்காகத்தான் வந்திருக்கேன்.!"

"பார்ட்டி காத்திட்டிருக்காங்களா?"

"ஆமா..."

"எங்கே?"

"கோடம்பாக்கம் ஏரியாவில் ஒரு



ண்ட்டான லாட்ஜில்."

"லாட்ஜ் போன் நம்பர் வைச்சிருக்கியா?"

அர்ஜுனின் பார்வையில் குழப்பம்
கரித்தது.

"வைச்சிருக்கேனே... எதுக்காகக்
க்கறே?"

"உடனே லாட்ஜுக்கு ஒரு போன் போடு."

"லாட்ஜுக்கு போன் பண்ணணுமா?
துக்காக?"

"வயலட் வரமாட்டா... வேற யாராவது
பொண்ணைப் பாருங்கன்னு
வங்களுக்கு தகவல் சொல்லிடு."

அர்ஜுன் அவள் சொன்னதைக் கேட்டு
ஜமாகவே அதிர்ந்தான்.

"வயலட்... உனக்குப் பைத்தியம் ஏதாவது
புச்சிருக்கா? மார்க்கெட்ல அருமையா
ாயிட்டிருக்கே... அவனவன் உனக்காகக்
கட்ட பணத்தைக் கொட்டத் தயாரா
ருக்கான்... அதுக்கப்புறம் எவ்வளவு
பரைப் பார்த்துட்டே.... எவ்வளவு பணம்
ம்பாதிச்சுட்டே... திடீர்னு என்னாச்சு
னக்கு?"

வயலட் அமைதியாக அவனைப் பார்த்துச்
சான்னாள்.

"முதல்ல நான் சொன்ன மாதிரி போன்
ண்ணி 'வயலட் இன்னிக்கு
ரமாட்டாள்'ன்னு சொல்லு அர்ஜுன்...
த்ததெல்லாம் அப்புறமா பேசிக்கலாம்."

"உனக்கு உடம்புக்கு சரியில்லையா?
அல்லது 'அந்த' நாட்களா? இல்லையே...
ன்னோட டேட்ஸ் எனக்குத் தெரியுமே."

வயலட் மீண்டும் அதையே சொன்னா

''அர்ஜுன் இப்ப என்கூட பேசணும்ன்
நினைச்சின்னா... நான் சொன்ன மாதி
போன் பண்ணிட்டு வா.''

அவன் குழப்பத்தோடு பைக்கின் சை
ஸ்டாண்டைப் போட்டுவிட்டு
எதிர்சாரியிலிருந்த டெலிபோன் பூத்
நோக்கி நடந்தான்.

பூத்துக்குள் நுழைந்து கதவை
சாத்திக்கொண்டவன் - சொற்ப நேரத்தி
திரும்பி வந்தான்.

''போன் பண்ணி சொல்லிட்டே
வயலட்... பாவம் அவன் ஏற்கனவே
உன்னைத் தொட்டிருப்பான் போல.
'அய்யோ... வயலட் வரலையா'ன்
புலம்பறான்.''

வயலட் எந்த ரியாக்ஷனுமே இல்லாம
அவனைப் பார்த்தாள்.

காய்ந்த குரலில் சொன்னாள்.

''அர்ஜுன்... நானே உன்னைக் கூப்பிட்டு
பேசணும்ன்னு இருந்தேன்... இன்னிக்
நீயே வந்து சேர்ந்ததும் நல்லதாப்போச்சு...
நாம ஃப்ரீயா கொஞ்ச நேரம் பேசணும்...
எங்கே உக்காந்து பேசலாம்?''

''ஹோட்டல் டிராபிக் ஜாம்?''

''வேண்டாம்... பீச்சுக்கே
போயிடலாமா?''

தோள்களைக் குலுக்கினான்.

''ஓ... போகலாமே!''

ஸ்டாண்டிலிருந்து பைக்கை விடுவித்து -
கிக்கரை உதைக்க - அது ஆவேசமாய்க்



றியது-

''உக்காரு வயலட்.''

அவள் பில்லியனில் அமர்ந்ததும்
சைலன்சரின் வாய் நிறைய நீலப் புகையைத்
துப்பியபடி - பைக் தார் சாலையைத் தேய்க்க
ரம்பித்தது-

பத்தாவது நிமிடம் - சிலுசிலுவென்று
ற்று தழுவும் கடற்கரை சாலையில்
ருந்தார்கள்.

பேவ்மென்ட்டுக்கு அப்பாலிருந்த
றுகலான பாதையில் பைக்கை செலுத்தி
ஓரமாய் ஸ்டாண்டைப் போட்டான்
அர்ஜுன்.

வெகு தூரத்தில் ராபின் நீல நிறத்தில்
நீர்ப்பரப்பு அசைந்து கொண்டிருந்தது.

புல்வெளியில் அமர்ந்தாள் வயலட்.

அர்ஜுன் எதிரே அமர்ந்தபின்
மெதுவாய்ச் சொன்னாள்:

''அர்ஜுன்... நாம மொத மொதலா இங்கே
வந்திச்சோமே... அந்த நாள் ஞாபகம்
இருக்கா? உனக்கு எப்படியோ தெரியலை...
எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருந்தது
தெரியுமா?''

அவன் சலிப்பாய் அவளைப் பார்த்தான்.

''இப்ப எதுக்கு அந்த வெட்டிப்பேச்சு?
அநியாயமா ஒரு பார்ட்டியை நழுவ
விட்டுட்டு இங்கே வந்து உக்காந்து பழைய
காதல் நினைவுகளில் மூழ்கிட்டியே...
உனக்கு என்ன பைத்தியமா பிடிச்சிருக்கு?''

''நிஜமான கனவுகளோட காதலிக்கறவங்
களுக்குத்தான் என்னோட ஃபீலிங்ஸ் புரியும்

அர்ஜுன்... நீ என்ன
ஏமாத்தறதுக்காகத்தானே காதலிக்கிற மா
நடிச்சே... அதனால அந்த நினைவுகளே
மகாத்மியம் என்னிக்குமே உனக்குத் தெரி
போறதில்லை.''

''சரி... இப்ப வந்த விஷயத்
சொல்லு.''

''இனிமே இந்த ரெட்டை வாழ்க்
வேண்டாம்ன்னு முடிவு பண்ணிட்டேன்
அதைச் சொல்லறதுக்காகத்தான் உன்னை
கூப்பிட்டேன்.''

''என்ன உளர்றே?''

''உளறலை... நல்லா யோசிச்சு
பார்த்துட்டுத்தான் இந்த முடிவுக்கு நா
வந்தேன்.''

''எந்த போதி மரத்துக்கடியில் உக்காந்து
இந்த திடீர் ஞானோதயம் உனக்கு
ஏற்பட்டுச்சு?''

''வீட்ல கல்யாணம் நிச்சயம்
பண்ணிட்டாங்க... அதனாலதான்
இதையெல்லாம் நிறுத்திட முடிவு
பண்ணினேன்.''

அதிர்ந்தான் அர்ஜுன்.

''வ... வயலட்... நீ... நீ... என்ன
சொல்றே?''

''எனக்கு கல்யாணம் நிச்சயம்
பண்ணிட்டாங்க... இன்னும் ஒரு மாசம்
போனா நான் வேற ஒருத்தருக்கு
மனைவியாயிடுவேன்னு சொன்னேன்...
இதுவரைக்கும் பணத்துக்காக இந்தத் தப்பை
செஞ்சேன்... இதுநாள் வரைக்கும்



ன்னினது தப்பு... இனிமே இதே தப்பை
தொடர்ந்து செஞ்சா அதுக்குப் பேர்
துரோகம்.''

''இடியட்... எவனோ ஒருத்தனைக்
கல்யாணம் பண்ணிக்கிறேன்னு
சொல்றியே... அப்போ நான் என்ன
ஆகிறது?''

''வாட் டு யூ மீன்?''

''நான் உன் லவ்வர் இல்லையா வயலட்?
நான்தானே உன்னைக் கல்யாணம்
பண்ணிக்கணும்?''

''நீ லவ்வராத்தான் இருந்தே... அது
அன்னால... என்னிக்கு என்னோட கற்பை நீ
உன் ஃப்ரெண்ட்ஸோட பங்கு
போட்டியோ... அன்னிக்கே உனக்கும்
எனக்கும் இடையிலான புனிதமான பந்தம்
அறுபட்டுப் போச்சு.''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. உன்
மூலமா வர்ற வருமானத்தை நான் இழக்க
விரும்பலை.''

''தெரியுமே... வருமானத்துக்காகத்தான்
லவ்வர்ங்கற பந்தத்தை வலுக்கட்டாயமா
இழுக்க நினைக்கிற... ஸாரி அர்ஜுன்.''

''சும்மா ஸாரி சொன்னா நான்
விட்டுடுவேன்னு நினைக்கறியா? நான்
இதுக்கு ஒத்துக்க மாட்டேன்.''

''என்னை என்ன செய்யச் சொல்றே?'' -
நிதானமாய் வயலட் கேட்க அர்ஜுன்,
புன்னகையோடு சொன்னான்.

''உனக்கு ரெண்டு வாய்ப்பு தர்றேன்.''

''சொல்லு.''

''வாய்ப்பு ஒண்ணு: என்னைக் கல்யாணம்

பண்ணிட்டு இதே தொழிலில் எனக்
சப்போர்ட்டா இரு.''

அவள் அவனை அவஸ்தையாய்
பார்த்தாள்.

''எத்தனை நாளைக்கு அர்ஜுன்? நா
இப்படியே எத்தனை நாளைக்கு இருப்பே
ரொம்ப நாளைக்கு என் உடம்பு தாங்காது
அதுக்கப்புறம் நீயும் என்னை உதறிடுவே
நிலையில்லாத இந்த வாழ்க்கை எனக்
வேண்டாம்... லைஃப்ன்னா அதி
செக்யூரிட்டி இருக்கணும்.''

''கொஞ்ச நாளைக்கு உன் இளமைை
எல்லாருக்கும் பந்திவை. அதுக்கப்புறம்
இதே லைனில் நான் வேற செ
ரூட்டெல்லாம் காட்டறேன்... சம்பாதிக்க
ரொம்ப சுலபமான வழியெல்லாம்
இருக்கு... உன்னோட லைஃப்
செக்யூரிட்டிக்கு நான் கேரண்ட்டி தர்றேன்
வயலட்.''

அவன் விரக்தியாய் அவளைப் பார்த்துச்
சிரித்தான்.

''லைஃப் செக்யூரிட்டியைப் பத்தி நீ
பேசறியா? பாதுகாப்பான - கண்ணியமான
என்னோட வாழ்க்கையைக் குலைச்சதே
நீதானே... லைஃபில் எனக்குக்
கிடைச்சிருக்கும் ரெண்டாவது வாய்ப்பை
யும் உன்னோட நிர்பந்தத்துக்காக இழக்க
விரும்பலை.''

''சரி! உனக்குக் கிடைச்சிருக்கும்
ரெண்டாவது வாய்ப்பை நீ இழக்கவே
வேண்டாம்... என்னோட ரெண்டாவது
வாய்ப்பைக் கேட்டா அது உனக்குப்



யும்.''

வயலட் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''உன்னோட ரெண்டாவது ஆப்ஷன்
ன?''

...ானை மென்றுகொண்டே அர்ஜுன்
...ன்னான்.

''நீ யாரை வேணும்ன்னாலும் கல்யாணம்
...ணிக்கோ... ஆனா தேனிலவெல்லாம்
...டிந்சு வழக்கமான வாழ்க்கை
...ங்கினதுக்கப்புறம் வழக்கம் போல நீயும்
...னோட தொழிலுக்கு... ஸாரி நம்ம
...ாழிலுக்கு புருஷனுக்குத் தெரியாம
...தானை பண்ணிட்டிரு... உன்னோட
...ாட்டோவை அவ்வளவு சுலபத்தில்
...ம்பங்களில் இருந்து ரிமூவ் பண்ண நான்
...ரும்பலை.''

வயலட் அவன் சொன்னதைக் கேட்டு
...ப்படியே உறைந்துபோய் நின்றாள்.

அவள் உள்மனக அர்ஜுன் சொன்ன
...ரண்டு வாய்ப்புக்களையும் தீவிரமாக அசை
...ாட்டுக் கொண்டிருந்தது.

## 7

**கா**ர் ஒரு ராட்சஸ 'க்றீச்' ஓசையோடு
...ரேக் அடித்து போர்டிகோவில் புதைந்து
...ன்றது.

காரின் கதவைப் படீரெனத்
...றந்துகொண்டு இறங்கிய விஜய் - அதே
...வகத்தோடு வீட்டுக்குள்ளே நுழைந்தான்.

அவனை எதிர்கொண்ட கவுசிகா -

அவனுடைய ஆக்ரோஷமான முகத்தைப் பார்த்துப் புருவங்களைச் சுருக்கியபடியே கேட்டாள்.

"என்னாச்சு... ஏன் இவ்வளவு வேகமா காரை ஓட்டிட்டு வர்றீங்க."

முகப் பரப்பு பூராவும் செர்ரிப் பழமாய் சிவந்திருக்க - விஜய் சொன்னான்;

"என்னைப் பிடிச்ச பிசாசை எவ்வளவு சீக்கிரமா முடியுமோ... அவ்வளவு சீக்கிரம் ஓட்டணும்... அதுக்காகத்தான் அவசரமா காரை ஓட்டிட்டு வர்றேன்."

"நீங்க என்ன சொல்றீங்க? எனக்கு எதுவுமே புரியலையே."

"புரியாதுடி... உனக்குக் கடைசி வரைக்கும் புரியவே புரியாது... தூங்கறவங்களை எழுப்பலாம்... ஆனா தூங்கற மாதிரி நடிக்கிறவங்களை எழுப்பவே முடியாதுன்னு... சும்மாவா சொன்னாங்க."

கவுசிகா அவனை உச்சபட்ச குழப்பத்தோடு பார்த்தாள்.

"நான் நடிக்கிறேனா?"

"ஆமா..."

"சொல்றதை வெளிப்படையா சொல்லுங்க... நீங்க மனசுக்குள்ளே எதையோ வைச்சுகிட்டு குத்தலாவே பேசிட்டிருந்தா நான் என்ன செய்ய முடியும்?"

"நீ எதுவுமே செய்ய வேண்டாம்... உன்கிட்டே வெட்டியா விவாதம் பண்ணிட்டிருக்க எனக்கு நேரமில்லை... இப்போ உன்னை உங்க வீட்டில் கொண்டுபோய்த் தள்ளிட்டு வரப்போறேன்... இன்னும் அஞ்சு நிமிடம் டயம் தர்றேன்... உன்னோட துணிமணி



எல்லாம் எடுத்து வைச்சிக்கோ."

கவுசிகாவுக்கு அவன் பேச்சு அதிர்ச்சிகரமாய் இருந்தது.

முதல் முதலாய் லேசான கலவரத்தோடு அவனைப் பார்த்தாள்.

"ஏ... எங்க வீட்டிலே கொண்டு போய் என்னை விடப்போறீங்களா... ஏ... ஏன்?"

"காரணம் உனக்கே தெரியும்... உன்கிட்டே அதைதான் விலாவாரியா விளக்க வேண்டிய அவசியமில்லை."

"ஏ... என்மேல நீங்க சந்தேகப்படறீங்களா?"

தயக்கத்தோடு அவள் கேட்டதும் - அவன் ருத்திரச் சிரிப்பு சிரித்தான்.

"அம்மா... தாயே... நீ யாரு... எப்படிப்பட்டவள்ங்கறதில் எனக்கு எந்த சந்தேகமுமே இப்ப இல்லை."

"இப்படியே சூசகமாவும் குத்தலாவும் பேசிட்டிருந்தா நான் என்னதான் செய்ய முடியும்?"

"கரெக்ட்... இப்படி நான் பேசிட்டிருந்தா உன்னால என்கூட சேர்ந்து வாழமுடியாது இல்லையா? நாம பிரிஞ்சிடுவோம்."

கவுசிகா அவன் சொன்னதைக் கேட்டு உறைந்தாள்.

"நமக்குக் கல்யாணம் ஆகி முழுசா இன்னும் ஒரு வாரம்கூட ஆகலைங்க... அதுக்குள்ளே இப்படி ஒரு முடிவை நீங்க எடுக்கக் காரணம் என்ன? முதலிரவு அன்னிக்கே என்னை நீங்க தள்ளி வைச்சிங்க... நான் ஏன்னு கேட்டேனா? எச்.ஐ.வி. பரிசோதனை பண்ணி எனக்கு எயிட்ஸ் நோய் இருக்கான்னு பார்த்திங்க... அதையும் நான் சகிச்சிகிட்டு - எதிர்த்து ஒரு

வார்த்தைகூட கேக்கலையே
சுகமானாலும் சரி, துக்கமானாலும்
கட்டிகிட்ட ஆம்பளைக்கு எல்
விஷயத்திலும் அட்ஜஸ்ட் பண்ணி
போகணும்ன்னு நினை
நடந்துகிட்டதுக்காக எனக்கு நீங்க தர்ற ப
இதுதானா?''

அமைதியாய் அவளைப் பார்த்து சொன்னான்.

''உனக்கு நான் கொடுத்த அஞ்சு நிமிட டயம் முடிஞ்சது கவுசிகா.''

''இல்லைங்க... நான் உங்ககூட வரமாட்டேன்... எதுவா இருந்தாலும் எல்லாரையும் இங்கே வரச்சொல்லி நியாயம் கேளுங்க... வீட்டை விட்டு நான் போக மாட்டேன்.''

. விஜய் விருட்டென்று சீறினான்.

''எல்லாரையும் இங்கே வரவழைச்சு நான் அசிங்கப்படணும்ன்னு நினைக்கறியா? உன்னை மாதிரி உடம்பு மரத்துப்போன ஆளில்லை நான்... எனக்கு வெக்கம்... மானம்... ரோஷம்... சூடு... சொரணை... எல்லாமே இருக்கு.''

சொன்ன விஜய்யை அதிர்ச்சியோடு பார்த்தாள் கவுசிகா.

அவள் பார்த்துக் கொண்டிருக்கிறபோதே - சட்டென்று அவளுடைய தலைமுடியைக் கொத்தாகப் பற்றி தரதரவென்று காரை நோக்கி இழுத்துக் கொண்டு போக ஆரம்பித்தான் விஜய்.

''என்னங்க...''

கவுசிகாவின் கதறலை மதிக்காமல் காரின் பின்பக்கக் கதவைப் படீரென்று திறந்து பின் ஸீட்டில் அவளை எறிந்தான்.



அவன் வீசிய வீசலில் கவுசிகா அலங்கோலமாய்ப் போய் சீட்டில் விழுந்தாள்.

கட...

கதவை அறைந்து சாத்திவிட்டு - வேகமாய்க் காரைச் சுற்றி வந்து டிரைவிங் இருக்கையில் அமர்ந்தான்.

ஸ்டியரிங்கில் அவன் கை படர்ந்த நொடியிலிருந்தே - வேகமெடுத்தது கார்.

அந்த ராத்திரி நேர பத்து மணிக்கு போக்குவரத்து அதிகம் இல்லாமல் சாலை துடைத்து வைத்த மாதிரி இருக்க - பனிக்கட்டிமேல் நீந்திச் செல்வதைப் போல விர்ர்ரென்று விரைந்து சென்றது கார்.

கவுசிகா வழி நெடுக விசும்பிக்கொண்டே வந்தாள்.

அதைப் பொருட்படுத்தாமல் காரை இயக்கி வந்த விஜய் - சரியாய்ப் பதினைந்தாவது நிமிடம் - கவுசிகாவின் வீட்டு வாசலில் டயர்கள் தேய பிரேக் அடித்தான்.

அடித்து நொறுக்குவதைப் போல ஓசையுடன் காம்பவுண்டு கேட் திறக்கும் சத்தம் கேட்டு - பட்பட்டென்று விளக்குகள் எரிந்தன.

கவுசிகாவின் அப்பாவும், அம்மாவும் கதவைத் திறந்துகொண்டு போர்டிகோவுக்கு வந்தார்கள்.

கவுசிகா விஜய்யால் இழுத்துவரப்படும் - காட்சியைக் கண்ணில் வாங்கி அதிர்ச்சியோடு நின்று விட்டார்கள்.

அவள் அப்பா அலறினார்.

''மாப்பிள்ளை... என்ன இது...''

''உங்க மகள் கவுசிகா... இவளை எப்படிக்

கூட்டிட்டுப் போனேனோ அதே மாதிரி கொஞ்சம்கூட உருக்குலையாம திரும்ப கூட்டிட்டு வந்து விட்டிருக்கேன்... அப்ப ஏதாவது இவ உருக்குலைஞ்சு போயிருந்தாள்ன்னா அதுக்கு நிச்சயமா நா காரணமா இருக்க மாட்டேன் மாமா... வே எவனாச்சும்தான் காரணமா இருப்பான்.''

விஜய் சொன்ன வார்த்தைகளின் தீவிர ஒரு தீத் துண்டத்தைப் போல அவர்க நெஞ்சைக் காயப்படுத்த - கவுசிகாவி அப்பா திடுக்கிடலோடு அவனைப் பார்த்தா

''மாப்பிள்ளை... நீங்க ஏதோ கோபத்தி இருக்கிங்கன்னு நினைக்கிறேன்... உங்க கோபத்துக்குக் காரணம் என்னவா இருந்தாலும் சரி... இப்படி வாசலில் நின்னுட்டு கத்த வேண்டாம்... வாங்க வீட்டுக்குள்ளே உக்காந்து பேசலாம்.''

''உங்க வீட்டுக்குள்ளே நான் காலடி எடுத்து வைச்சேன்னா... அதுக்கப்புறம் அந்தப் பாவ அழுக்கைப் போக்கிக்க ஆயிரம் முறையாவது நான் கங்கையில குளிச்சாகணும்.''

''மாப்பிள்ளை... யாரோ உங்ககிட்டே தப்பா எதையோ சொல்லியிருக்காங்கன்னு நினைக்கிறேன்... இப்படி பூடகமா பேசிட்டிருக்க வேண்டாம்... வீட்டுக்குள்ளே வந்து தெளிவா உங்க கோபத்துக்கான காரணம் என்னன்னு சொல்லுங்க.''

''உக்காந்து பேசறதுக்கான பொறுமை இப்ப என்கிட்டே இல்லை... உங்க மகளோட இனிமே என்னால ஒரு நிமிடம்கூட வாழ முடியாது... அவளை இங்கே விட்டுட்டுப் போகத்தான் வந்தேன்.''

''காரணம் எதுவும் சொல்லாம இப்படி



செய்யறது கொஞ்சம்கூட நல்லா இல்லை.''

விஜய் விரக்தி சிரிப்பு ஒன்றை அவர்களுக்குக் கொடுத்தான்.

''காரணத்தைச் சொன்னேன்னா... பாவம் வயசான காலத்தில் உங்க நிம்மதி கெட்டுப் போயிருமேன்னு யோசிக்கறேன்.''

''இப்படி நிர்த்தாட்சண்யமா கவுசிகாவை உதறித் தள்ளிட்டுப் போறிங்களே... அதைவிட என் நிம்மதியைக் குலைக்கிற விஷயம் வேற எதுவுமே இருக்க முடியாது.''

''இப்போ அப்படித்தான் சொல்லுவீங்க... ஆனா நான் விஷயத்தைச் சொன்ன பின்னால நீங்க நெஞ்சைப் பிடிச்சிகிட்டு விழுந்தாலும் ஆச்சரியப்படறதுக்கில்லை.''

கவுசிகா விறிடும் குரலில் சொன்னாள்.

''என்னைப் பெத்தவங்க நெஞ்சைப் பிடிச்சிக்கிட்டு விழற அளவுக்கு மனசறிஞ்சு நான் எந்தத் தப்புமே செஞ்சதில்லை... இவ்வளவு தூரம் ஆனதுக்கப்புறம் காரணத்தைச் சொல்லாம நீங்க இங்கிருந்து போக விடமாட்டேன்.''

''காரணத்தைச் சொல்றேன்... நீ காசுக்காக உடம்பை விக்கற கேவலமான தொழிலைச் செய்யற பெண்... தொழிலுக்காக நீ வைச்சிகிட்டிருக்கும் பேர் வயலட்... உன்னைப் பெத்தவங்க கண்ணில் மண்ணைத் தூவிட்டு நீ அந்தத் தொழிலை இதுநாள் வரைக்கும் செஞ்சிருக்கலாம்... ஆனா என்னை அதே மாதிரி ஏமாத்த முடியாது... உன்னோட யோக்கியதையை நேரடியா நானே பார்த்துத் தெரிஞ்சிக்கிட்டப்புறமும் உன்கூட சேர்ந்து வாழ நான் ஒண்ணும்

இளிச்சவாயன் இல்லை.''

கவுசிகா அதிர்ச்சியில் ஒரு சிலையைப் போல உறைந்து நின்றாள்.

## 8

அந்த நாளின் காலை பத்து மணி.

டெலிபோன் விறிட்டது.

விஜய் ரிசீவரை எடுத்துக் காதில் வைத்தான்.

''ஹலோ...''

''நான் பரமேஷ் பேசறேன்.''

''சொல்லு பரமேஷ்.''

''எப்படி இருக்கே?''

''ரொம்ப அப்செட்... ரெண்டு நாளாத்தான் ஆபிசுக்குப் போறேன்.''

''கவுசிகாவைக் கொண்டு போய் அவங்க வீட்டிலே விட்டுட்டியா?''

''ஆமா.''

''அவங்க பிராப்ளம் எதுவும் பண்ணலையா?''

''தப்பை அவங்க பேரில் வைச்சிகிட்டு எப்படி பிரச்சினை பண்ணுவாங்க? கடைசியில் என்னோட லைஃப்தான் நரகமாயிடுச்சு.''

''டோன்ட் பி சில்லி விஜய்... அந்தப் பொண்ணோட மோசமான நடத்தைக்காக நீ ஏன் கவலைப் படணும்... நீ ஏன் அப்செட் ஆகி உன்னோட லைஃபைப் பாழாக்கிக்கணும்... விடுதலைப் பத்திரம் வாங்க முயற்சி பண்ணு... தீர விசாரிச்சு... வேற ஒரு நல்ல பொண்ணாப் பார்த்து கல்யாணம் பண்ணிக்கிட்டு புது வாழ்க்கையைத் தொடங்கு.''

''கவுசிகாவே பார்த்து விசாரிச்சுக் கல்யாணம் பண்ணின பொண்ணுதான்... எந்தப் புத்தில் எந்தப்



பாம்பு இருக்குன்னு யாருக்குத் தெரியும்.''

''ஒரேடியா வாழ்க்கை வெறுத்த மாதிரி பேசாதே... எல்லாப் பெண்களுமே மோசம்னு நினைக்கறது தப்பு.''

''வேண்டாம் பரமேஷ்... இப்போதைக்கு கல்யாணத்தைப் பத்தி பேசாதே... நடந்த விஷயங்களை முதல்ல நான் முழுசா மறக்க விரும்பறேன்.''

''ஓக்கே... டேக் யுவர் ஓன் டயம் அண்ட் ரிலாக்ஸ்.''

ஆறுதலாய்ச் சொல்லிவிட்டு - எதிர்முனையில் ரிசீவரைச் சாத்தினான் பரமேஷ்.

விஜய்யும் ரிசீவரை அதனிடத்தில் வைத்துவிட்டு - கீ ஸ்டாண்டில் மாட்டியிருந்த கார் சாவியைக் கையிலெடுத்தான்.

காருக்குள் நிரம்பி என்ஜினைத் திருகினான்.

மெலிதாய்க் கனைத்துவிட்டு கார் இயக்கம் பெற்றது.

ஆபீஸை நோக்கி விரைய ஆரம்பித்தது.

நந்தனம் சிக்னலில் காத்திருந்தபோது காருக்குள் இணைத்திருந்த செல்போன் முணுமுணுக்க ஆரம்பித்தது.

ங்...

ங்...

ஙீ...

ஹேண்ட் செட்டைக் கையிலெடுத்து பொத்தானை அழுத்தி இணைப்புப் பெற்றான்.

''ஹலோ.''

''நான் ஆபீஸிலிருந்து கணபதி பேசறேன் ஸார்.''

''சொல்லு கணபதி... என்ன விஷயம்?''

''ஒரு சின்ன பிராப்ளம் ஸார்... அதனாலதான் செல் நம்பருக்கு டயல் பண்ணினேன்.''

''என்ன பிராப்ளம்... சொல்லு.''

''நீங்க உடனே ஏ-3 போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகணும்.''

கோனாதினைப் போருநிலைப் பார்த்தான்.

''போலீஸ் ஸ்டேஷனுக்கா... எதுக்கு?''

''நம்ம ஆபீஸ் அசிஸ்டெண்ட் மூர்த்தி இல்லையா? அவரைப் பிடிச்சு வைச்சிருக்காங்க...''

விஜய் சற்றே திடுக்கிட்டான்.

''மை குட்னஸ்... அந்தாளை எதுக்காகப் பிடிச்சாங்க?''

''சந்தேகக் கேஸில் பிடிச்சு வைச்சிருக்காங்க.''

''சந்தேகக் கேஸிலா? எப்போ?''

''நேத்து ராத்திரியே பிடிச்சிட்டாங்க.''

''மூர்த்தி மேல என்ன சந்தேகம்?''

''தீவிரவாதிகள் நடமாட்டம் இருக்கறதா ருமர்ஸ் இருந்திருக்கு... அதனால நேத்திக்கு போலீஸ் ரோந்து அதிகமா இருந்திருக்கு... நம்ம மூர்த்தி பாட்டுக்கு சமய சந்தர்ப்பம் தெரியாம மொபட் பெட்டியில் வீட்டிலிருக்கும் அரிவாள்... கத்தி... எல்லாத்தையும் சாணை பிடிக்கிறதுக்காக எடுத்துட்டுப் போயிருக்கார்... கரெக்ட்டா போலீஸ் செக்போஸ்ட் பக்கத்தில் போறப்ப வண்டி ரிசர்வ் ஆயிடுச்சு... நிறுத்தி வண்டியை சோதனை போட்டிருக்காங்க... ஆயுதங்களைப் பார்த்ததும் பயந்துட்டாங்க... இவர்கிட்டே விசாரிச்சிருக்காங்க... டென்ஷன்ல இவர் சரியா பதில் சொல்லாம உளறிக் கொட்டியிருக்கார்... அவரோட கெட்ட நேரம் அவர் வாங்கிட்டுப் போன ஓசி மொபட்டுக்கு பேப்பர்ஸ் எதுவுமே இல்லை... இவர்கிட்டேயும் லைசென்ஸ் இல்லை... இவரை சந்தேகக் கேஸில் பிடிச்சு உள்ளே தள்ள இவ்வளவு விஷயங்கள் போதாதா?''

''மை குட்னஸ்... நீங்க உடனே போய் அவரை



ரிலீஸ் பண்ண முயற்சி எடுக்கலையா?''

''போலீஸ்காரங்க, நம்ம ஆபீஸிலிருந்து பொறுப்பான ஆள் யாராவது வந்து சைன் பண்ணினால்தான் மூர்த்தியை விடுவேன்னு சொல்லிட்டாங்க ஸார்... பர்சனல் ஆபீஸர் நீங்க போனால்தான் ஏதாவது செய்ய முடியும்.''

''சரி... இந்த விஷயத்தை நான் பார்த்துக்கிறேன்.''

செல்போனை அணைத்துவிட்டு - காரை பூட்டரின் அடித்துத் திருப்பினான் விஜய்.

சொற்ப நிமிடங்களில் கார் அந்த போலீஸ் ஸ்டேஷன் வாசலில் டயர்களைத் தேய்த்தது.

உள்ளே நுழைந்து இன்ஸ்பெக்டரிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு கையைக் குலுக்கினான் விஜய்.

அவர் புன்னகைத்தார்.

''உங்க ஆபீஸ் ஸ்டாப் மூர்த்தி ஜென்யூன் கேஸ்ன்னு நாங்க தெரிஞ்சுகிட்டோம் ஸார்... ஆனா அவர் பண்ணின காரியம் அவ்வளவு சுலபமா அவரை ரிலீஸ் பண்ணும்படியா இல்லை... தவிர அவர் பயத்தில் தாறுமாறா உளறிக் கொட்டிட்டார்... எது நிஜம் எது உளறல்ன்னு புரியாத அளவுக்கு எங்களைக் குழப்பி விட்டுட்டார்... அதனாலதான் உங்களை டிஸ்டர்ப் பண்ணவேண்டியதாயிடுச்சு... ஸாரி ஃபார் த இன்கன்வீனியன்ஸ்.''

விஜய் தலையசைத்தான்.

''இட்ஸ் ஆல் ரைட்... நான் எங்கே கையெழுத்துப் போடணும்?''

சாணி நிற பேப்பர்களில் அச்சடித்த சம்பிரதாய பாரங்கள் சிலவற்றை அவனிடம் நீட்டினார் இன்ஸ்பெக்டர்.

விஜய் அவற்றில் கையெழுத்தைப் பதித்துக் கொண்டிருந்தபோது - உள்ளே இருந்த அறையில்

இருந்து ஒரு சப்-இன்ஸ்பெக்டரின் குரல் காதில் விழுந்தது.

''ஏட்டு... வயலட்டோட போட்டோவை நம்ம ரெய்ட் ஆல்பத்திலிருந்து ரிமூவ் பண்ணிடு... அவ இனிமே தொழிலுக்கு வரப்போறதில்லை... கல்யாணமாகி செட்டில் ஆயிட்டாளாம்... குடியும் குடித்தனமுமா இருக்கிற அவகிட்டே போய் மாமூல் கேட்டு தொந்தரவு பண்றது நியாயமில்லை.''

''நான் ஏற்கெனவே ரிமூவ் பண்ணிட்டேன் ஸார்.''

விஜய் தட்டென்று நிமிர்ந்தான்.

''இன்ஸ்பெக்டர்... உள்ளே அவங்க யாரைப் பத்தி பேசிட்டிருக்காங்க?''

''வயலட்ன்னு ஒரு பிராஸ்டிட்யூட்.''

''அந்த போட்டோவை நான் பார்க்கலாமா?''

''எதுக்காக அந்தப் பொண்ணோட போட்டோவை நீங்க பார்க்கணும்ன்னு நினைக்கறீங்க.''

''காரணத்தை அப்புறமா சொல்றேன்... ப்ளீஸ்.''.

அவனைப் புரியாமல் பார்த்தபடி தலையசைத்தார் இன்ஸ்பெக்டர்.

''கனகராஜ்!''

சப்-இன்ஸ்பெக்டர் கனகராஜ் உள்ளிருந்து வெளிப்பட்டார்.

''எஸ் ஸார்!''

''வயலட்டோட போட்டோவைப் பார்க்கணும்ன்னு ஸார் நினைக்கறார்... காமிச்சுடுங்க.''

அவர் ஏட்டைக் கூப்பிட்டபடி நகர-இன்ஸ்பெக்டர் சொன்னார்;

''பாவம், நல்ல குடும்பத்துப் பொண்ணு... வீட்டுக்குத் தெரியாம இந்தத் தொழிலில் ஈடுபடுது... இப்ப கல்யாணம் ஆயிடுச்சாம்... இனிமேலாவது ஒழுக்கமா இருக்கும்ன்னு நாங்க நம்பறோம்.''



கனகராஜ் திரும்பி வந்தார்.

''ஸாரி ஸார்... ஏட்டு போட்டோவை ரிமூவ் பண்ணிக் கிழிச்சே போட்டுட்டாராம்.''

ஏமாற்றமாய் அவரைப் பார்த்த விஜய் - சின்னத் தயக்கத்துக்குப் பிறகு சொன்னான்;

''இன்ஸ்பெக்டர்... எனக்காக ஒரு சின்ன உதவி செய்ய முடியுமா?''

''என்ன உதவி?''

''அந்த வயலட் சம்பந்தமா நான் ஒரு சின்ன விபரம் தெரிஞ்சிக்க வேண்டியிருக்கு... அந்தப் பொண்ணோட வீட்டைக் காட்ட முடியுமா?''

''ஷ்யூர்...'' என்று தலையசைத்த இன்ஸ்பெக்டர், - கனகராஜைப் பார்த்துக் கேட்டார்.

''ஏட்டுக்கு பாரன்சிக் லெப்ல வேலை இருக்கில்லே?''

''எஸ் ஸார்.''

''அவரை ஸாரோட அனுப்பி வயலட் வீட்டைக் காமிக்கச் சொல்லிடுங்க.''

''தாங்க்ஸ் இன்ஸ்பெக்டர்.''

ஆபீஸ் ஸ்டாப் மூர்த்தியை போலீஸ் கஸ்டடியில் இருந்து விடுவித்து அனுப்பி வைத்துவிட்டு - காரில் போலீஸ் ஏட்டை அமர்த்திக் கொண்டு - வயலட்டின் வீட்டை நோக்கி விரைய ஆரம்பித்தான் விஜய்.

அவன் மனசுக்குள் ஏராளமாய்ப் படபடப்பு.

'போலீஸ் ஏட்டு கவுசிகாவின் வீட்டைத்தான் காண்பிக்கப் போகிறாரா?'

அவர் காட்டிய வழிகளில் மூக்கை நுழைத்துச் சென்ற கார் - நாலைந்து கிலோ மீட்டர்கள்

ஒட்டத்துக்குப் பின் அந்த டெரஸ் வீட்டின் முன்னால் நின்றது.

''இந்த வீடுதான் ஸார்.'' - வீட்டைக் காட்டிய எட்டின் கண்கள் திகைப்பில் சுருங்கின.

அங்கே சொற்பமாய்க் கூட்டம் கூடியிருந்தது.

அந்தக் கும்பலில் லேசான கூச்சலும், குழப்பமும் நிலவியது.

''டாக்டரைக் கூப்பிடுங்கப்பா...''

''போலீசுக்கு போன் பண்ணு... இது போலீஸ் கேஸ்.'' என்று யாரோ கத்த -

எட்டைப் பார்த்துவிட்டு -

''இதோ போலீசே வந்துடுச்சே.'' என்று இன்னொரு குரல் கூறியது. எட்டு வேகமாய் அங்கே சென்றார்.

''என்னாச்சப்பா... என்ன இங்கே கும்பல்?''

''வயலட் மருந்தைக் குடிச்சிட்டா ஸார்.''

எட்டு திடுக்கிட்டு கும்பலை விலக்கிக் கொண்டு உள்ளே செல்ல - விஜய் திகைப்போடு அவர் பின்னே சென்றான்.

வீட்டுக்குள் நீலம் பாரித்த உடம்போடு அந்தப் பெண் துடித்துக் கொண்டிருந்தாள்.

''இவதான் வயலட்டா?''

''ஆமா ஸார்.''

எட்டு தலையசைத்துக் கொண்டே வயலட்டை நெருங்கினார்.

''வயலட்... என்னாச்சு... ஏன் இப்படி செஞ்சே? பர்ஸ்ட் எய்ட் கொடுத்தாங்களா?''

அவள் வேதனையிலும் புன்னகைத்தாள்.

''இது நானா தேடிக்கிட்ட நல்ல முடிவு... பர்ஸ்ட் எய்ட் பண்ணி பிரயோஜனமில்லை... எய்ட்சுக்கு முன்னால பர்ஸ்ட் எய்ட் என்ன பண்ண முடியும்?''



''நீ கல்யாணம் பண்ணிகிட்டே... தொழிலை விட்டு ஒதுங்கிட்டேன்னு சொன்னாங்களே?''

''உடம்பு ஓய்ஞ்சு போச்சு... இத்தனை நாளா கல்யாணம் பண்ணிக்காமலே அர்ஜுனோட சேர்ந்து வாழ்ந்தேன்... 'நீ இனி தொழில் பார்க்க வேண்டாம்... வேற பொண்ணுங்களை இதுல சேர்த்துவிடு... அதிலும் பணம் பார்க்கலாம்'ன்னு சொன்னான்... நான் மறுத்தாலும் அவன் விடலை... அர்ஜுன் ஒரு பிடிவாதக்காரன்... மிரட்டியாவது காரியத்தை சாதிச்சுக்குவான். அவனால நான் பட்ட கஷ்டமெல்லாம் போதும். இனிமேலும் இந்த கஷ்டத்தில் உழன்றுகிட்டு இருக்க எனக்கு விருப்பம் இல்லை. அதான் பாய்ஸன் எடுத்துகிட்டேன்.''

விஜய் அவசரக் குரலில் குறுக்கிட்டுக் கேட்டான்.

''வயலட்...! உனக்கு கவுசிகாங்கிற பேர்ல எந்தப் பொண்ணையாவது தெரியுமா?''

வயலட்டின் பார்வை விஜய்யின் மீது சில விநாடிகள் நிலைத்தது. அவளுடைய உதடுகள் அசைந்தது.

''தெரியும்...! அர்ஜுனோட பேச்சைக் கேட்டு - பஸ் ஸ்டாப்ல பஸ்ஸுக்காக வெயிட் பண்ற அழகான பெண்கள்கிட்டே பேச்சுக் கொடுத்து அவங்களை என்னோட பிரண்ட்ஸ்களா மாத்தி மெல்ல மெல்ல தொழிலுக்கு இழுப்பேன். அதுல கவுசிகாங்கிற பொண்ணு எனக்கு பழக்கமானாள். நான் ஒரு நல்ல கம்பெனியில் வேலைக்கு இருக்கிறதா நினைச்சு என்கூட அந்த கவுசிகா பழகிட்டிருந்தா. அவளுக்கே தெரியாமே அர்ஜுன் அவளை பஸ் ஸ்டாப்பிலேயும் பார்க்கிலேயும் போட்டோ எடுத்து வைச்சுகிட்டான்.''

விஜய் பதட்டக் குரலில் கேட்டான்.

"கவுசிகாவை அந்த மோசமான தொழிலுக்கு இழுத்து விட்டுட்டாங்களா?"

"இல்லை...! கவுசிகாவை அந்த தொழிலுக்கு இழுத்துவிட திட்டம் போட்டோம். ஒருநாள் நான் கவுசிகாகிட்டே மேட்னி ஷோ சினிமாவுக்கு போலாம்ன்னு சொன்னேன். அவள் மொதல்ல மறுத்தா. அப்புறம் என்னோட வற்புறுத்தலுக்காக ஒத்துக்கிட்டா. வேணும்ன்னே ஹவுஸ்ஃபுல்லா இருக்கிற ஒரு தியேட்டருக்கு அவளைக் கூட்டிட்டுப் போனேன். டிக்கெட் கிடைக்கலைன்னதும் அவளுக்கு ஏமாற்றமா இருந்தது. 'பக்கத்துலதான் என் ஃப்ரண்ட் வீடு. அவளைப் பார்த்துட்டு வரலாம் வா'ன்னு கவுசிகாவை கூட்டிகிட்டு போனேன். இது எல்லாமே அர்ஜுன் போட்டுக் கொடுத்த திட்டம் தான். ஃப்ரண்ட் வீடுன்னு சொல்லி கவுசிகாவை ஒரு மோசமான வீட்டுக்குக் கூட்டிட்டுப் போனதும் கவுசிகா உஷாராயிட்டா. நான் கொடுத்த கூல்டிரிங்க்சையும் தூக்கி வீசிட்டு கண்ணிமைக்கிற நேரத்துக்குள்ள தப்பிச்சு போயிட்டா. இதனால அர்ஜுனுக்கு கவுசிகா மேல ஏகப்பட்ட கோபம். அந்தக் கோபத்துல அவளைப் பழிவாங்க அவளோட போட்டோவை வயலட்ங்கிற என்னோட பேர்ல ஆல்பத்துல இணைச்சுட்டான். 'என்னைக்கு இருந்தாலும் அவளை ஒரு நாள் இந்தத் தொழிலுக்குக் கொண்டுவந்தே தீருவேன்'னு சபதம் போட்டான். அதுக்கான வேலைகளைத் திரை மறைவிலிருந்து பண்ணிட்டிருந்தான். எனக்கு மனசு பொறுக்கலை. நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணான என்னை அர்ஜுன் சீரழிச்சமாதிரி அவன் வேற யாரையும் பாழ்பண்ணிடக் கூடாதுன்னுதான் நான் ஒரு முடிவுக்கு வந்தேன்."

சொன்ன வயலட்டின் பார்வை இப்போது



போலீஸ் லட்டு மேல் திரும்பியது.

"ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி நான் அர்ஜுன் வீட்டுக்குப் போனேன். அவன் வழக்கமா சாப்பிடற விஸ்கியில் விஷத்தைக் கலந்து சாகடிச்சேன். அவனை முடிச்ச கையோடு வீட்டுக்கு வந்தேன். என்னோட முடிவை நானே தேடிக்கிட்டேன். அர்ஜுன் இல்லாத இந்த உலகத்துல கவுசிகா மாதிரியான குடும்பப் பெண்கள் இனிமேல் பயமே இல்லாமே வாழலாம்."

வயலட் சொல்லிக்கொண்டிருக்கும் போதே - யாரோ குரல் கொடுத்தார்கள்.

"டாக்டர் வந்துட்டார்."

டாக்டர் வேகவேகமாய் மெடிக்கல் கிட்டோடு வந்து அவளருகே குனிந்தார்.

வயலட் டாக்டருக்கு வேலை வைக்கவில்லை.

தலை சின்னதாய் வெட்டிக்கொள்ள கண்கள் நிலைத்து மூச்சு மெதுவாய் அடங்க ஆரம்பித்தது.

## 9

**மீ**ன்தொட்டிக்குள் சஸ்ட்மென் நிறத்தில் மீன்கள் நீந்திக் கொண்டிருக்க - கவுசிகா பக்கத்து நாற்காலியில் உட்கார்ந்து அதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கவுசிகாவின் அப்பா மெல்ல அவளுக்குப் பக்கத்தில் வந்து நின்றார்.

"அம்மா..."

இவள் நிமிர்ந்தாள்.

"என்னப்பா?"

"நான் வேணும்ன்னா மாப்பிள்ளைகிட்ட போய்

பேசிப் பார்க்கட்டுமா?''

''வேண்டாம்ப்பா...! அவர் உங்களைமரியாதைக் குறைவா பேசிட்டா என்னால அதைத் தாங்கிக்க முடியாது.''

''நாம பேசாம இருந்துட்டா அவர் சொன்ன குற்றச்சாட்டை எல்லாம் நாம ஒத்துக்கிட்டதாகத்தானே அர்த்தம்?''

''நான் தப்பு பண்ணாதவன்னு யாருக்கும் வலுக்கட்டாயமாக நிருபிக்க வேண்டியதில்லைப்பா.''

அவள் சொன்ன விநாடி -

வாசலில் வேகமாய் ஒரு கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

விஜய் காரைவிட்டு இறங்கி தயங்கித் தயங்கி வந்து கொண்டிருந்தான். அவனுக்குப் பின்னால் பரமேஷ்.

''அம்மா! மாப்பிள்ளை வர்றார்.''

கவுசிகா அவனையே பார்த்துக்கொண்டு மவுனமாய் எழுந்து நின்றாள்.

கவுசிகாவின் அப்பா தயக்கமாய் வரவேற்றார்.

''வாங்க மாப்பிள்ளை.''

''மாமா! உங்ககிட்டேயும் கவுசிகாகிட்டேயும் மன்னிப்பு கேட்கிறதுக்காகத்தான் இப்போ வந்திருக்கேன். எதையும் தீர்க்கமா யோசிச்சு பார்க்காமே ஆத்திரத்துல அறிவு கெட்டதனமா நடந்து கிட்டேன். நான் பேசிய வார்த்தைகளை இப்போ நினைச்சுப் பார்த்தாலும் எனக்கே அருவெறுப்பா இருக்கு.''

விஜய் குரல் தழுதழுக்கப் பேசிக்கொண்டிருக்கும்போதே பரமேஷ் குறுக்கிட்டான்.



''நடந்த எல்லாக் குழப்பத்துக்கும் நான்தான் காரணம். கவுசிகா அப்படிப்பட்ட மோசமான பொண்ணா இருக்கமாட்டான்னு விஜய் அடிச்சு சொன்னபோது நான்தான் அவனை நம்ப வைக்கிறதுக்காக எனக்குக் கிடைச்ச அரைகுறை ஆதாரங்களை அவன்கிட்ட காட்டி நம்பவைச்சேன். கவுசிகாவோட போட்டோ அது மாதிரியான மோசமான ஆல்பத்தில் இருந்ததால நானும் அதை நம்பவேண்டியதாயிடுச்சு... இந்த விஷயத்துல விஜய்யைத் தூண்டிவிட்ட பாவத்துக்காக நீங்க எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் சரியே.''

விஜய் கவுசிகாவிடம் நிமிர்ந்தான்.

''உன்கிட்ட ஒரு துஷ்ட மிருகம் மாதிரி நடந்துகிட்டேன். அது உன்னோட மனசுக்குள்ளே ஆழமான காயமா பதிஞ்சு இருக்கலாம். அந்தக் காயத்தோட வலி அவ்வளவு சுலபத்துல தீர்ந்துடாது. என்னை நீ மன்னிக்கிறதும் மன்னிக்காததும் உன்னோட விருப்பம்.''

கவுசிகா கோபமாய் நிமிர்ந்தாள்.

''ஸாரி மிஸ்டர் விஜய்! கடந்த பத்து நாளா கண்டதே காட்சி கொண்டதே கோலம்ன்னு ஆட்டம் போட்டீங்க... ஒரு பெண்ணுக்கு உயிரைவிட மேலானது கற்பு. அதை எவ்வளவு தூரம் கொச்சைப்படுத்திப் பேசணுமோ அந்த அளவுக்குப் பேசினீங்க. இதயத்தைக் கழட்டி வைச்சுட்டு ஒரு அரக்கன் மாதிரி நடந்துகிட்டீங்க. இவ்வளவையும் பண்ணிட்டு இப்போ உண்மை தெரிஞ்ச பின்னாடி வந்து மன்னிப்புக் கேட்கறீங்க. நீங்க மன்னிப்புக் கேட்ட உடனேயே நான் மன்னிக்கிறதுக்கு நான் ஒண்ணும் மகாத்மா கிடையாது.''

''கவுசிகா.''

''நீங்க இப்ப தப்பு வந்து கூப்பிடறதுக்கும்

வேண்டாதப்ப தள்ளி வைக்கிறதுக்கும் நான் ஒண்ணும் பொம்மை கிடையாது. எனக்கும் ரோஷம் மானம் இருக்கு... நீங்க கொட்டின வார்த்தைகளை உங்களாலேயே அள்ள முடியாது. என்னா அவ்வளவு சூடு.''

பரமேஷ் குறுக்கிட்டான்.

''சிஸ்டர்... நான் என்ன சொல்ல வர்றேன்னா...?''

பளீரென்று அவன் பக்கம் திரும்பினாள் கவுசிகா.

''நீ பேசாதே! இங்க இடத்துல நிக்கக்கூட உனக்கு அருகதை கிடையாது. 'எவனோ ஒருத்தன் ஹோட்டல்ல காட்டின ஆல்பத்தில் என்னோட போட்டோ இருந்துட்டா உடனே நான் மோசமான பொண்ணுங்கிற முடிவுக்கு வந்துடறதா? உன்னோட தங்கச்சி போட்டோ அதுமாதிரியான ஆல்பத்தில் இருந்ததுன்னு வைப்பி. உடனே நீ அவளுக்கு விபச்சாரி பட்டம் கட்டிடுவியா? உண்மை என்னான்னு தெரிஞ்சுக்காமே இப்படித்தான் டமாரம் அடிப்பியா?''

''ஸாரி சிஸ்டர்.''

''என்ன பெரிய ஸாரி! இப்படி வாயைத் திறந்து சின்னதா ஸாரி சொல்லிட்டா எல்லாமே சரியாப் போயிடுமா...? ஒரு பெண்ணோட மனசைப் புரிஞ்சுக்கிறவன்தான் ஆம்பளை. புரிஞ்சுக்காதவன் மனுஷனே கிடையாது.''

விஜய் கவுசிகாவின் அப்பாவிடம் திரும்பினான். ''மாமா...! தப்பை உணர்ந்து வந்திருக்கேன். உங்க பொண்ணு என்னை மன்னிக்கக் கூடாதா?''

''அப்பா... நீங்க இந்த விஷயத்துல சிபாரிசுக்கு வராதீங்க.''

''என்ன பொண்ணும்மா நீ...! தப்பு பண்றதும் அதைத் திருத்திக்கிறதும் மனுஷங்களோட குணம். மன்னிப்பு கேட்கிறவங்ககிட்ட இப்படி கடுமையா



நடந்துக்கக்கூடாது... போனதெல்லாம் போகட்டும். இனிமே நீ மாப்பிள்ளையோடு சந்தோஷமா வாழணும்.''

''நான் அவரை மன்னிக்கத் தயாராயில்லை.''

''கவுசிகா.''

''அப்பா... இது புருஷன் பெண்டாட்டியான எங்களுக்குள்ளே இருக்கிற பிரச்னை. இதுல தலையிட உங்களுக்கு உரிமை கிடையாது.''

அவர் வாயடைத்துப் போய் நிற்க -

கவுசிகா விஜய்யை ஏறிட்டாள்.

''இனியும் இங்கே நின்னுட்டிருக்கிறதுல எந்தப் பிரயோஜனமும் இல்லை. உங்க ஃப்ரெண்டைக் கூப்பிட்டுகிட்டு கிளம்புங்கஸார்.''

விஜய் கண்களில் நீர் கோர்த்துக் கொள்ள தலை குனிந்து மெதுவாய் வாசலை நோக்கி நடந்தான்.

பத்தடி எடுத்து வைத்திருப்பான்.

முதுகில் கவுசிகாவின் குரல் கேட்டது.

''நில்லுங்க.''

விஜய் நின்று திரும்பி கவுசிகாவைப் பார்க்க, அவளுடைய முகத்தில் ஒரு பெரிய புன்னகை - ஊட்டி ரோஜா சைஸில் மலர்ந்திருந்தது.

சிரித்தாள்.

''என்ன... பயந்துட்டீங்களா? பத்து நாளா என்னைப் பாடாய் படுத்தினீங்களே... அதுக்கான பழிவாங்கும் படலம்தான் இது. இப்படியெல்லாம் பேசினா உங்க ரியாக்ஷன் எப்படி இருக்கும்னு தெரிஞ்சுக்கிறதுக்காகத்தான் அப்படிப் பேசினேன். உங்களை மன்னிக்க நான் யார்? 'போய் கார்ல ஏறுடி கழுதை'ன்னு சொன்னா நான் போய் கார்ல ஏறிக்கமாட்டேனா என்ன?''

விஜய்யின் கண்களில் இப்போது பனிரென்று

ஆனந்தக் கண்ணீர் மின்னியது.

விஜய், கவுசிகாவின் அப்பா இருப்பதையும் பொருட்படுத்தாமல் அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

''கவுசிகா.''

''ம்...''

''நம்ம வீட்டுக்கு போலாமா?''

''ம்...''

''போய்கார்ல ஏறுடி கழுதை.''

**முற்றும்.**



# வாசகர் கடிதம்

வாசகர்களின் கேள்விகளுக்கு சரியான பதில் தருவதற்காக ஆர்.கே.சார் மிகுந்த அக்கறை எடுத்து வருகிறார் என்பது 'விளக்கம் ப்ளீஸ் விவேக்' பகுதியைப் படிக்கும் போது நன்றாக விளங்குகிறது. ஆர்.கே. அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி.

**- எஸ்.மதிவாணன், நாகப்பட்டினம்.**

வாசகர்களின் அறிவியல் ரீதியான சந்தேகங்களுக்கு, ஆர்.கே. அவர்களின் அறிவார்ந்த பதில்கள் மிகுந்த பயன் தருகின்றன. இவ்வளவு எளிமையானதும் தெளிவானதுமான விளக்கங்களை க்ரைம் நாவலில் வரும் 'விளக்கம் ப்ளீஸ் விவேக்' பகுதியில் மட்டும்தான் படிக்க முடியும். பாராட்டுக்கள்.

**- வி.நவநீதம், சேலம்.**

க்ரைம் ஸ்பெஷல் 147-ல் வந்த இரண்டு நாவல்களுமே விறுவிறுப்பாய் இருந்தது.

'போகப் போகத் தெரியும்' - படிக்கப் படிக்க திகில்தான்.

'ஊதா நிற தேவதை'யும் - இரத்தத்தை உறைய வைத்தான்.

விருந்தைத் தயாரித்த ஆர்.கே.வுக்கும், விருந்தளித்த ஜீவாவுக்கும் எமது பாராட்டுகளும் நன்றிகளும்.

**- எஸ்.கேசவமூர்த்தி, இரும்புலியூர்.**

தாழையூர் கிராமம் ஞானம்மன் கோயில் புதை பொருள் மர்மத்தையும் - கொலையாளியையும் கண்டு பிடித்த போலீஸ் அதிகாரி விக்ரமையும், அவருக்கு உதவியாய் இருந்த ராஜேஸ்வரியையும் பாராட்டுகிறோம். இவ்வளவு அருமையான நாவலைப் படைத்த ஆர்.கே.வுக்கும் எங்கள் பாராட்டுக்கள்.

**- வி.முருகேஷ், வாணியம்பாடி.**

கோயில் குருக்களே கொலைக்கு உடந்தையாய் இருந்திருக்கிறார் என்பதை யூகித்துப் பார்க்கவே முடியவில்லை. நல்லவேளை... தந்தையென்றும் பாராமல் நியாயமாக நடந்து கொண்ட இராஜேஸ்வரி, போலீஸ் அதிகாரி விக்ரமுடன் இனிய வாழ்க்கை அமைத்துக் கொள்ள வாழ்த்துகிறோம்.

**- எம்.எஸ்.யூசுப், திருவல்லிக்கேணி.**